www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24

දිනමුරසු වාරමලර්

ஜுன்.05-11,1994

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 53



## குடாநாட்டு முற்றுகைத் திட்டம்!



## தேர்தலுக்கு முன் வெற்றி சாத்தியமா?

கொளுந்து விட்டெரியும் இனப்பிரச்னையில் குளிர் காயும் தென்னிலங்கை

## அரசியல்வாதிகள்

அரசியல் அலசல்

முரசுக்கு வயசு 1

ஆண்டு மலர்

அதிக பக்கங்கள்



நள்ளிரவில் எழுப்பிவிடும் கருவி!

இலக்கிய நயம்

முட்டையின் விலை 2 இலட்சம்

அசத்தலான அதிசயத் தகவல்கள்

# ஆன்மீகம்

## பகைவரை நேசித்தல்

அன்றாடம் நம் உதடுகள் எத்தனை பேரை சபிக்கின்றன! எம் இதயங்கள் எத்தனை பேருக்கு கேடு நினைக்கின்றன! எம்மை நிந்திக்கும், எமக்கன்பான வர்களை துன்பப்படுத்தும், சமுதாயத்துக்கு தீங்கிழைக்கும் அயோக்கியர்களை சபித்தல், பழிக்குப் பழி வாங்கித் தண்டித்தல் பிழையாகுமா?


ஆண்டவர் இயேசு கிறிஸ்து போதித்ததாவது, "நான் உங்களுக்கு சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிப்பவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களை பகைப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கின்றவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" **(மத்தேயு 5:44)**

நம்மால் செய்யக்கூடிய காரியமா?

நமது அண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையிலே செய்த மாபெரும் அன்பின் வெளிப்பாட்டை சற்று யோசித்துப் பார்ப்போம். அவரை சொல்லொணா சித்திரவதைக்குட்படுத்தியவர்களை மன்னிக்கும்படி பிதாவை வேண்டிக்கொண்டார். அற்பரும், ஈனரும் இறைவனின் ஒரு துளி அன்புக்கேனும் பாத்திரமற்ற பாவிகளாகிய எம்மை மீட்டு, மகா பரிசுத்தமும், வல்லமையும் பொருந்திய இறைவனண்டை அழைத்து செல்லும் முகமாக, உலக மாந்தர் அனைவரது பாவங்களையும், மாசற்ற தன்மீது சுமந்தார் அல்லவா?

நாங்கள், மக்களுக்கு நன்மை செய்யவும், நாம் உருசித்த இறைவனின் அன்பையும் மன்னிப்பையும் பிறருக்கு வெளிக்காட்டவும் அழைக்கப்பட்டுள்ளோமேயன்றி பிறரை நியாயம் தீர்க்கவோ, பிறருக்கு கெடுதல் நினைக்கவோ தீங்கிழைக்கவோ அல்ல. "பழி வாங்குதல் எனக்குரியது. நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் கூறுகிறார்..." **(ரோமர் 12:19)**

கடவுள் தீமையை வெறுக்கிறார். ஆனால் தீயவர்களை நேசிக்கிறார். அவர்கள் தன்னிடம் வந்தால் மன்னித்து தன் மந்தையோடு சேர்த்துக்கொள்ள ஆசைப்படுகிறார். "தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொள்ளுங்கள்." **(ரோமர் 12:9)** நாம் தீமையை வெறுக்க வேண்டும், தீங்கிழைப்போரை அல்ல. தீமையை எதிர்த்துப் போராட வேண்டும். ஆனால் மனிதரை மனிதராக மதிக்கவும் நேசிக்கவும் கூடிய மனப் பக்குவத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். "தீமையை நன்மையினாலே வெல்லு." (ரோமர் 12:21)



எல்லோரும் இறைவன் படைத்த மக்கள் என்பதையும், நாமும் பாவம் செய்து தேவ கிருபையினால் சுத்தமாக்கப்பட்டவர்கள் என்பதையும் எப்பொழுதும் நினைவில் கொள்ளல் வேண்டும்.

செ.கீதாஞ்சலி.

## பெருமானாரின் மணிக்திர்கள்

- கற்றவர்களின் கல்வி ஞானம், தலைவர்களின் நீதி நேர்மை, செல்வந்தர்களின் தான தருமம், ஏழைகளின் துவாப் பிரார்த்தனை இந்நான்கின் ஒன்றின் பலம் குறைந்தால் உலகம் ஆட்டம் காணும். நான்குமே பலம் குன்றிவிட்டால் உலகம் அழிவின் விழிம்பை அடைந்துவிடும்.
- யார் மணம முடித்தபின் தன் மனைவியிடம் அடைக்கலமாகி, தம் பெற்றோரைக் கவனிக்காது, அவர்களை ஏறிட்டும் பார்க்காமல் இருக்கின்றானோ அவன்மீது இறைவனின் சாபமும் இறைத்தூதரின் சாபமும் உண்டாவதாக.
- தாய் தந்தையின் முகத்தை பாசத்தோடும், கனிவோடும், பார்ப்பவனுக்கு ஒரு ஹஜ்ஜை நிறைவேற்றிய பலன் கிடைக்கும். இவ்வாறு எத்தனை தடவை பார்த்தாலும் அத்தனை ஹஜ்ஜை நிறைவேற்றிய பலன் கிடைக்கும்.
- ஒரு முஸ்லிம் சகோதரனுடைய தவறைக் கண்டு சிரிக்கும் ஒரு முஸ்லிம் தான் அந்த தவறை செய்யாமல் மரணிப்பதில்லை.
- இறைவன் ஒரு மனிதனை அழித்துவிட நாடுவானேயானால் அவனிடம் இருந்து வெட்கத்தைப் பறித்து விடுவான். வெட்கத்தை இழந்த மனிதன் நேர்மையற்ற மோசடிக் காரனாகி விடுகிறான்.
- எவன், ஒருவனின் மானத்தை வெளிப் படுத்துகிறானோ அவனுடைய மானத்தை அல்லாஹ் வெளிப்படுத்துகிறான். எவன் ஒருவனைக் காட்டிக்கொடுக்கிறானோ அவனை இறைவன் காட்டிக்கொடுக்கிறான்.
- அவமானத்தை காக்கும் தன்மை எவனிடத்தில் இல்லையோ, அவனிடத்தில் ஈமான் இல்லை. எவனிடத்தில் வாக்குறுதியைக் காப்பாற்றும் நற்பண்பு இல்லையோ அவனிடத்தில் மார்க்கமென்பதேயில்லை.
- வீண் தர்க்கம் செய்யும் கெட்ட பழக்கத்தை விட்டு விடுங்கள். ஏனெனில் இணை வைப்பதற்குப் பின் இறைவன் தடை செய்த முதல் செயல் வீண் தாக்கங்களில் ஈடுபடுவதே.

ஏ.எச்.ஏ.மஜீட்-கடவத்த மடு.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஆதவனைக் கண்ட கமல மலர்போல
முதலாண்டு வந்து நிறைய
உங்கள் முரசம்
மகிழ்ச்சியோடு முகம் மலர்த்துகிறது.

ஒரு ஆண்டு என்பது
நெடுந்தூர பயணத்தில்
சிறு தூரக் கடத்தல் மட்டுமே.
எனினும்-
வாசகர் பலம் என்னும் வலிய துணையுடன்
இதுவரை முரசு
பதித்துள்ள தடங்கள் ஆழமானவை.

மறந்தால் அல்லவா நினைக்க வேண்டும்
என்று சொல்வது-
முரசுக்கும் அதன் வாசகர் உறவுக்கும்
எப்போதும் பொருந்தும்- நிச்சயமாக!

வாசகர் உள்ளத்து நேசக் கரங்கள்
வருடிக்கொடுக்க வளர்ந்தது முரசு.
தவறான பக்கம் சார்ந்து நெறி தவறாமல்
நியாயம் எதுவோ அதனை
எடுத்துச் சொன்னது முரசு.
அதனால் வந்த வெறுப்புக்களை
எதிர்த்து நிற்கவும்-
வாசகர் பலம்தான்-
போர்க்கள வாளாகக் கூடவே இருந்தது.

முரசின் ஆசிரியர் யார்
என்று ஒரு கேள்வி வந்தது.

முரசின் வளர்ச்சியும் எழுச்சியும்
கூட்டு முயற்சியே தவிர

தனி மனித சாதனையல்ல.

தனிமரம் தோப்பாவதில்லை.
தினமுரசுக்கும் அது பொருந்தும்.

வாசகர் பலமும்-முரசின்
உருவாக்கத்தில்
உள்ளன்போடு உறுதுணையான
ஊழியர் பலமும்
நெறிப்படுத்தும் நிர்வாகச் சிறப்பும்
ஆக்கங்கள் தந்து
ஊக்கமாய் ஒத்துழைக்கும்
எழுத்தாளர் அன்பும்
செய்திகள் தரும் நிருபர்கள் உறவும்
முரசின் வெற்றிக்கு
முக்கிய உந்துதல்கள்!

இனிய நட்பாய் மலர்ந்து
இன்று-
தட்டிக்கொடுத்து உயர்த்தும் கரங்களாய்
உறுதுணை நிற்கும் நட்பின் பலமும்
முரசின் வெற்றிக்கான
பாதையை செப்பனிட காரணமாகின.

கூட்டு முயற்சிக்கு
ஒருவர் மட்டுமே உரிமை கோரலாய்
இல்லாமல்-எனினும்
பெயர் வெளியிடாமைக்கு
பலவீனம் என்று எவரும்
அர்த்தம் கொள்ளக்கூடாது
என்பதற்காக
ஆசிரியர் பெயர்-
ஆண்டொன்று கடந்து அறிவிக்கப்படுகிறது.

ஆண்டொன்று நிறைந்ததையிட்டு
முரசின்-சின்னதான பரிசாக-இணைப்பாக
பக்கங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளன.
இப்போது முடிந்தது இதுதான், எனினும்
இனித் தொடரும் வளர்ச்சிப் பாதையில்
மாற்றங்கள் பல முரசில் தெரியும்.

கடந்துவந்த பாதையை நினைவில் கொண்டு
கரம் நீட்டி துணை நின்றவர்களை
நெஞ்சத்தில் நினைத்துக்கொண்டு
கடக்க வேண்டிய தூரங்களை
மறந்துவிடாமல்
முரசு தொடர்ந்து முன்செல்லும்.

மகிழ்ச்சியான இந்த நேரத்தில்
அன்புள்ளங்கள் அனைவரையும்
இதய நன்றியோடும்,
நேசத்தோடு தழுவிக்கொண்டு
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்,
—நடராஜா அற்புதராஜா—
ஆசிரியர்.

தினமுரசு போன்: 820265

# கவிதைப்போட்டி இல-50

களம்தேடி வந்து விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**ஒத்திகை**

அதிகாரம் இன்றேல்
ஆளுமை ஏது?
எதிர்கால ஆட்சிக்கு
இன்றே ஓர் ஒத்திகை!

எப்.சி. லேகா
கொழும்பு-13.

### வியக்கப்பட்டவை

சேச்சில் சுருட்டறியும்
உலகப் பெரும் போரை
சேயின் சுருட்டறியுமா?
எம் வடபுல போரை.

அ.பாக்கியநாதன்
ஏறாவூர்.

**மழலையின் கோலம்**
மனிதன் சிந்திக்க
மறுக்கும் காலம்!
மழலை சிந்திக்க
முயலும் கோலம்!

த.ஜெயப்பிரபா
தம்பிலுவில்-02.

**ஒத்திகை**
போரினால் புகைந்திடும்
நாட்டினிலே!
தானே
புகைந்திட ஒத்திகை
இள மொட்டினிலே!

எஸ்.சபாரெத்தினம்
காரைதீவு-01.

**நாசம்**
அறியாமல்
தவறென்றால்-உன்
ஆயுள் நாசம்!
அறிந்திருந்தும்
தவறுகளால்-இந்த
நாடே நாசம்!


ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

*பாதை மாறினால்...?*
போதை புரியாத சிறுவன் இவன்
தெற்கே இருந்ததனால் வாயில் சுருட்டு.
பாதை தெரியாது வடக்கே போயிருந்தால்
பரிசாக கிடைத்திருக்கும் கையில் துவக்கு.

எஸ்.கீதா-வரக்காப்பொல.



# கவிதைப் போட்டி இல-53



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

*அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 11.06.1994.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 53
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**யார்?**
சின்னக் கனவுகளை
சிறைப்படுத்தும் பருவத்தில்
சுட்டி விரல்களிலே
சாவின் திறவுகோலைக்
கட்டி விட்டவர் யார்?

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

"பிஞ்சு வயதை
மிஞ்சும் ஒத்திகை!
புகை பிடிக்கவா?
புகைப்படம் பிடிக்கவா?"

பா.மஜுரன்
தெமட்டக்கொட.

**நாகரிக அரங்கேற்றம்!**
நாகரிக முன்னேற்றம்
அது,
நச்சுப் புகையில் அரங்கேற்றம்!
இவன் புகைக்கிறானா?
இல்லை;
இன்னுயிர் பகைக்கிறானா?

ஜி.ஸ்ரீநேசன்
மட்.இந்துக்கல்லூரி.

**கலாசார சீரழிவு**
கலாச்சார சீரழிவு கண்களில் தெரிகிறது.
கனி மழலை வாயில் சுருட்டு புகைகிறது.

செ.மணிமேகலை-பூண்டுலோயா.

**அதிகாரம்**
நாற்காலி
கிடைத்துவிட்டது-இனி
நல்லது கெட்டது
யாருக்குத் தேவை
எதற்கும் அதிகாரம்
எல்லாவற்றிற்கும்
அங்கீகாரம்.

கமலினி-பாண்டிருப்பு.

**அறிவுரை!**
சுருட்டில் மெய்மறந்து
சுருட்டுபவரிடம் ஏமாந்திடாதே!

ஜீவி-திருமலை.

**விழித்திடு(ரு)**
விளையாடும் பருவத்தில்
விபரீத எண்ணம்-வாழ்க்கை
வினையாகி போய்விடும்
விழித்திரு மகனே.

ஜெரி ஜேசுதாசன்
திருமலை.

**ஆசை**
சின்ன சின்ன ஆசை
சிகரட் பிடிக்க ஆசை
முத்து முத்து ஆசை
வீட்டில் மொத்துபட ஆசை

ஏ.யோகேஸ்வரி ஆறுமுகம்
பசறை.

# வாசகர் சோலை

**பார்வையில் வித்தியாசம்**

அன்பின் முரசே,

வயதைவிட வளர்ந்துவிட்டாய்! உனது எல்லா ஆக்கங்களும் சற்று வித்தியாசமான பார்வையில் உள்ளன. பாராட்டுக்கள்.

எஸ்.கமலேந்திரன்-வெலிசறை.

□□

**இராஜதந்திரிக்கு ஒரு சொல்!**

'என் உள்ளம் கொள்ளை கொண்ட முரசே, உன் படைப்புகள் யாவும் அபாரம். இவைகளில் என் உள்ளத்தை அதிகம் பறிகொடுத்தது உன் இராஜதந்திரி அலசும் அரசியல் ஆக்கதிற்கே.

தாஜ் ரஹுமான்-புத்தளம்.

□□

**அரிதும்- இனிதும்**

குறுகியகால எல்லைக்குள் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற முரசே, "அரிதினும் அரிது உன்போன்ற பத்திரிகையை உருவாக்குவது அரிது. அதனிலும் அரிது உன்னில் பொதிந்துள்ளது போன்ற பல்சுவை அம்சங்களையும், உலகாய அற்புத விடயங்களையும் உருவாக்குவது அரிது."

• உனது நீண்ட ஆயுளுக்கு எனது இனிய வாழ்த்துக்கள்.

எம்.எஸ்.ஜாபீர்.ஹபீப்புள்ளாஹ்-கிண்ணியா-02.

□□

**நில்! கவனி!! முன்னேறு!!!**

தினமுரசே! உன் இதழ்களில் இப்படியொரு இனிப்பா? நான் சுவைக்கவில்லை இதற்கு முன் எங்கும், எதிலும். உன்னில் இடம் பிடித்துக்கொண்ட நில்! கவனி!! முன்னேறு!!! தொடர் அம்சம் இதயத்திலிருந்து அகலமறுக்கின்றது. அது மட்டுமா? ரசிகனின் 'கொலை விழும் நேரம்' இலக்கிய நயம், போன்றவற்றை ரசிக்கமாமல் இருக்கவே முடியவில்லை. உன்னை எப்படிப் பாராட்டுவதென்றே புரியவில்லை எந்தனுக்கு.

செல்வி.நிஸ்வா ஸலாம்-தர்கா நகர்.



அன்பின் முரசே,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறந்தவையே.
உன்னைக் காணாமல் நான் ஏது?
உன்னை எண்ணாத நாள் ஏது?

உன். சேவை மேலும் மேலும் வளர என் பிரார்த்தனைகள்.

ப.ரோசி-மேலை ஸ்பிரிங்-வெளி

□□

**அன்றொரு முத்தம்**

வாரத்தில் ஒருநாள் வருகை தரும் உன்னை வாஞ்சையுடன் வாரி அணைத்து நான் முத்தமிடும்நாள் அதுதான் உன் ஜனனநாள் வியாழன்.

ரமணி அன்பழகன்-கொழும்பு-12.

□□

**ரகமும் தரமும்**

தரணிதனின் தன்னிகரில்லா தனியிடத்தை பிடித்துக்கொண்ட தனி முரசே உன் உயர்ச்சியின் படியில் நிழல் காய்பவரில் நானும் ஒருவன். உன் அம்சங்கள் அனைத்தும் தரம் இதில் ரசிகனின் நயம் ஒரு தனி ரகம். உன் பணி மென்மேலும் தொடர என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இரா.பத்மசீலன்-செங்கலடி.

□□

**இனித்திடும் முரசே!**

எங்கிருந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன். நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் வெகு சிறப்பானவை.

எஸ்.ரஞ்சனி-கண்டி.

□□

எங்கள் இனிய முரசாருக்கு,

ருசிக்கும் அம்சங்களை சுமந்து வரும் முரசை சுவைக்கும் சிறுவர்கள் நாங்கள்.

அப்தாப், பௌரீஸ்,ஹஸ்ஸா ராபீ
நுரைச்சோலை.

□□

**குற்றம் குற்றமே!**

நம் நாட்டு தமிழ்ப் பத்திரிகைத் துறையின் குறையை நிறைவு செய்ய வந்துதித்த தமிழ்த் தாரகை தினமுரசே! "போற்றுவோர் போற்றட்டும் தூற்றுவோர் தூற்றட்டும். நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!" எனவே உன் வழி எவ்வழியோ அவ்வழியே செல். நாமிருக்கும்வரை-எம் சந்ததி பெருகும் வரை நீ வெளிவர வேண்டும்.

எஸ்.பத்மாவதி-கொழும்பு-10.

□□

**முத்தான முரசிற்கு!**

நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அசத்தி வருகின்றது. அதிரடி அய்யாத்துரையின் சுருக்கமான நகைச்சுவை கலந்த செய்திச் சுருக்கம் உண்மையில் அய்யாத்துரையை... (ஒன்றுமில்லை) ஒரு கை குலுக்க வேண்டும்போல் இருக்கின்றது. உலக ரவுண்டப் புதிய தகவல்களைப் படைக்கின்றது. இராஜதந்திரியின் அலசல் உண்மையில் அசல் அசல்தான்.

எம்.மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

□□

51வது முரசில் தென்னாபிரிக்க இஸ்ரேல் அரசியல் மாற்றங்கள் இலங்கைக்குப் படிப்பினையாகும் கட்டுரை- இராஜதந்திரி சிறப்பாக அலசியிருந்தார்.

மகேஸ்வரி ராமதாஸ்-வத்தேகம.

□□

சிந்திக்கலாம் இங்கே, கொலைவிழும் நேரம், எக்ஸ்ரே ரிப்போட், சினிவிசிட், மகாபாரதம் மற்றும் பல்சுவை அம்சங்களை தந்து எனது உள்ளத்தை உன்மேல் தித்திக்க வைக்கும் முரசே வாழ்க.

சொ.ஜெயன்-பரரதிபுரம்.

□□

**கடல் கடந்து போனாலும்....**

என் அன்புக்கினிய முரசே, தாய்நாட்டை விட்டு வெளிநாடு போனால் உன்னை எப்படி பார்க்கலாம் என்று வேதனையடைந்தேன். ஆனால் நீ தாய்நாட்டில் போல் இங்கும் உலாவுவதைக் கண்டு அளவில்லா மகிழ்ச்சியடைந்தேன். ரசிகன் தரும் இலக்கிய நயம், கொலை விழும்நேரம், தேன்கிண்ணம், சிறுகதை மற்றும் எத்தனை எத்தனை அருமையான அம்சங்களை தந்து என் உள்ளத்தை கொள்ளையடித்து விடுகிறாய், முரசே. ஆனால் சிறு வேதனை! குறுக்கெழுத்துப்போட்டி, கவிதைப் போட்டியில் பங்குகொள்ள முடியாமைக்கு. குறிப்பிட்ட திகதிக்கு ஆக்கங்களை அனுப்ப முடியவில்லை. நீ செவ்வாய்க்கிழமைக்கு தான் இங்கு வருகிறாய். முரசே நீ என்றும் இளமையுடன் வாழ்க. வளர்க.

செல்வி தவமணி
AL-DHAER- 51255- KUWAIT.

□□

# இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் பிரச்சனை!

# அமெரிக்க ஜனாதிபதியை தலையிடுமாறு கோரிக்கை!!

## இந்திய தலையீட்டை எதிர்க்கும் புலிகளது ஆதரவாளர்கள்



கிளின்ரன்

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு எதிராக இலங்கைத் தமிழ் குழுக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்கு முன்பாக நடத்தப்பட்ட அந்த ஆர்ப்பாட்டத்தை அமெரிக்காவில் உள்ள உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், கனடாவில் உள்ள கனடியத் தமிழர் கூட்டமைப்பும் ஒழுங்கு செய்திருந்தன.

இந்த இரு அமைப்புக்களுமே விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு ஒரு மனுவும் கையளிக்கப்பட்டது.


அந்த மனுவில் பின்வரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன:

1. தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து கட்டாயமாக நாடுகடத்துவதை தடுப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.
2. இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் நிலைகொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த யுத்தக் குற்றங்களை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி இந்தியா மீது தனது செல்வாக்கை பிரயோகிக்க வேண்டும்.
3. புலிகள் மீதான தடைச் சட்டத்தை இந்திய அரசு விலக்கிக்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்த வேண்டும்.
4. சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இந்திய தலையீடு இல்லாத சர்வதேச சமரச முயற்சிக்கு அமெரிக்க ஜனாதிபதி முயற்சிக்க வேண்டும். அதனை இந்தியாவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
5. இந்திய அரசு இலங்கையின் பாதுகாப்பு படையினருக்கும், ஏனைய கூலிப்படைகளுக்கும் பயிற்சி கொடுப்பதை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி தனது செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்.

என்னும் கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.

காஷ்மீர் தீவிரவாதிகளது ஆதரவாளர்களும் இந்தியப் பிரதமரை எதிர்த்து வெள்ளை மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

வெள்ளை மாளிகையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தியப் பிரதமருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.



பி.வி. நரசிம்மராவ்

## "தன்னாட்சியை உலகம் விரைவில் அங்கீகரிக்கும்"

# புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் உறுதி!

யாழ்ப்பாணத்தில் 'தமிழீழ வைப்பகம்' என்னும் பெயரில் புலிகள் அமைப்பினர் வங்கி ஒன்றை ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.

அவ்வங்கியில் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு ஆகியவற்றை ஆரம்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் மேம்பாட்டுக் கடன், அடகுக் கடன், வாணிபக் கடன் ஆகியவற்றை அந்த வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வைப்பக' திறப்பு விழாவில் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் உரையாற்றும் போது:

"இன்றைய நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. எமது வரலாற்றில் முதல் தடவையாக தமிழீழ மக்களுக்கென இந்த வைப்பகம் திறக்கப்படுகின்றது. தேசிய பொருளாதார நிர்மாணத்தின் படிக்கட்டாக இம்முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு யுத்தம் நடக்கின்றது. இனப்பிரச்சனை தீர்ந்தபாடில்லை. அரச படையினர் குண்டு வீச்சுக்களையும், அழிப்பு வேலைகளையும் தொடர்கின்றனர். இச்சூழ்நிலையில் இது ஏன் அவசியம் என்ற கேள்வி எழலாம்.

"எமது போராட்ட வரலாறு முடியாத ஒரு தொடர்கதையாக 40 ஆண்டுகள் தொடர்ந்து நடக்கின்றது. அரசு எமது பிரச்சனைக்கு தீர்வை முன் வைக்கும் என எதிர்பார்த்து, எமது முன்னைய சந்ததியினர் ஏமாற்றப்பட்டனர்.

"எமது உரிமைகளை அரசு வழங்கும், அரசின் தயவு, தாட்சண்யத்தில் எமது உரிமை கிடைக்கும் என இன்றைய தலைமை நினைக்கவில்லை.

"எமது இயக்கத்தின் வரலாறு வித்தியாசமானது. எமது உரிமைகளை மீட்க வேண்டியவர்கள் நாங்களே, எமது மக்களுக்கு தன்னாட்சி, சுய பொருளாதாரம் அவசியம். எம்மை நாமே ஆள வேண்டும். எமது நிர்வாகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அரசாங்கம் எமது பொருளாதாரத்தையும், மண்ணையும், கபளீகரம் செய்யத் திட்டமிட்டுச் செயற்படுகிறது. எமது தேசத்தை நாம் கட்டி எழுப்புவோம் என்று நாம் செயற்படுகிறோம். மக்களும் எம்பக்கம் நிற்கிறார்கள். எம்முடன் மக்கள் சேர்ந்து தமது நிர்வாகத்தைப் படிப்படியாகக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

முழு உலகமும் இதைக் கவனிக்கிறது. எமக்கென்று காவல்துறை, நீதித்துறை, இராணுவம் என ஓர் அரசுக்குத் தேவையான அத்தனையும் நிறுவப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் தொடர்ந்து நீடித்து நிலைக்கும். இந்நிலையில் உலகம் எம்மை தன்னாட்சி பெற்ற நாடாக அங்கீகரிக்கும் காலம் நெருங்கி வருகிறது.

"போர் நடக்கிறது. பொருளாதார தடையும் இலங்கை அரசினால் தொடர்ந்து அமுல்படுத்தப்படுகின்றது. கொழும்பு அரசியல் எவ்வாறேனும் சிதையட்டும். ஆனால் நாம் எமது நிர்வாகக் கட்டமைப்பைத் தொடர்வோம். அந்த வகையில் தமிழீழ வைப்பகம் ஆரம்பிக்கப்படுகின்றது.

"அரசின் கீழ் வைப்பகங்கள் இயங்குகையில் தமிழர்களின் நிதி அவர்களின் கீழ் இருந்தது. ஆனால் எமது தமிழீழ தேசத்தின் அபிவிருத்தியை- எமது மக்களின் விருத்தியை இலக்காகக் கொண்டது இந்த வைப்பகம். இது தமிழீழ மக்களுக்கான வைப்பகம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான வைப்பகம் அல்ல. இது ஒரு முதல் முயற்சியாகும். இது போன்ற வைப்பகங்கள் காலப்போக்கில் மாவட்டங்கள் தோறும் நிறுவப்படும். தமிழரின் தன்னாட்சியை, நிறுவும் அமைப்பாக இவை இருக்கும். மக்களின் நல்வாழ்வுக்காக எமது தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக இவை உதவும். எனவே மக்கள் சகல வழிகளிலும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்," என்று பாலசிங்கம் தனது உரையில் தெரிவித்தார்.

'வைப்பகத்தின்' நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டதாகவும், ஆயிரம் பேர்வரை வைப்பகத்தோடு தொடர்பை ஆரம்பித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பழைய கச்சேரியில் மூண்டது தீ!

## தொடர்பேதும் இல்லை என்கிறார் மேயர்!!

(நுவரெலியா நிருபர்)

சமீபத்தில் நுவரெலியாவிலுள்ள பழைய கச்சேரியில் தீ மூண்டது. நகர மேயரான நளின் திலகா ஹேரத் அவர்களே இந்தத் தீ விபத்துக்குக் காரணம் என்றும் அவருடைய தூண்டுதலினாலேயே இந்த தீ மூட்டப்பட்டது என்றும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அவர் மறுத்துள்ளார்.

ஐ.தே.கட்சிக்குள் தனக்கு எதிராகச் செயற்படும் ஒரு பிரிவினரே தனக்கு அவப்பெயரை ஏற்படுத்த இவ்வதந்திகளைப் பரப்பி வருவதாக திருமதி ஹேரத் கூறினார்.

காமினி திசாநாயக்கா அண்மையில் நுவரெலியா மாவட்டத்துக்கு மேற்கொண்ட பயணம் விரும்பத்தக்கதல்ல என்பதனை வெளிக்காட்டவே திருமதி ஹேரத் இத்தீ மூட்டலை ஏற்பாடு செய்திருக்கிறார் என்ற வதந்தி கிளப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த திலகா, "இம்மாவட்டம் எனது பரம்பரைச் சொத்தல்ல. ஆகவே எவருடைய வருகையையும் தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது" என்றார்.

தனது பெயருக்கு இழுக்குத் தேடுவதற்காக வேண்டுமென்றே விஷமத்தனமான பிரசாரத்தை சிலர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறுகிறார்.

இதே குழுவைச் சேர்ந்த சிலர் கடந்தவாரம் தனது ஆதரவாளர்களை அச்சமூட்டியதாகவும் சிலருடைய வீடுகள்மீது கல் எறிந்தும் சிலரைத் தாக்கியுமுள்ளனர் என்றும் திலகா கூறினார்.

திரு காமினி திசாநாயக்கா இச்சம்பவங்கள் பற்றிக் கூறுகையில், நுவரெலியா அரசியலில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகத் தான் தலையிடவில்லை என்றும் இனிமேலும் தலையிடும் உத்தேசம் தனக்கு இல்லை என்றும் சொன்னார். இருப்பினும் நுவரெலியா மேயரின் நடவடிக்கைகளை அவர் விமர்சித்தும் வருகிறார்.

## ஹேமா தலையிடார்!

தனது தந்தையாரின் கொலை விசாரணை பற்றிய விபரங்களை நேரடியாக கேட்டறியும் பொருட்டு மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி பொலிஸ் மா அதிபரை சந்திக்கவுள்ளார். இவ்வார இறுதியில் சந்திப்பு நடைபெறும் என்று தெரிகிறது.

திருமதி ஹேமா பிரேமதாசா இவ்விடயத்தில் தலையிட விரும்பவில்லை என்றும், அவ்வாறு தலையிட்டால் அதற்கு அரசியல் சாயம் பூசப்படும் என்று நினைப்பதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## எல்லாம் தயார்! அமைச்சர் எங்கே?

(காரைதீவு நிருபர்)


சமீபத்தில் கல்முனைக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன், அமைச்சர் தயாரத்னா சகிதம் விஜயம் செய்வாரென பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய சரியான வேளைக்கு குறிப்பிட்ட பாடசாலையில் அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் ஒன்று சேர்ந்தனர். மதிய உணவும் தயாராகி இருந்தது.

ஆனால் நடந்ததோ வேறு. கல்முனைக்கு அவர் விஜயம் செய்வதென்பது அவருக்கே தெரியாதாம். அதனால் அவர் அங்கு வருகை தரவில்லை. அதிபர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். மதிய உணவு பட்டபாடு சொல்லுந்தரமன்று.

விடயம் இராஜாங்க அமைச்சரை எட்டியதும் சீற்றமடைந்து சம்பந்தப்பட்டோரை சாடியதாக தகவல்.

## சுவிசில் ரஜினி எதிர்ப்பு சுவரொட்டி

## ஈழம் படை என்ற பெயரில் கண்டனம்!



ரஜினிகாந்த்

சுவிட்ஸர்லாந்துக்கு நட்சத்திர விழா நடத்தச் சென்ற நடிகர் ரஜினிகாந்த் மீது கண்டனம் தெரிவிக்கும் சுவரொட்டிகள் ஈழப்படை என்ற பெயரில் ஒட்டப்பட்டிருந்தன.

இதனால் ரஜினிகாந்த் நடத்திய நட்சத்திர விழாவுக்கு கூட்டம் சேரவில்லை. விழா ஏற்பாட்டாளர்கள் நஷ்டமடைந்தனர்.

வியாபாரப் போட்டியே 'ஈழப்படை' என்ற பெயரில் சுவரொட்டி வெளிவரக் காரணம் என்று கூறப்படுகிறது.

ரஜினியை தாமே முதலில் அழைக்க வேண்டும் என்று விரும்பிய கோஷ்டியினர் மற்றொரு கோஷ்டியினர் முந்திவிட்ட காரணத்தால் புலிகள் அமைப்பினரது உதவியோடு சுவரொட்டிகளை தயாரித்தனராம். இதில் இன்னொரு வேடிக்கை- தற்போது நஷ்டமடைந்துள்ள மற்றொரு வியாபாரக் கோஷ்டியினரும் புலிகள் அமைப்பினருக்கு தமது இலாபத்தில் ஒரு பகுதியை வழங்கிவருபவர்கள் ஆவர்.

'வள்ளி' படத்தில் "இலவச வேட்டி சேலை வேண்டாம். வேலை வேண்டும் என்று தத்துவம் பேசிய ரஜினிகாந்த் இலங்கை அகதிகளிடம் பணம் திரட்ட வருவது ஏன்?" என்று கேட்கும் ஈழப்படையின் பெயரில் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

## கனடாவில் நடைபெற்ற கண்டன ஊர்வலம்!

## புலிகள் மீது மறைமுகமான குற்றச்சாட்டு!!

கடந்த மாதம் 24ம் திகதி (24.05.94) கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சிலரால் நடத்தப்படும் 'தேடகம்' என்னும் தமிழர் வகைதுறை வள நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது.

அந்த நூல் நிலையத்தில் இருந்த சகல நூல்களும் எரிந்து சாம்பாராகின.

இதனையடுத்து 'தேடகம்' அமைப்பினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

"அன்று யாழ் நூலகம் இன்று தேடகம் நூலகம்." "முட்டாள்களால் தமிழர் மூளைக்கு வைக்கப்பட்ட நெருப்பு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் காணப்பட்டன.

அந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து கடந்த சனிக்கிழமை 28.05.94 அன்று கனடாவில் உள்ள ரொறன்ரோ மாகாண பாராளுமன்றம் நோக்கி கண்டன ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது.

அந்த ஊர்வலத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

"1994 மே மாதம் 24ம் திகதி நள்ளிரவு 1.00 மணியளவில் தேடக நூல் நிலையம் விஷமிகளால் திட்டமிட்டு தீவைக்கப்பட்டது. அனைத்தும் எரிந்து சாம்பலான நிலையில் தமிழர் வகைதுறைவள நிலையம் (தேடகம்) இன்று காட்சியளிக்கிறது. இந் நூல் நிலையம் கனடிய அரசாங்கத்தினதோ, அல்லது ஏனைய நிதிவழங்கும் ஸ்தாபனங்களதோ உதவி எதுவுமின்றி தமிழர் வகைதுறைவள நிலைய உறுப்பினர்களதும், நலன் விரும்பிகளதும் முற்றுமுழுதான ஆதரவின் கீழ் 1989ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்துள்ளது. கனடாவிலுள்ள தமிழ் மாணவர்களுக்கு ஏற்ற தமிழ் நூலகமாக தேடகத்தை ரொறன்ரோ மாநகர கல்வி சபை அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர் வகைதுறை வளநிலையம் இலங்கை அரசாங்கத்தினதும் சகல ஆயுதக் குழுக்களதும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், இது தொடர்பான விழிப்புணர்வை கனடா வாழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியும் வந்துள்ளது.

புகலிட வாழ்வில் 'தாயகம்' பத்திரிகை மீதான தாக்குதல், 'சங்கமம்' வானொலித் தயாரிப்பாளர் இளையபாரதி வீட்டின் மீதான துப்பாக்கிச் சூடு, 'மஞ்சரி' ஆசிரியர் டி.பி.எஸ்.ஜெயராஜ் மீதான தாக்குதல், 'பாரிஸில் 'ஈழநாடு' பத்திரிகை காரியாலயம் தீவைப்பு, பாரிஸில் ஈழப்போராட்ட முன்னோடியும் மனித உரிமையாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் வெறித்தனமாக சுட்டுக்கொல்லப்பட்டமை போன்ற கொலை வெறிச்சம்பவங்களின் தொடர்ச்சியாக தேடக நூல் நிலையமும் எரிக்கப்பட்டது." என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அப்பிரசுரத்தை இலங்கையில் ஜனநாயகத்துக்கான அமைப்பு, மனித உரிமைகளுக்கான இலங்கையர் ஆகிய அமைப்புக்களும் தாயகம், விழிப்பு ஆகிய சஞ்சிகைகளும் இணைந்து வெளியிட்டிருந்தன.

ஊர்வலத்திலும், அதன்பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் 'தேடக' நூலக எரிப்புக்கு விஷமிகளே காரணம் என்றே கூறப்பட்டது.

ஆயினும் ரொறன்ரோவில் இருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகையான 'ரொறன்ரோ ஸ்ரார்' என்னும் பத்திரிகைக்கு 'தேடகம்' குழுவைச் சேர்ந்த ஒருவர் தகவல் தரும்போது, "இலங்கையில் தனிநாடு கேட்டுப் போராடும் அமைப்பினரே நூலக எரிப்புக்கு காரணம்" என்று கூறியுள்ளார்.

கனடாவில் இருந்து வெளிவரும் சகல தமிழ் பத்திரிகைகளும் (கனடா ஈழநாடு தவிர) சஞ்சிகைகளும் நூல் நிலைய எரிப்பைக் கண்டித்துள்ளன.

கடைசியாக கிடைத்த தகவலின்படி உலகத் தமிழர் இயக்கம் என்னும் பெயரில் கனடாவில் இயங்கிவரும் புலிகள் அமைப்பினர் தமது தொலைபேசி செய்திச் சேவையில் "தேடக' நூலக எரிப்பை 'தேடகம்' குழுவினரே செய்திருக்கலாம்" என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது நூலகத்தை தாமே கொளுத்தி புலிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த அந்தக் குழுவினர் முற்பட்டுள்ளனர் என்று புலிகள் கூறுகின்றனர்.

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிம்மதிப்பா?
வறுமையில் தவிப்பா?



இஷ்ட தேவதைகளில் குறையா? இஷ்டப்பட்டவனையோ, இஷ்டப்பட்டவளையோ தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் தீச்சலுக்கு ஏனிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகா விகாரை, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

**வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.**

**தலைமைப்பீடம்**


P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறி துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பில்- வினோத் இன் (VINNODH INN)
இல: 33, 3ம் மாடி
சிறி குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 078-71592, 078-71243

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்த தினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதி களையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சை யும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11,*
*போன்: 421398*





தமிழ்நாட்டில் மாநில முதல்வர் செல்வி ஜெயலலிதாவை ஆதி பராசக்தியின் அவதாரம் என்று அவரது கட்சியினர் புகழ்ந்து வருவது தொடர்கிறது. அதேநேரம் ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் கூறிவருவதும் பலமாகக் கேட்கிறது. தமிழக 'தீக்கதிர்' ஏடு வெளியிட்டுள்ள காட்டூன் இது. (ஏழுமலை)

## தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரில் கொழும்பில் தமிழர்களை மிரட்டும் கும்பல்!

கொழும்பில் ஒரு இளைஞர் கோஷ்டி தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரில் ஒரு 'அமைப்பை' உருவாக்கியது.

அந்த அமைப்புக்கு நிதி திரட்டுவது என்ற போர்வையில் கொழும்பில் ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சிக்கான ரிக்கற் விற்கப்பட்டபோது வாங்க மறுத்தவர்களை அக்கோஷ்டி மிரட்டியிருக்கிறது.

தமிழ் அமைப்புக்கள் சிலவற்றின் பெயர்களைச் சொல்லியும் அந்தக் கோஷ்டி தனது அத்துமீறல்களை நடத்தியிருக்கிறது.

சமீபத்தில் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வெளிநாட்டில் இருந்து வந்து தங்கியிருந்த பெண்மணி ஒருவரை மிரட்டி யிருக்கிறார்கள்.

இளைஞர் ஒருவரையும் கண்மூடித்தனமாக தாக்கியிருக்கிறார்கள். அப்பெண்மணியிடமிருந்து ஒன்பதினாயிரம் ரூபா பணமும் பறிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும் அச்சமூக விரோத கும்பலின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

பெண்களை கேலி செய்வது, ரிக்கற் விற்பனை செய்யும் போர்வையில் மிரட்டிப் பணம் பறிப்பது, இலவசமான பரத நாட்டிய வகுப்புக்கள் என்று அறிவித்து அப்பாவிப் பெண்களுக்கு வலை வீசுவது போன்ற காரியங்களில் அக் கோஷ்டி ஈடுபட்டு வருவதாகவும், அவர்கள் தமது பெயரையும் பயன்படுத்தியதுபற்றி கவனிக்கப்படுவதாகவும் ஈ.பி.டி.பி அமைப்பினர் முரசுக்கு தெரிவித்தனர்.

றெலோ அமைப்பின் பெயரையும் அக்கும்பல் பயன்படுத்தியதாகவும், அதனையறிந்து 'றெலோ' அமைப்பினர் அந்த குழுவின் தலைவர் என்று அழைக்கப்படும் 'பிருந்தநாத்' அல்லது 'சூட்டா' என்பவரை விசாரணைக்காக பிடித்துச் சென்றார்கள். பின்னர் எச்சரித்து விடுவித்ததாகவும் தெரிய வருகிறது.

தமது தலைவரை 'றெலோ' அமைப்பினர் 'கடத்திச் சென்றது' பெரிய அநியாயம் என்றும், அதனை முரசில் வெளியிடுமாறும் அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவர் முரசுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கும்பல்களால் பாதிக்கப்படுவோர் தமக்கு உரிய முறையில் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று வெள்ளவத்தை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

இக் கோஷ்டி பற்றி இன்னொரு தகவல்: தாம் ஒரு சிறப்பு மலர் வெளியிடப்போவதாகக் கூறி தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களை அணுகி வாழ்த்துரை எழுதித் தருமாறு கேட்டனராம். அவர்களில் சிலர் அதற்கென்ன தருகிறோம் என்றும் கூறிவிட்டனராம். அதனை வைத்தே தமது காரியங்களை சாதிப்பதே கோஷ்டியின் திட்டம்.

முகவுரை, முன்னுரை கொடுப்போர் அதனைக் கேட்பவர்களது முகவிலாசங்களை அறிந்து கொள்வது நல்லது.


### புதுமைப் பெண்ணின் அழகான தோற்றத்திற்கு ருக்காஸ் பியூட்டி சென்டர்

ஹேர்பல் முறைப்படி பேர்சல் (Facial) முகப்பளபளப்பு (Bleaching), புருவ அழகு, புதுயுக சிகை அலங்காரம் மேக்கப்பில் கவனிக்க வேண்டியவை, அழகாய் இருப்பது எப்படி, உடையலங்காரம், நகையலங்காலம், சாரி பிளீட்டிங், மணப்பெண் அலங்கரம் இன்னும் பல....

இவைகளுக்கான,
ஒப்பனைப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். ஆங்கிலம், தமிழ், சிங்கம் 3 மொழிகளிலும் கற்பிக்கப்படும்.

Rucka's Beauty Centre
9A, Maclead Road, Bambalapitiya,
(Opp. Bambalapitiya Govt. Flats)
Colombo-04
T.P: 501556, 583574

### சமையற் கலை வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

* கேக் வகைகள் *
* கறி சோறு வகைகள் *
* சிற்றுண்டிகள் *

ஜுன் 10ம் திகதிக்கு முன் நேரில் வந்து சந்திக்கவும். தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

Niranjani Selvarajah
55 Vivekanda Hill
Kotahena
Colombo 13

### விற்பனைக்கு

பிலிப்ஸ் 4'-2' அளவுடைய புதிய குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு.

**A. இராசையா**
**519/1, எல்விட்டிகல மாவத்த, நாரஹேன்பிடிய கொழும்பு-05.**

என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சனி, ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம். விலை நேரில் பேசித் தீர்க்கலாம்.

### பொலன்னறுவையில்

தினமுரசு வாரம் தவறாமல் பெற்றுக்கொள்ளலாம்.

GALLE CITY STORES
412, KADURUWELA, POLANNARUWA.
*Tel: 027-2145, 2125.*


### நிருபர்கள் தேவை!

மட்டக்களப்பு, வவுனியா, குருநாகல், நுவரெலியா, போன்ற பகுதிகளில் செய்தி சேகரிப்பாளர்கள் தேவை. முன் அனுபவம் இல்லாதவர்களாக இருந்தாலும், செய்தி சேகரிக்கும் ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் வரவேற்கப்படுவர்.

தொடர்புகளுக்கு:
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை-கொழும்பு-05.

## பெண்களோடு சில்மிஷம் கண்டவர் கொடுத்தனர் தர்ம அடி!

(திருகோணமலை நிருபர்)

தனியே செல்லும் பாடசாலை மாணவிகளிடம் பட்டப் பகலில் சில்மிஷம் செய்யும் அநாகரிகக் கும்பல் ஒன்றினால் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

ஒருவர் இருவராகச் செல்லும் இத்தகைய அநாகரிகப் பேர்வழிகள் ஒதுக்குப் புறமான தெருக்களில் தனியாகச் செல்லும் மாணவிகளிடம் விரும்பத்தகாத சேட்டைகள் செய்து விட்டு ஓடி மறைந்து விடுகின்றனராம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவ்வாறான சில்மிஷம் செய்யும் வாலிபர் ஒருவர் மாணவியின் உறவினர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டாராம்.

அண்மையில் திருமால் வீதியில் இத்தகைய சில்மிஷம் ஒன்றில் ஈடுபட்ட வாலிபரை அயலில் நின்றோர் துரத்திச் சென்றனரெனினும் அவர் ஓடித்தப்பி விட்டார்.

இத்தகைய அநாகரிகக் கும்பலை அந்தந்த இடங்களில் மடக்கிப்பிடிக்கும் நடவடிக்கையில் இளைஞர் குழாம் ஒன்று ஈடுபட்டுள்ளது.

## விலகியது தடை!

(காரைதீவு நிருபர்)

'தினமுரசு வேண்டும்' என வாசகர்கள் குரல்கொடுத்ததால் புதிதாக சமீபத்தில் தெரிவான பிரதேசசபைத் தலைவரொருவர் உடனடி உத்தரவு பிறப்பித்து அதனை வாங்கி நூலகத்தில் இடும்படி கட்டளையிட்டார்.

இச்சம்பவம் நிந்தவூர் பிரதேசசபையின் நூலக வளர்ச்சிக் கூட்டத்தின்போது இடம் பெற்றது. காரைதீவு பொது நூலகத்தில் முன்னர் வாங்கப்பட்ட 'தினமுரசு' வார இதழ் கடந்த சில மாதங்களாக தடைபட்டமை குறித்து வாசகர்கள் கண்டனக்குரல் தொடுத்தனர். ஏலவே இருந்த செயலாளர் ஒருவரே தினமுரசு தடைக்கு காரணமாக இருந்துள்ளார் என தெரியவருகிறது.

தற்போது வெள்ளியினால் தினமுரசு நூலகத்தில் காட்சியளிக்கிறது.

## இன்றுவரை இல்லை நடவடிக்கை

(அக்குறணை நிருபர்)

அக்குறணைப் பிரதேசத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக தொலைபேசிகள் சீராக இயங்குவதில்லை. அவசரமான அழைப்புகள் எதுவும் எடுக்க முடியாமலே இருக்கின்றன. முக்கியமாக வைத்தியசாலை, மரண அறிவித்தல் போன்ற அழைப்பு விடயங்களுக்கு சுமார் ஏழு மைல்கள் தொலைவிலுள்ள கண்டி நகருக்கே செல்லவேண்டிய நிலை உள்ளது. இதனைப் பற்றி இலங்கை ரெலிகொம் பகுதியினருடன் தொடர்பு கொண்டபோது தொலைபேசித் தொடர்பு 'லூப்' இல் இணைப்புக்கள் அதிகம் என்பதாக காரணம் கூறுகின்றனர். ஆனால் இதுவரை நடவடிக்கை எதுவுமே எடுத்ததாக இல்லை.

இந்த காரணத்தினால் மக்கள் அதிகமான பணம் கொடுத்து தனியார் தொலைபேசி நிலையங்களுக்கு போக வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

ரெலிபோன் இருந்தும் எங்களுக்கு இந்த நிலை என்று அக்குறணை வாசியொருவர் மன உழைச்சலுடன் கூறினார்.

## மட்டக்களப்பும் சிவில் நிர்வாகமும்!
## தமிழ்ப் பகுதிகளுக்கு தனிச் சிங்களத்தில் படிவங்கள்

பொது நிருவாக அமைச்சில் சென்ற 14.05.94 அன்று அலுவலக உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ள வர்களுக்கு பயங்கரவாத சம்பவங்களினால் பாதிக்கப் பட்டதற்கான சலுகைப் புள்ளிகள் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்றது.

இலங்கையின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அழைக்கப்பட்டிருந்த பட்டியலில் மட்டு மாவட்டம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

மட்டு மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்தவர் களின் பெயர்கள் மொனறாகலை மாவட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதே வேளை பொது நிருவாக அமைச்சினால் தமிழ் பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களுக்கு சலுகைப் புள்ளிகளை வழங்குவதற்காகக் கோரப்பட்டிருந்த விவரப் படிவங்கள் தனிச் சிங்களத்திலேயே இருந்தது. இதனால் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டி ருந்தவர்களும், பிரதேச செயலாளர்களும் மிகுந்த சிரமங்களுக்குள்ளானார்கள்.

சில தமிழ் பகுதிப் பிரதேச செயலாளர்கள் 'இப்படி வத்தைப் பூரணப்படுத்திக் கொடுக்கவில்லை. இதனால் நேர்முகப் பரீட்சையின்போது அவர்கள் சலுகைப் புள்ளிகளைப் பெறமுடியாமற் போய்விட்டது. இதேவேளை பாதிப்பிற்குள் ளானதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் தமிழ் பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்டிருந்த வர்களுக்கு அவ்வப் பகுதி பொலிசாரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.இதனாலும் அவர்கள் சலுகைப் புள்ளிகளைப் பெறமுடியாமற் போய்விட்டது. பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டு அறிக்கை செய்ய பொலிசாரால் அப்பகுதிகளுக்குச் செல்ல முடியாதிருப்பதாகச் சொல்லியே தமக்கு அறிக்கை தரவில்லை என தமிழ்ப் பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்டிருந்தவர்கள் கூறினர்.

தினமும் மட்டு மாவட்டத்தின் சகல பகுதிகளும் சிவில் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளதாகக் கருதப்படுவதால் மட்டு மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்தவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக நேர்முகப் பரீட்சைக் குழுவினர் தெரிவித்ததாகவும் இதனால் தங்களது வாழ்க்கை பாதிக்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் வேதனைப்பட்டனர்.

மட்டு பகுதியில் உள்ள ஒருவருக்கு சலுகைப் புள்ளி வழங்குவதற்கான படிவம் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட் டிருந்தாலும், அப்பகுதிப் பிரதேசச் செயலாளர் அப்படிவத்தைப் பூரணப்படுத்திக்கொடுத்தாலும் இதனால் சம்பந்தப்பட்டவர் நேர்முகப் பரீட்சைக் குழுவினர் அப்படிவம் பூரணப்படுத்தப்பட்டதாக சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்வியினால் அப்பெண் கலக்கமடைந்து அழுததையும் காணமுடிந்தது.

நேர்முகப் பரீட்சைக் குழுவின் தலைவராக எஸ்.வி.ஆர். வேதநாயகம், திருமதி டபிள்யூ.எல்.பி.ரத்நாயக, ஜி.தலுவத்த ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

ஏ.எம்.ஏ.ஹுசைன்-ஏறாவூர்.

## புகார் பெட்டி

முறைப்பாடுகளைச் செய்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்ததும் அவற்றை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதும் எமது கடமையே. அதைச் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு முன்னதாக முரசு அவசரப்பட்டுச் செய்தி வெளியிட்டமர்மம் என்ன? நடுநிலை வகிக்கும் முரசு தடுமாறி செய்தி வெளியிட்டது பெரும் வேதனை தரும் ஒன்றாகும்.

முடிவாக ஒன்று தமிழ்த்தினப்போட்டி நடுவர் குழுவில் முரசின் திருமலை நிருபரும் நடுவர் குழுவில் ஒருவராகக் கடமை புரிந்தார். நீங்கள் வெளியிட்ட செய்தி உண்மையாயின் முரசின் திருமலை நிருபர்கூட தடுமாறித் தவறு செய்த நடுவர்களில் ஒருவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மை நிலையைப் பரிசீலித்து இதனைப் பிரசுரிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

ஜோ.ந.பல்தசார்
திருகோணமலை கோட்ட தமிழ்தின அமைப்புக்குழுச் செயலாளர்.

இதற்கான பதிலை முரசின் திருமலை நிருபர் தெரிவிப்பார். வெற்றி பெற்றவர்கள் உங்கள் மீது குறைகாணவில்லை, தெரிவு முறையின் அணுகுமுறையைக் கொண்டு நாடகங்கள் பற்றி கூறப்பட்ட வரையிலேயே கணக்கில் எடுத்துப் பிரச்சனை எழவும். விரிவாக பதில் அளிப்பதாகவும் நிருபர் தெரிவித்துள்ளார். ஆ-

## தவறலாமா முரசு?

தினமுரசு மே 22-28-1994 இதழில் 3ம் பக்கத்தில் வெளிவந்த 'திருமலை தமிழ் தினப் போட்டிகளும்-தடுமாறித் தவறு செய்த நடுவர்களும்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக விளக்கமளிக்க வேண்டியது எமது கடமையாகும்.


திருமலை கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப்போட்டிகளில் நடுவர்கள் தடுமாறவும் இல்லை, தவறு செய்யவும் இல்லையென்பதை அணித்தரமாக எடுத்துக்கூற விரும்புகின்றோம். வழமையாக இவ்வாறான போட்டிகளில் தோல்வியடைந்த பாடசாலைகள் தங்கள்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# யாழ் குடாநாட்டு முற்றுகைத் திட்டம்!

## தேர்தலுக்கு முன் வெற்றி சாத்தியமா?



'முற்றுகைக்கு படைகள் திட்டம். விரைவில் தாக்குதலை எதிர்பார்க்கிறோம்' என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்து வருகிறார்கள்.

சமீபத்தில் வவுனியாவில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது புலிகள் எதிர்ப்புக் காட்டாமல் பின்வாங்கிச் சென்றனர்.

பூவரசங்குளம்வரை இராணுவம் முன்னேறிச் செல்ல எதிர்ப்புத் தெரிவிக்காத புலிகள் இராணுவத்தினரை மேலும் உள்ளே இழுக்க திட்டமிட்டதாகத் தெரிகிறது.

புலிகளின் திட்டத்தை முன்கூட்டியே [illegible] படையினர் பூவரசங்குளத்தோடு நின்று கொண்டனர்.

[illegible]

வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அப்பகுதிக்குச் சென்றிருந்தார். அவர் மக்களை அணுகிப் பேசுவதற்கு முற்பட்டபோது மக்களோ பேசுவதற்கே தயக்கம் காட்டினார்கள்.

"இராணுவத்தினர் திடீரென்று வாபஸ் வாங்கி சென்றுவிடுவார்கள். மீண்டும் புலிகள் வந்து சேருவார்கள். உங்களோடு பேசியது தெரிந்தால் தொலைந்தோம்" என்ற ரீதியில் அந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு சொல்லப்பட்டதாம்.

படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பகுதிகளை எத்தனை காலத்திற்கு தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பது ஆள் பலம் சார்ந்த விடயமாகவே இருக்கிறது.

யாழ்ப்பாணத்திற்குள் ஒரு பாரிய நடவடிக்கையை படையினர் மேற்கொண்டாலும்கூட குறிப்பிட்ட பகுதிகளைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஆள்பலம் இராணுவ தரப்பில் குறைவாகவே இருக்கிறது.

இராணுவ அணிகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டு ஊடுருவிச் செல்லும்போது புலிகள் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை பின்வாங்கியே செல்வர்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் முக்கிய தலைவர்கள் இருப்பதாலும், தலைமையகம் செயற்படுவதாலும் யாழ்ப்பாணத்தை முற்றாக இழக்க புலிகள் விரும்ப மாட்டார்கள்.

எனவே-ஒரு குறிப்பிட்ட தூரம்வரை பின்வாங்கிச் சென்றாலும் அதன் பின்னர் பலத்த மோதல் ஒன்றுக்கு தயாராகவே இருப்பார்கள்.

[illegible]-யாழ்ப்பாணத்திற்குள் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை முன்னேறிச் [illegible] பின்னர் முகாமுக்கு [illegible] தந்திரோபாயத்தை படையினர் கையாண்டிருந்தனர்.

புலிகளை மோதலுக்கு அழைத்து அவர்களது பலத்தை குறைப்பதே நோக்கம் என்று படையினர் தரப்பிலிருந்து சொல்லப்பட்டது.

எனினும்-தற்போது வவுனியாவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பகுதிகளில் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகிறது.

எதிர்வரும் தேர்தலுக்குமுன் யாழ்ப்பாணத்தில் புலிகள் மீது, வெளியே சொல்லக்கூடியளவான ஒரு வெற்றியைப் பெறுவதற்கு அரசாங்கம் நாட்டம் கொள்ளும் என்று கருத இடமுண்டு.

தென்னிலங்கை பிரசார மேடைகளில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அரசு தோற்றுவிட்டது. போரை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை என்னும் கருத்துக்களை எதிரணியினர் உரத்துச் சொல்லக்கூடும்.

அவ்வாறான பேச்சுக்களது தொனியைப் பலவீனப்படுத்த யாழ் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையின் குறிப்பிட்ட வெற்றி ஆளும் கட்சிக்கு உதவும்.

மறுபுறம்- புலிகள் முன்கை எடுத்து அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடும்.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் போன்ற ஒரு பாரிய நடவடிக்கையை தேர்தல் சமயத்திலோ, அல்லது தேர்தல் நெருங்கும் நேரத்திலோ புலிகள் முன்னெடுத்தால் அரசாங்கத்திற்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

அதனையும் படைகளது உயர்வட்டாரங்கள் கவனத்தில் கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

புலிகள் முன்கை எடுப்பதற்கு முன்பாக அவர்களது முதுகெலும்பான பகுதியை முற்றுகையிடுவது சிறந்த உத்தி என்று படைத்தலைமையினர் கருதலாம்.

கிழக்கிலோ, வவுனியாவிலோ மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளை விடவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தரைமூலமான நடவடிக்கையில் உயிரிழப்புக்கள் அதிகமாகவே இருக்கும்.

படையினர் தரப்பிலும், புலிகள் தரப்பிலும் ஏற்படும் உயிரிழப்புக்களை விட பொதுமக்கள் மத்தியில் அதிக உயிரிழப்புக்களுக்கு யாழ் மீதான தாக்குதல்கள் வழி வகுத்துவிடும்.

தரைமீதான இராணுவ நடவடிக்கைக்கு வான் படையினர் உதவும் போது குண்டுவீச்சுக்கள் இலக்குத் தவறலாம். தவறும் இலக்குகள் குடியிருப்புக்களை நாசம் செய்யலாம்.

தற்போது தரைவழி நடவடிக்கை இல்லாதபோதுகூட வான் படையினர் அவசர அவசரமாக வீசிவிட்டு வரும் குண்டுகள் அழிவுகளை உருவாக்குகின்றன. எப்போதாவது புலிகளது முகாம்கள் இலக்கில் சிக்குவதுண்டு. அப்படி நடந்தால் ஆச்சரியம் என்ற நிலைதான் இருக்கிறது.

தேவாலயங்கள் மீதும் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்ற பின்னர் இராணுவ நடவடிக்கை பற்றிய செய்திகள் கேட்டாலே மக்கள் அஞ்சி நடுங்குகிறார்கள்.

படையினர்-புலிகள் மோதலில் பட்டுக் கொள்ளாமல் விலகியிருப்பவர்களும் விமானக் குண்டுவீச்சுக்களால் துரத்தப்படும் நிலை காணப்படுகிறது.

புலிகள் படையினர் பற்றிய பீதியூட்டும் பிரசாரங்களை திட்டமிட்டு மேற்கொள்வதாக இராணுவ வட்டாரங்கள் கூறுவதுண்டு.

அதேவேளை, படையினர் தரப்பில் இருந்து தொடரப்படும் இலக்கற்ற நடவடிக்கைகள் யாரும் பீதியூட்டும் அவசியமே இல்லாமல் மக்களிடம் அச்சத்தை தோற்றுவிப்பதையும் படையினர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வவுனியாவில் சமீபத்திய நடவடிக்கையில் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளான பகுதிகளில் இருந்த மக்கள் தப்பி ஓட முயலவில்லை.

புலிகளிடமிருந்து பாரிய எதிர்ப்பு ஏற்பட்டு மோதல் உருவாகும் போது நிலமை சுமுகமாக இருக்காது.

படையினரும் முரட்டுத்தனமான பதிலடியை நடத்துவார்கள்.

புலிகளுக்கும் தமது காவலரன்களை விட்டால் அடுத்துள்ள பாதுகாப்பு வேலிகள் பொதுமக்களது குடியிருப்புக்களாகவே இருக்கும்.

குடியிருப்புக்களின் மறைவில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டால் படையினரும் குடியிருப்புக்களை 'புல்டோசர்' பாணியில் மோதுவர். சொத்தழிவுகள் அதிகமாகும்.

போரில் ஈடுபடும் இரு தரப்புக்களுக்கும் சொத்தழிவுகள் தவிர்க்கமுடியாதவை என்னும் எண்ணம் இருக்கலாம்.

ஆனால், சிறுகச் சிறுகச் சேமித்து வீடுகளைக் கட்டி, தளபாடங்கள் சேர்த்து குடியிருக்க ஒருவீடு இருக்கிறது என்று திருப்திப்பட்டு வாழ்ந்தவர்களுக்கு சொத்தழிவுகள் பேரிடியாகவே அமைகின்றன.

மறுபுறம், இனப்பிரச்சனையே இல்லை என்று கூறிக்கொண்டு இராணுவ நடவடிக்கையும் எடுக்கப்படுமானால் தமிழ் மக்களது ஆதரவினை அரசாங்கம் எதிர்பார்க்க இயலாது.

தேர்தல் வெற்றிக்கான ஒரு தந்திரோபாயமாக மட்டுமே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது நீண்டகால நோக்கில் நன்மையளிக்கப் போவதில்லை.

படையினர் குறித்து மக்களிடம் இருக்கும் அச்சமும், இனப்பிரச்சனை பற்றி அரசாங்கத்திடம் ஒருமித்த தெளிவான கருத்து இன்மையும் புலிகளுக்கு சாதகமான அரசியல் மற்றும் உளவியல் பலத்தை அதிகரிக்கவே செய்யும்.

புலிகளது முகாமுக்கு அருகில் இருந்த ஒரு வயோதிபர் மட்டுமே தப்பிஓட முயன்றதாகவும், துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது கட்டுப்பாட்டில் வந்த பகுதிகளில் இருந்த மக்களையும் படையினர் சிரமங்களுக்கு உள்ளாக்கவில்லை.

மக்கள் இல்லாத பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் குறிப்பிட்டுக்காட்டக்கூடிய பலாபலன்கள் ஏற்படாது என்பதை படையினர் உணர்ந்தேயுள்ளனர்.

எனவே- மக்களை பீதியடைந்து தப்பிச் செல்ல வைக்காதவகையில் தமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதையும் படையினர் ஓரளவு விளங்கிக்கொள்ளுகின்றனர்.

எனவே-யாழ்குடாநாட்டுக்குள் பாரிய வெற்றி ஒன்றை படையினர் பெறுவது சுலபமானதாக இருக்காது.

ஒரு குறிப்பிட்ட பகுதியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாலும்கூட அதனை தொடர்ந்து தக்கவைத்தல் என்பது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர செலவிட்ட சக்தியைவிட அதிக சக்தியை செலவிடும் காரியமாகவே இருக்கப் போகிறது.

யாழ்குடாநாட்டுக்குள் தமது ஆள் பலத்தை ஒன்றுதிரட்டி படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, புலிகள் குடாநாட்டுக்கு வெளியே கெரில்லாத் தாக்குதல்களை பரவலாக்கக்கூடும்.

தற்போது வவுனியாவில் படையினர் முன்னேறிச் சென்றுள்ள வேளையில் கிழக்கே புலிகளது நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன.

பலமான எதிர்ப்பின்போது பின்வாங்கி, பலவீனமான பகுதிகளை தாக்குவது என்னும் தந்திரோபாயத்தை புலிகள் கைக்கொள்ளுகின்றனர்.

படையினர் தரப்பில் ஆயுதபலத்தையும், ஆள் பலத்தையும் அதிகமாக்கும் திட்டங்கள் இருந்தாலும், அவற்றை துரிதகதியில் மேற்கொள்ள நாட்டின் பொருளாதார நிலை இடம்கொடுக்கப் போவதில்லை.

எனினும், சில மாற்றங்கள் உள்ளே செய்யப்பட்டிருப்பதாகவே தெரிகிறது.

யாழ்குடாநாட்டுக்குள் பாரிய தாக்குதலை நடத்தி புலிகளை செயல் இழக்கச் செய்ய அவை போதுமானதாகத் தெரியவில்லை.

எப்படியாவது ஒரு குறிப்பிட்ட பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர படையினர் பெரும் முயற்சி செய்வர் என்றே தோன்றுகிறது.

புலிகளது கரங்களை கட்டிப்போட முடியாவிட்டாலும், யாழ்ப்பாணத்தில் ஒரு பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட செய்தியை தென்னிலங்கை வாக்காளர்களுக்கு தெரிவிக்கவே அரசாங்கம் விரைந்து விரும்புகிறது. ■

## நாரதர்



கனடாவில் 'தேடகம்' என்னும் அமைப்பினரின் நூல் நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பாரிசில் கொல்லப்பட்ட சபாலிங்கத்திற்கு தேடகம் அஞ்சலி கூட்டம் ஒன்றை கனடாவில் நடத்தியது.

அதனால் வந்த கோபத்தில் நூலகத்தைக் கொளுத்திவிட்டார்கள்.

மெல்ல,மெல்ல வெளிநாடுகளிலும் நம்மவர்களது ஜனநாயக மறுப்புக்கள் விரியத் தொடங்கியுள்ளதை அறிய முடிகிறது.

ஒரு வரையறைக்கு மேல் வெளியுலகம் அத்துமீறல்களை வரவேற்காது. 'போதும். வெளியே போ' என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள்.

யாழ் நூலகத்தை கொளுத்தியதை மன்னிப்பேயில்லாத குற்றச் செயல் என்று கொதித்துக் கண்டித்தவர் நாம்.

இப்போது நமக்குள் நாமே நூலகங்களை கொளுத்திக்கொண்டிருக்கிறோம்.

யாழ் நூலகத்தோடு ஒப்பிடும்போது, கனடாவில் தேடகம் நூலகம் துளியளவுதான்.

ஆனாலும், அளவைப் பொறுத்து நோக்காமல், செய்யப்பட்ட செயலின் குணாம்சத்தைப் பொறுத்துப் பார்க்கும்போது இரு குற்றச்செயல்களும் அடிப்படையில் ஒன்றுதான்.

ஆக, வெறுத்து எதிர்த்து நின்ற விசயங்களை நம்மவர்கள் சிலரே விசுவாசிக்கத் தொடங்கிவிட்டனர்.

எதனால் எல்லாம் எமது போராட்டம் தீவிரப்பட்டது என்று சொல்லி வந்தோமோ அந்த செயல்களை எல்லாம் நாமே நமக்கெதிராக செய்யத் தொடங்கிவிட்டோம்.

கனடாவில் 'தேடகம்' அமைப்பினர் தமது நூலகம் கொளுத்தப்பட்டமைக்கு புலிகளே காரணம் என்று சொல்லுகின்றனர்.

புலிகள் இதுவரை மறுக்கவில்லை. கண்டனம் அதிகரித்தால் மறுக்கக்கூடும்.

நமது மதிப்புக்குரிய 'நடுநிலை விமர்சகர்கள்' இவை பற்றியெல்லாம் வாயே திறப்பதில்லை.

பந்தி பந்தியாக எழுதி தமது தமிழினப் பற்றைக் காட்டும் அவர்களது பேனாக்கள் எழுத்துக்கும், பேச்சுக்கும் நம்மவர்கள் விடுக்கும் அச்சுறுத்தல்கள் பற்றி கண்டுகொள்வதேயில்லை.

புலிகள் தவறு செய்தால் சுட்டிக் காட்டுவது தமிழின விரோதம் என்று நினைத்துக்கொள்கிறார்களோ என்று தெரியவில்லை.

கண்மூடித்தனமாக புலிகளை எதிர்ப்பது சரியான போக்குமல்ல. கண்ணை மூடிக்கொண்டு புலிகள் செய்வதையெல்லாம் ஆதரிப்பது நியாயமான முறையுமல்ல.

புலிகளால் கொல்லப்பட்ட சபாலிங்கம் சமூக விரோதியல்ல. தமிழினத்தின் எதிரியுமல்ல.

அந்தக் கொலையைக் கண்டிக்க மட்டுமல்ல, விரிவாக செய்தி போடவே வீரமான விமர்சகர்கள் அஞ்சுவதுதான் வேடிக்கை.

'தேடகம்' அமைப்பு எந்தவொரு தமிழ் இயக்கத்தையும் சார்ந்த ஒன்றல்ல. தமிழர்களது அபிலாசைகளுக்கு மாறாகப் பேசிவருவதுமல்ல.

புலிகள் மட்டுமல்ல, எனைய தமிழ் அமைப்புக்கள் செய்யும் தவறுகளையும் 'தேடகம்' விமர்சித்தே வந்திருக்கிறது.

'தேடகம்' தனது நடவடிக்கைகளால் கனடாவில் புலிகளை செல்வாக்கிழக்கச் செய்துவிட முடியாது. அது ஒரு சிறிய அமைப்பு.

ஆனால், மாற்றுக் கருத்துக்களை சகியாத போக்கும், எம்மைப்பார்த்து கேள்வி கேட்பதா என்னும் செருக்கும் தீக்கிரையாக்கியோரின் செயலில் தெரிகிறது.

இவ்வாறான போக்குகள் எவ்வகையிலும் தமிழர்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்கப் போவதில்லை. ●

## அதிரடி அய்யாத்துரை



ரெண்டு எழுத்தார் வடக்கிலை சேமிப்பு வங்கி திறந்தவையல்லோ. தூய தமிழிலை 'வைப்பகம்' எண்டு பெயராம். வைப்பகத்திலை போடும் பணம் குட்டி போடும் எண்டு ஊக்குவிக்க விசேஷ திட்டங்களும் கைவசம் வைச்சிருக்கினமாம்.

யாழ் பகுதியிலை இருந்து வாற ரெண்டு எழுத்தாரின் உத்தியோகபூர்வ தினசரியிலை மலையக தனித்துவத் தலைவரை ஒரு வாங்கு வாங்கிக்கொண்டிருக்கினமாம். பெரிய இனம் விரிச்ச வலையிலை விழுந்து போனார் எண்டு சொல்லுகினமாம்.

கொழும்பிலை அட்டகாசம் செய்த ஒரு கும்பலை இயக்கங்கள் இரண்டு கவனிச்சதாக் கேள்வி. உடனை மூன்றாவது தமிழ் இயக்கம் ஒண்டு தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழை எண்டா சரி எண்ட கதையாக அந்த கும்பலுக்கு பொலிசுக்குப் போற ஐடியா கொடுத்ததாம். உதாலைதானே விசயம் பிழைக்கிறது. பிறகு விடுதலை, புரட்சி, முன்னணி, ஏன் இந்தப் பிழைப்பு? உண்மையானவை எண்டா ஊரிலை விசாரிச்சுப்போட்டு உதவுறது பற்றி யோசித்திருக்கலாமல்லோ? முந்தி ஆட்சி செய்யுறதாச் சொல்லி பெயரைக் கெடுத்தவை இப்ப சமூக விரோதியளுக்குச் சாட்சியா வெளிக்கிடுறது மாதிரித் தெரியுது.

கனடாவிலையும் எங்கடை ஊர்ப்பழக்கம் தலைகாட்டத் தொடங்கினபிறகு கனடா குடிவரவு அதிகாரிகள் விழிப்பாயிருக்கினமாம். தங்களை சந்திக்கிற எங்கடை நாட்டு ஆட்களிட்டை ரெண்டு எழுத்தார் பற்றிய தகவல்களை திரட்டுகினம் எண்டும் ஒரு தகவல்.

'ஏரிக்கரை' ஆங்கில பத்திரிகை ஆசிரியர் மகிந்தர் வெளிநாட்டுக்கு குடும்பத்தோடை போட்டாராம். முன்னாள் செயலாளருக்கு நெருக்கமாக இருந்த மனுசன். காட்சி மாறினதாலை கதிரை காலி.

பிரான்சிலை இருந்து வெளிவரும் பத்திரிகை 'சபா' கொலையை நியாயப்படுத்த வெளிக்கிட்டு தன்ரை மரபையே உடைப்பிலை போட்ட விசயம் பலத்த எதிர்ப்பை கிளறியிருக்குதாம். யாழ்ப்பாணத்திலை இருந்து ஒரு காலத்திலை நிலை தவறாது வந்த பேப்பரின்ர பெயரைச் சொல்லிக்கொண்டு கொலைக்கு ஏன் பாருங்கோ வக்காலத்து? எண்டு கேட்கினமாம்.

ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட தந்தையர் புத்திரர் திருவான மலையிலை ஒரு கூட்டம் நடத்தினவர். எண்ணிப் பார்த்தால் 50 பேர்கூட வரேல்லை எண்டு கேள்வி. இயக்கங்களை வழமைபோல் வசைபாடி கிழிச்சு கூட்டத்தை நிறைவு செய்துகொண்டாராம். கடைசியாக் கிடைச்ச தகவலின்படி, தான் வழக்குப்பேசி வெளியிலை எடுத்துவிட்ட ஆட்களை அவர் தேடுகிறாராம். கூலிதான் தரேல்லை. எனக்காக கொடி எண்டாலும் பிடியுங்கோ எண்டு சொல்லும் அபிப்பிராயமாம். அவர் காசு வாங்காமல் வழக்குப் பேசினது உதுக்குத்தானோ? சோளியன் குடுமி........

காதலையும் நாட்டுப்பற்றுக் கலந்து சொல்ல முடியும். பாருங்கோ பாரதிதாசன் பாடியிருக்கிறார்.

"நாளுக்கு புதுமை வேண்டும்.
நாட்டுக்கு உரிமை வேண்டும்.
கேளுக்கே ஆதரவு வேண்டும்-அடி
கிள்ளையே நீ எனக்கு வேண்டும்!"

கனக சுப்புரத்தினம் என்னும் எங்கடை பாரதிதாசன் பாரதி பரம்பரையல்லோ!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அடங்காத அதிகார வெறி! ஒற்றுமைக்கு சாவுமணி!!

## எண்ணை வள நாட்டில் எரியும் பிரச்சனை



மோதலுக்குத் தயார் நிலையில் தெற்கு யெமன் துருப்புக்கள்

செங்கடலும் அராபிய வளைகுடாக் கடலும் இணையும் களிமுகத்தில் எண்ணை வளம் கொண்ட நாடு ஏமன். இந்நாடு அரசியல் அடிப்படையில் வடக்குத்-தெற்கு என்று இரு வேறு நாடுகளாகப் பிரிந்துள்ளது.

ஏமன் துருக்கியர்களின் ஆதிக்கத்துள் 3 நூற்றாண்டுகள் இணைந்து கிடந்தது. ஏடன் என்ற பகுதியை பிரிட்டிஷார் 1839ல் கைப்பற்றினர். துறைமுகத்தினை அமைத்து செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கு ஊடாக சுயெஸ் கால்வாய் வழி செல்லும் கப்பல்கள் மூலம் தனி வருமானம் பெறுவதற்கு ஏடனை பிரிட்டன் பயன்படுத்தி வந்தது.

பலத்த போராட்டங்களின் பின்னர் 1967ல் சுதந்திரம் பெற்றதுடன் தென் ஏமன் மார்க்சிய தத்துவங்களை ஏற்று சோஷலிச நாடாகத் திகழ்ந்தது. வட ஏமன் முதலாவது உலகப் போரைத் தொடர்ந்து துருக்கிய ஆதிக்கத்தை அகற்றிவிட்டு பழமை தழுவிய ஆட்சிமுறையினை ஏற்றுக்கொண்டது.

சோவியத் யூனியனின் சிதைவு இந்நாடுகள் இரண்டும் இணைய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு அடி கோலியது. ஆனால் இந்த இணைப்பு நீடிக்கப் போவதில்லை என்பதுபோல் இப்பொழுது இரு பகுதிகளுக்குமிடையில் பயங்கர மோதல்கள் தலையெடுத்துள்ளன.

ஒரு வருடத்துக்கு முன்னர் தான் இருநாடுகளுக்கும் ஜனநாயக ரீதியிலான முதலாவது பொதுத் தேர்தல் இடம் பெற்றது.ஆனால் அதிகாரப் பரவலாக்கலுக்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் விவாதங்களாகி ஈற்றில் பெரும் வன்முறைப் போராட்டமாக வெடித்து விட்டது.

நாட்டின் வளத்தைப் பங்கிடுவதிலும் போட்டா போட்டிகள் வலுவடைந்துவிட்டன. வட ஏமன் தலைநகரான சனாவின் மக்கள் வாழும் பகுதியில் கடந்தமாத நடுப் பகுதியில் நவீன ஆயுதமாகக் கருதப்படும் 'ஸ்கட்' ஏவுகணைக் குண்டொன்று விழுந்து 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 4 வருடங்களாக நிலவி வந்த ஒற்றுமை இன்று சிதைவுற்றுவிட்டது.

வட ஏமனைச் சேர்ந்த அலி அப்துல்லா சாலே ஜனாதிபதியாகவும் தென் ஏமனைச் சேர்ந்த அலி சலேம் அல் பெய்ட் உப ஜனாதிபதியாகவும் உள்ளனர். ஆனால் இவர்கள் நாட்டு வளங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதிலும் பொருளாதாரத்தையும் இராணுவத்தையும் ஒன்றிணைத்து அதிகாரத்தை சமமாகப் பங்கிடுவதிலும் எந்தவிதமான அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி சாலே 31 பேர்கொண்ட அமைச்சரவை ஒன்றினை அமைத்தார். இதில்,தான் சார்ந்த கட்சிக்கு 21 பதவிகளைத் தந்தார். இந்தக் கட்சியில் இஸ்லாமிய தீவிரவாத இயக்கமும் இணைந்திருக்கிறது. இந்த இயக்கத்தின் தலைவர் நாட்டில் மீண்டும் சோஷலிச ஆட்சிமுறையினை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை யினை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து உப ஜனாதிபதியான அல் பெய்ட் வட ஏமனைவிட்டு வெளியேறினார். இதன்பின்னரே துப்பாக்கியின் துணை கொண்டு பிரச்சனைகளைத் தீர்க்கும் தீவிர பணிகள் ஆரம்பமாயின.

அயலிலுள்ள பல அரபு நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருநாடுகளுக்குமிடையில் பெரும்போர் மூளும் அபாயத்தைத் தடுக்க முயன்று வருகின்றன. ஆனால் அவை நல்ல பலனைத் தருவதாகத் தெரியவில்லை.

இங்கு போர் உக்கிரமடையுமானால் அது உலக நாடுகளின் தலையீட்டுக்கு வழி வகுக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.



வெளியேறும் இஸ்ரேல் படையினர் மீது கல்லெறிந்த ஒரு பலஸ்தீன இளைஞரை பாலஸ்தீனக் காவற் படையினர் மடக்கிப் பிடிக்கின்றனர்.

# நேற்றைய பகையாளிகள் இன்றைய நண்பர்கள்

## பாலஸ்தீன-இஸ்ரேலிய துருப்புக்களின் ஒற்றுமை

பாலஸ்தீனர்களுக்கு சுயநிர்ணய உரிமையினை வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் மேற்குக்கரையிலுள்ள ஜெரிக்கோவிலிருந்தும் காஸாவிலிருந்தும் இஸ்ரேலியத் துருப்புகள் வெளியேறிவிட்டன.

ஆனால் அந்த இறுதி நேர நடவடிக்கைகளில் சில விஷமத்தனமான செயல்களும் இடம்பெறவே செய்துள்ளன. பிரிந்து செல்வோருக்குப் பிரியாவிடை அளிப்பதுபோன்ற சில அசம்பாவிதங்கள் நடைபெறவே செய்தன. எனினும் அவை பாரதூரமான விளைவுகளை எற்படுத்தியதாகத் தெரியவில்லை.

வதந்திகளைப் பரப்பும் விஷமிகளும் சில விளைவுகளுக்குக் காரணமாக இருந்துள்ளனர். பகைமை உணர்வுடன் நீண்ட நெடுங்காலம் இருந்தவர்களின் அடிமனத்தில் தொக்கி நிற்கும் கசப்புணர்வுகளை உடனடியாக நீக்குவது சுலபமான காரியமல்ல என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இஸ்ரேலியத் துருப்புகள் இதுகாலவரை புரிந்துவந்த பணிகளை பாலஸ்தீன விடுதலை அமைப்பின் உறுப்பினர்கள் கையேற்றுள்ளனர். இவர்கள் இப்பிராந்தியத்தின் சிவில் நிர்வாகப் பணிகளையே பிரதானமாக ஏற்றுள்ளனர்.

எகிப்து, இராக், ஜோர்தான் போன்ற நாடுகளில் மறைந்து வாழ்ந்து நாடுதிரும்புவோரைக் கொண்டே தற்போது 3000 பேர் கொண்ட படையினை அமைத்து பாதுகாப்பு சட்ட ஒழுங்கு ஆகியவற்றுக்கு பொறுப்பாக நியமித்துள்ளனர். இதில் விரைவில் 9000 பேர் பணிபுரிய வசதிகள் அளிக்கப்படும்.

இன்னும் சில யூதக் குடியிருப்புகள் பாலஸ்தீன எல்லைகளுக்குள் உள்ளன. இவர்களுடைய பாதுகாப்புக்காக இஸ்ரேலியப் படைகளின் சில பிரிவுகள் அமர்த்தப் பட்டுள்ளன. பாதுகாப்பினை-இருதரப்பினரும் கடைப்பிடிக்க வசதியாக இஸ்ரேலிய-பாலஸ்தீன கூட்டு ரோந்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் பாலஸ்தீனர்கள் போதுமான ஒத்துழைப்பு தருவதில்லை என்று இஸ்ரேலியர்கள் கூறி வருகின்றனர்.

மேற்குக் கரையில் இத்தகைய இழுபறி இருந்த போதிலும் ஜெரிக்கோவில் குறிப்பிடத்தக்க அமைதி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

"முன்பு அவர்கள் எங்கள் ஜென்மப் பகையாளிகளாக இருந்தனர் என்பது உண்மைதான். ஆனால் இன்று எங்களுக்குள் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. நன்றாக உரையாடி மகிழ்கிறோம். உணவு, குடிபானங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்கிறோம்." என்று இஸ்ரேலீயப் படையைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார்.

### மரடோனா தயார்



உலகக் கோப்பைக்காக கால்பந்து போட்டியில் ஆர்ஜெண்டினா அணிக்காக சூப்பர்ஸ்டார் மரடோனா விளையாடுவது உறுதியாகிவிட்டது. மரடோனா பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது (வலதுபுறம்) கமரா பதிவு செய்தது. மரடோனா ஆடுவதால் ஆர்ஜென்டினா நம்பிக்கையோடு இருக்கிறது.

# ஸ்போட்ஸ்

## சாதனை படைத்த இளம் வீரன்

## இங்கிலாந்து அழைக்கிறது

## ஊதியம் 20 இலட்சம்



24 வயதான பிரெய்ன் லாறா மேற்கிந்தியத் தீவின் டெண்டுல்கர் என்று கூறப்படுகிறார். கிரிக்கெட் வரலாற்றில் ஒரே டெஸ்ட் ஆட்டத்தில் -ஒரே இன்னிங்சில் 375 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனையினை நிலைநாட்டியுள்ளார்.

36 ஆண்டுகளுக்கு முன்னர் சேர் காரிஃபீல்ட் சோபர்ஸ் ஒரே இன்னிங்சில் 365 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்திருந்தார்.

இந்தச் சாதனையினை எட்டுவதற்கு லாறா 12 மணி 46 நிமிடங்கள் ஆடவேண்டியிருந்தது. ஏற்கனவே சோபர்ஸ் படைத்த சாதனையினை லாறா முறியடித்ததும் பார்வையாளர் களரிகளில் திரண்டிருந்த 12,000 பார்வையாளர்களும், காவலாளர்கள், பாதுகாப்பாளர்கள் மற்றும் பொலிசார் ஆகியோரின் கட்டுப்பாடுகளை மீறி மைதானத்துள் ஏக காலத்துள் புகுந்து கொண்டனர். நிலைமையைச் சமாளிப்பது பெரும்பாடாகி விட்டது.

இங்கிலாந்து ஆட்டக்காரர்களை வெஸ்ட் இண்டீஸ் அணியினர் எதிர்த்தாடிய போதே இந்த மாபெரும் சாதனை நிலைநாட்டப்பட்டது. 1958ல் ஜமெய்க்காவின் கிங்ஸ்ரன் மைதானத்தில் பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியின்போது இங்கிலாந்து அணியைச் சேர்ந்த சேர் காரிஃபீல்ட் சோபர்ஸ் 365 ஓட்டங்களை எடுத்திருந்தார். அவருக்கு இந்தச் சாதனையினை நிலைநாட்ட 10 மணி 14 நிமிடம் தேவைப்பட்டது. அப்போது சோபர்சுக்கு வயது 21.

இவர் சாதனை படைத்தும் ஓடிவந்து பாராட்டியவர்கள் முக்கியமானவர் 36 ஆண்டுகளுக்கு முன்னர் உலக சாதனையினை நிலைநாட்டிய அதே சேர் கார்ஃபீல்ட் சோபர்ஸ் தான். "சாதனைகள் எதுவும் சாஸ்தவதமானவையல்ல. அவை எப்போதேனும் முறியடிக்கப்பட வேண்டியவையே! இத்தகைய சாதனையை எட்டுவதற்கு லாறாவே தகுதியானவர் என்பதனை நான் நன்கு அறிவேன். லாறா ஆடுவதை முதன் முதலில் பார்த்த அன்றைய தினமே இவர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக விளங்குவார் என்பதனைக் கண்டு கொண்டேன்" என்று சேர் சோபர்ஸ் கூறினார்.

"இன்று என் வாழ்நாளில் ஒரு மிக முக்கியமான நாள். வந்து குவிந்த மக்கள் அலையில் திணறிப்போய்விட்டேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியினை ஊட்டியது டாக்டர் சோபர்ஸ் அவர்களே நேரடியாக வந்து மனதாரப் பாராட்டிய சம்பவம்" என்கிறார் லாறா.

லாறாவை மேற்கிந்திய தீவு அணியின் முன்னாள் கப்டன் விவியன் றிச்சட்சும் மகிழ்ந்து பாராட்டியுள்ளார். "லாறா 500



சோபர்ஸ்

லாறா, இங்கிலாந்தில் உள்ள வோர்க்விக்ஷயர் கவுண்டி அணிக்கு ஆட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்திய வீரர் மனோஜ் பிரபாகருக்குப் பதிலாக லாறா அந்த அணியில் இடம் பிடித்துள்ளார். அந்த அணியில் ஒரு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

ஆளுங்கட்சிக்குள் 'சுத்திகரிப்பு' நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்த தறுவாயிலேயே, எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் புதிய நிர்வாகக் கமிட்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.


இந்த நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தின்போது எதிர்க்கட்சித் தலைவியான திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன மக்கள் முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவராக மேல் மாகாண முதலமைச்சர் திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கணவர் திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கையின் ஒரு பிரபலம்மிக்க அரசியல் தலைவராக இருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்த பின்னர் அக்கட்சி மூலமாக திரு. பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராகியிருந்தார்.

இதுதவிர சிறந்த பாராளுமன்றப் பேச்சாளராகவுமிருந்து அரசியலில் தமக்கென ஒரு தனியிடத்தை காலஞ்சென்ற திரு.பண்டாரநாயக்கா பெற்றிருந்தார்.

திரு.பண்டாரநாயக்கா அரசியலில் குதித்திருந்த காலத்தில் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா வெறுமனே வீட்டுப் பெண்ணாக குடும்ப அலுவல்களையே கவனித்து வந்தார். அரசியலில் எந்த விதத்திலும் அப்போது அவர் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை.

ஆனால் திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. கொள்கையில் மாற்றமிருக்காது எனத் தெரிவித்திருந்ததுடன் வெளிநாட்டு



சிறிமாவோ

## அலசுவது - இராஜதந்திரி

முயற்சிகளும் தோல்வியையே தழுவியிருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் புதிய ஆட்சியை அமைப்பது குறித்துப் பிரஸ்தாபித்து வரும் எதிரணியினர் நாட்டின் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்தும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டிய வர்களாக இருக்கின்றனர்.

கடந்தகாலங்களில் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக வட்டமேசை மகாநாடுகள், மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டங்கள் என்பன நடத்தப்பட்டிருந்தன.

இவற்றில் ஆளுங்கட்சியினரோ அல்லது எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா மேற்கொள்ள வேண்டியவராகின்றார்.

இருந்தபோதிலும் திரு. விஜய குமாரணதுங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் கட்சியிலிருந்தும் விலகி, அக்கட்சியில் அவரது விசுவாசிகளாக இருந்தவர்களையும் கைவிட்ட பின்னர் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில், தாயாருடன் சேர்ந்திருக்கும் சந்திரிக்கா எவ்வளவுதூரம் தமது கணவரின் கொள்கைகளை முன்னெடுப்பார் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு அரசியல் நிலவரத்தை அவதானிக்கும்போது 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையே இன்று காணப்படுகின்றது.

# கொளுந்துவிட்டெரியும் வடக்கு-கிழக்கு பிரச்னையில் 'குளிர்காயப்' பழகிவிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகள்!

எதிரணியினரின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரைத் தெரிவு செய்வது தொடர்பாக குழப்பநிலை ஏற்பட்டுள்ள தென அரச சார்புச் செய்திப் பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதி வேட்பாளராவதில் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா வுக்கும், அவரது மகள் சந்திரிக்கா வுக்குமிடையே போட்டி பூசல்கள் நிலவுகின்றன எனவும் கூறப் பட்டிருந்தது.

ஆனால் இத்தகைய தகவல்கள் தவறானவை என்ற வகையிலேயே எதிரணியினரின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா, அவரது கட்சியினரால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டில் இருதடவைகள் பிரதம மந்திரியாகப் பதவி வகித்தவர். அத்துடன் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப் பட்டதையடுத்தே திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் தமது பிரவேசத்தை மேற்கொண்டார்.

1970ம் ஆண்டில் இரண்டாவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றிய திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இடதுசாரித் தலைவர்கள் பலரையும் தனது தரப்பில் கொண்டிருந்தார்.

இந்த இடதுசாரித் தலைவர்களின் துணையுடன் நாட்டில் சமூக, பொருளாதார, கல்வித்துறைகளில் திருமதி. பண்டாரநாயக்காவின் அரசு மாற்றங்களை அறிமுகப்படுத்தியிருந்தது. ஆயினும் அம்மாற்றங்கள் நாட்டின்

முதலீடுகள் மேலும் ஊக்குவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை இன்று ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக திறந்த பொருளாதாரக் கொள்கைக்குப் பெருமளவு பரிச்சயப்பட்டிருக்கின்றது. இலங்கையில் கைத்தொழில் பேட்டைகள், சுதந்திர வர்த்தக வலயங்கள் என்பன தோன்றியிருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது நடைமுறை யில் இருக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் மீது கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும் பட்சத்தில் இலங்கையில் பொருளாதார, சமூகப் பிரச்னைகள் பாரியளவில் தோற்றம்

சுதந்திரக் கட்சியோ வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து எத்தகைய சமரசத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.மங்களமுனசிங்கவே பாராளுமன்ற தெரிவுக்குழு கமிட்டிக்குத் தலைமை தாங்கியிருந்தார். இருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச்னைத் தீர்வு விடயத்தில் எதுவித அர்த்தமுள்ள பங்களிப்பையும் மேற்கொண்டிருக்கவில்லை.

திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் நடவடிக்கைகள்

அரசியல் ரீதியிலான முயற்சிகளில் தோல்வி, அல்லது தேக்கநிலை தோன்றும் பட்சத்தில் இராணுவ கெடுபிடிகள் தோன்றி விடுகின்றன.

எனவே எதிர்காலத்தில் காத்திரமான அரசியல் நடவடிக்கைகள் என்று ஆரம்பிக்கும் பட்சத்தில் மனந்திறந்து, உறுதியான, பேச்சுவார்த்தைகளை பரஸ்பர விசுவாசத்துடன் மேற்கொள்ள வேண்டியதே மிகவும் இன்றியமைதாத தாகின்றது.

இலங்கையின் இரு முக்கிய தேர்தல்களான ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியன இடம் பெறுவதற்கு இன்னும் சுமார் ஆறு மாதங்களே இருக்கின்றன.

ஆளுங் கட்சியினர் தமது தரப்பில் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தம்மைப் புனருத்தாரணம் செய்வதில் குறியாக இருக்கின்றனர்.

இதனையடுத்து தேர்தல் பிரசார வியூகங்களை அமைப்பதில் அவர்கள் தமது கவனத்தைத் திருப்புவர்.

## ஜே.வி.பி.யின் ஆரம்பத்துக்கு வழிவகுத்த சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் போலி வாக்குறுதிகள்!



விஜயகுமாரணதுங்கா

1977ம் ஆண்டில் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டதுடன், அரசியல் ரீதியாக அவர் முடமாக்கப் பட்டிருந்தார்.

திருமதி.பண்டாரநாயக்கா இவ்வாறு திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சியில் அரசியல் ரீதியாக முடமாக்கப்பட்டதை யடுத்து ஆளுங்கட்சியினர் நாட்டின் அரசியலில் ஏகபோக நிலையைக் கொண்டிருந்தனர்.

தமது குடியியல் உரிமையை மீளப்பெற்ற திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா 1989ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் எதிரணியினரின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார். ஆனால் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவை அத்தேர்தலில் தோற்கடித்திருந்தார்.

திருமதி.சிறிமாவோ பண்டார நாயக்காவின் அரசியல் பெரும்பாலும் இடதுசாரிகளின் கூட்டணியுடன் கூடியதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது.

கண்டியச் சிங்களப் பாரம்பரியங் களுடன் ஒரு குடும்பப் பெண்ணாகவே திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இருந்து வந்தார்.

பலத்த பாதிப்பை உண்டு பண்ணியிருந்ததுடன் தென்னிலங்கையில் கிளர்ச்சி தோன்றுவதற்கும் வழி வகுத்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரின் 1970ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டுவரையிலான ஆட்சியின்போது நாடு பல்வேறு சிக்கல்களுக்கும் உள்ளாகியிருந்தது.

இந்நிலையில் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலத்த தோல்வியைத் தழுவியிருந்தது.

ஐக்கியதேசியக் கட்சி 1977ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றி இன்றுவரை ஆட்சிப் பீடத்திலிருப்பதற்கு ஐ.தே.க. ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கைகளும் முக்கியமானவையாக விளங்கின.

பெறும் என்பதில் ஐயமில்லை.

திருமதி.சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா இன்று தாம் பங்குபற்றி வரும், பொதுக்கூட்டங்களில் இன்றைய இளஞ்சமூகத்தினர் பெரும் பிரச்னைகளுக்குள்ளாகியுள்ளனர் என்று குறிப்பிட்டு வருகின்றார். அத்துடன் இளஞ் சமூகத்தினரின் அபிலாஷை களைப் பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களை தாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் உருவாக்கப்போவதாகவும் சந்திரிக்கா கூறிவருகின்றார்.

சந்திரிக்கா தற்போது கூறுவதைப் போலவே அவரது தாயாரும் 1970ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டபோது "இளஞ் சமூகத்தினரின் நலன்களுக்கு முதன்மை யளிக்கப்படும். அத்துடன் இலவச அரிசி மற்றும் சலுகைகள்

மூலமாகவே தீர்வு காணப்படவேண்டும் என்று கூறிவருகின்றார்.

ஆனால் வாய்ப்பேச்சில் குறிப்பிடு வதுபோல அரசியல் நடவடிக்கை என்பது சாமான்யமானதொன்றல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல, ஏனைய தமிழ்க்கட்சி களுடனும் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக விரிவான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது.

சந்திரிக்காவின் கணவரான மறைந்த மக்கள் கட்சித் தலைவரும், சினிமா நட்சத்திரமுமான திரு.விஜயகுமாரண துங்க தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களைச் சந்தித்திருந்தார். தமிழ் நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் திரு.குமாரணதுங்க இச்சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.



சந்திரிக்கா

## இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்திய சந்திரிக்காவின் கணவர் விஜய குமாரணதுங்க!

ஆயினும் ஆட்சியிலிருப்போரின் தனிப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஏற்படுத்திய எதேச்சையான அரசியல் நடவடிக்கைகள், ஆளுங்கட்சி உறுப்பினரிடையேயான 'குத்து வெட்டுக்கள்' என்பன காரணமாகவே இன்று ஆளுங்கட்சி அரசியல் பலவீன மடைந்திருக்கக் காணப்படுகின்றது.

ஆளுங் கட்சியின் இத்தகைய பலவீனமான போக்கே, எதிரணி யினருக்கு எதிர்வரும் தேர்தல்களில் உறுதியுடன் போட்டியிடுவதற்கான வாய்ப்பையும் வழங்கியிருக்கக் காணப்படுகின்றது.

மேல்மாகாண முதலமைச்சரும், எதிரணியினரின் 'நம்பிக்கை நட்சத்திரமுமான' திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா அண்மையில் தமது அணியினரின் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி விளக்கமளித்திருந்தார்.

அவ்விளக்கத்தில் அவர், தமது கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் திறந்த பொருளாதாரக்

மக்களுக்கு வழங்கப்படும்" என்று பிரசாரஞ் செய்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

ஆனால் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் அதிருப்தியடைந்த இளைஞர்களே தீவிரவாதத்தில் குதித்து, ஜே.வி.பியினர், அதாவது ஜனதா விமுக்தி பெரமுன என்ற பெயரில் நாட்டில் கிளர்ச்சியையும் நடத்தியிருந்தனர்.

எனவே இளைஞர் சமூகத்தினருக்கு வாக்குறுதிகளை வழங்குவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தற்போது மிகுந்த எச்சரிக்கையுடன் 'இருக்க வேண்டியவர்களாகவே காணப்படு கின்றனர்.

இலங்கையின் இன்றைய அரசியல் அபாயகரமானதாகவே இருக்கின்றது. நாட்டின் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஒரு யுத்த வலயமாக இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்னை எதுவித தீர்வையும் எட்டாததாக இருக்கின்றது. இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து

தமிழ்நாட்டில் இடம்பெற்ற சந்திப்புக்களின் போது சந்திரிக்காவும், அவரது கணவர் விஜயகுமாரணதுங்க வுடன் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் போராளிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அரசியல் நடவடிக்கைகள் மூலமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்க்கப் படவேண்டும் என்று இலங்கை-இந்திய ஒப்பந்தம் தயாராவதற்கு முன்னரே திரு.விஜயகுமாரணதுங்க வலியுறுத்தி யிருந்தார்.

ஆயினும் மக்கள் கட்சித் தலைவராக இருந்து தமது அரசியல் நடவடிக்கை களை நல்ல உத்வேகத்துடன் முன்னெடுக்கு முன்னரே துப்பாக்கி வேட்டுகளுக்கு திரு.குமாரணதுங்க இரையாகியிருந்தார்.

எனவே தமது கணவரின் மறைவையடுத்து அரசியலில் பிரவேசித்து இன்று எதிரணியில் ஒரு முக்கிய புள்ளியாக இருக்கும் சந்திரிகா, வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக நிறையவே அரசியல் நடவடிக்கைகளை

எதிரணியினரும் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலேயே படிப்படியாகக் குதிக்க ஆரம்பிப்பார்.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஆளுங்கட்சி யினரோ, அல்லது எதிரணியினரோ காத்திரமான அரசியல் நடவடிக்கைகளை இந்த ஆண்டில் முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எதிரணியினர் அரசியல் நடவடிக்கை கள் மூலமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னை அணுகப்பட வேண்டுமென் கின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரங்களில் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய தமது உரையிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்ற முன்வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் எதிரணியினரதும், ஆளுங் கட்சியினரதும் இக்கூற்றுக்கள் வெறும் 'வார்த்தை ஜாலங்களாகவே' இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்னை நெருப்பாகக் கொளுந்து விட்டெரிகின்றது. ஆனால் தென்னிலங்கை அரசிய லாளர்கள் இந்த நெருப்பை அணைப்பதைவிட அதில் 'குளிர்காயத்' தெரிந்தவர்களாகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

www.padippakam.com


நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

## நீங்களும் தைக்கலாம்


12 வயதுப் பெண் பிள்ளைகளுக்கான சமையல் நேர மேலங்கிச் சட்டை (APRON)

A-B சட்டையின் அகலம் 9"÷2= 4 1/2"
A-C சட்டையின் நீளம் 10"
AEF கழுத்தின் இறக்கம் 2 1/2"
கீழ்பாவாடையின் நீளம் 21 1/2"
பாவாடையின் அகலம் 24"÷2=12"
இடுப்புச் சுற்றளவு 30"÷4= 7 1/2"




10" நீளமும் 9" அகலமுமான துணியை எடுத்து அகலத்தில் சரிபாதியாக மடிக்கவும். மடித்த பின்னர் அகலம் 4 1/2" ஆகும். (படம் 1இல்) AE 2 1/2" அகலத்திற்கும் AF 2 1/2" கழுத்தின் இறக்கத்திற்கும். கழுத்தை காட்டியவாறு அரை வட்ட வடிவில் வெட்டிக்கொள்ளவும். BG தோள் பகுதியோடு அமைவதால் 1/2" பதித்து வெட்டியபின் சரிபாதியாக மடித்த பகுதியை விரித்துக் கொள்ளவும்.

**எஸ்.எஸ்.**




கீழ்பாவாடைக்கு 2 1/2" நீளமும் 24" அகலமுமான ஒரு துணியினை எடுத்துக் கொள்ளவும். HL 16 1/2"மும் MJ 16 1/2"மும் அளந்து LMஐ குறுக்காக இணைத்து அப்பகுதியை வெட்டவும். அதேபோல் LI 7 1/2" KM 7 1/2"மும் இருக்கின்றதா என்று பார்க்கவும். இதன்படி வெட்டிய துணிகள் இரண்டு வந்துள்ளன. அவை இரண்டையும் IJHK என்ற புள்ளியிடப்பட்ட பகுதிகளை சேர்த்து இணைக்கவும். இணைத்ததும் பாவாடை அமைப்பு வந்துவிடும். பின்பு மேற்சட்டையையும் பாவாடையையும் இணைக்கவும்.

• இணைக்கும்போது சட்டையின் அளவைவிட பாவாடையின் அளவு கூடிவரும். கூடிவரும் பகுதிகளை இரு பக்கத்திலும் சமனாக விடவும்.

இணைத்த பின்னர் 1"அகலமும் 30" நீளமுமான துணியினை எடுத்து அகலப் பகுதியை மடித்து பாவாடையின் இடுப்பு மேற்பகுதியில் இணைத்து பின் புறத்தில் பொத்தானை வைத்துப் பாவிக்கக்கூடிய மாதிரி மூடித்திறக்கலாம். அதனை அடுத்து இரு தோள் பகுதிக்கு 3 அங்குல அகலமான துணியை மடித்து தோள் பகுதியில் பொருத்திக்கொள்ளவும். தோளின் இரு பகுதியிலும் மூட்டப்பட்ட துணியினை கழுத்து பின்புறத்தின் அளவுக்கேற்ப கட்டலாம்.

இவற்றை மூட்டியபின்னர் பாவாடையின் இருபக்க கீழ்ப்பகுதிகளையும் 2" மேல் நோக்கி சிறிது வளைவாக (கத்தரிக்கோல் அடையாளமிடப்பட்ட பகுதி) வெட்டிக் கொள்ளவும். பின் 1/2" மடிப்பு போடவும்.

# இயக்குநர் விசுமீது கனிமொழி சாட்டை!

# அழுக்குகளுக்கு ஏன் அரிதாரப் பூச்சு?



கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி கலை-இலக்கியத் துறையில் காலடி வைத்திருக்கிறார்.

புதிய நோக்கோடு சூழலைக் கவனிக்கிறார். ஆண் ஆதிக்க சிந்தனைகள் மீது கோபமாய் சாடுகிறார்.

திரைப்பட இயக்குநர் விசு பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரையில் காணப்பட்ட ஆண் ஆதிக்கப் போக்கை "வாசுகி' இதழில் கனிமொழி சாடியிருக்கிறார் இப்படி!

சாடலில் சூடும் உண்டு. குத்தும் கேலியும் உண்டு.

"முற்போக்கு எண்ணங்கள் கொண்டவள், ஆனால் அந்த முற்போக்கு எண்ணம் ஆடைக்குறைப்பில் கிடையாது. உதட்டுப் பெயிண்டிங் கிடையாது. மேக்கப் சாதனம் கிடையாது. அவளுக்கு புருவத்தை மழிக்கத் தெரியாது. புலி நகம் வளர்க்கத் தெரியாது. முடியைக் குறைத்து அலங்கோலம் ஆக்கிக்கொள்ளத் தெரியாது, தொப்புளுக்குக் கீழே மைதான இடைவெளி விட்டுச் சேலை கட்டத் தெரியாது. ரவிக்கையின் முன்பக்கம் யாரையும் எம்பிப் பார்க்க வைக்காது, பின்பக்கம் யாரையும் நோட்டீஸ் ஒட்டத் தூண்டாது. கட்டிங் அப்படி. தாராளமாகத்தான் துணி வாங்குவாள். ஆனாலும்-ஆறு வயது பாலகன் முதல் அறுபது வயது கிழவன்வரை, ஒவ்வொருநாளும், நூற்றுக் கணக்கான ஜொள்ளு சபலிஸ்டுகளால் கண்களாலேயே கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சுத்தமான கற்புக்கரசி."

இவை மதிப்பிற்குரிய திரைப்பட இயக்குநர் திரு.விசு அவர்கள் ஒரு வாரப் பத்திரிகையில் எழுதப்போகும் தொடர்கதையில் பவனி வரப் போகும் கற்புக்கரசி கதாநாயகியைப் பற்றிய வெள்ளோட்ட வர்ணிப்புகள், தன் திரைப் படங்கள் மூலமாக தாய்க்குலங்களின் அவலங்களை பிரதிபலிக்க முயலும் விசு அவர்களிடமிருந்தா இப்படி ஒரு வெள்ளோட்டம்? வியப்பாக இருந்தது. அவர், சொல்வதில்தான் எத்தனை உண்மை. அடுப் படியில் அடக்கமாக உழல வேண்டிய பெண்கள், இப்படி அசிங்கமாய், ஆபாசமாய், இந்திய மண்ணின் கலாசார பெருமைகளை காற்றில் பறக்க விடுமளவு வெட்கமின்றி நடந்து கொள்வது எவ்வளவு கேவலமான விஷயம்.

இந்த நாட்டின் விஸ்வாமித்திரரைப் போன்ற முற்றும் துறந்த ஆண்களை, இந்த பெண்கள் மேனகை போல் வந்து சபலப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம்?

பாவம்-இந்த தேசத்து ஆண்கள், தனக்காக சிந்தித்து முடிவு எடுக்கும் அறிவற்ற ஜடப்பிராணிகள், தனது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத எடுப்பார் கைப்பிள்ளைகள். அதனால்தான் இந்த பழக்கப்படாத மிருகங்கள் சில நேரங்களில் தன்னை மயக்க வரும் மாயாஜாலக்காரிகள் யார்? இன்னும் மழலை கூட மாறாத மொட்டுக்கள் எது? என்று புரியாமல் வெறி நாய்களாய் பல பிஞ்சுப் பூக்களைக் கற்பழித்துக் குதறுகிறார்கள்.

'கற்புக்கரசிகள்' இவர்களில் சிலரை திரு.விசு அவர்கள் அடையாளம் கண்டு சொன்னால், அக்கம்பக்கத்து மாநிலங்களில் தண்ணீருக்காகப் பிச்சைப் பாத்திரம் ஏந்திக்கொண்டிருக்கும் நமக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் ஒரு பெரியவர் சொன்னார், இந்தக் கற்புக்கரசிகள், 'பெய்யென்று சொன்னால் மழை பெய்யுமாம்'. மழையின்றி வெடித்துப் போன எங்கள் தஞ்சை மண்ணின் விவசாயிகளுக்கு இப்படியாவது ஒருவழி பிறக்கட்டுமே. ஒரு குடம் தண்ணீருக்காக விடிய விடிய காத்திருந்து களைத்துப்போன நம் சென்னை தாய்க்குலங்களின் உளமார்ந்த வாழ்த்துக்களும் அவருக்குப் போய்ச் சேருமே. செய்வாரா திரு.விசு?

ஒரு சந்தேகம். சிதம்பரத்தில் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்டாரே பத்மினி. அவர் புருவத்தை மழித்துக்கொண்டு, உதட்டு சாயம் பூசி, முதுகு தெரிய ரவிக்கை அணிந்து அந்தக் காவல் நிலையத்தின் காவல் தெய்வங்களை சுண்டி இழுத்தாரா? வட நாட்டில் நீதி மன்ற வாசலில் துகிலுரியப்பட்டு வீதியில் இழுத்துச் செல்லப்பட்ட அந்த அப்பாவி விவசாயக் குடிப்பெண் தொப்புளுக்குக் கீழ் மைதான இடைவெளிவிட்டு புடவை கட்டிக்கொண்டிருந்தாரா? கறுப்பு பர்தாவிற்குள் சுண்டு விரல் நுனிகூட வெளியில் தெரியாமல் வாழ்ந்தும் மானபங்கப் படுத்தப்படும் இஸ்லாமிய சகோதரிகள் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய எந்த பாகங்களை மறைக்காமல் ஆண்களின் வக்கிரங்களைத் தூண்டினார்கள்? விதைத்து எடுத்து, தமிழ்ப் பெண்ணாய் வளர்க்கப்பட்டு, இழுத்து, போர்த்தி 'குடும்பப் பாங்காய், குத்து விளக்குகளாய் இருக்கும் பேரிளம் பெண்கள்கூட நமது ரோட்டோர ரோமியோக்களின் சீண்டல்களிலிருந்து தப்பிக்க முடிவதில்லையே ஏன்?' இதற்கும் பதிலை திரு.விசு அவர்களே சொல்லி விடுகிறார், "ஆறு வயது பாலகன் முதல் அறுபது வயது கிழவன் வரை" ஜொள்ளு சபலிஸ்டுகள் என்று! பிஞ்சிலேயே வெம்பிப் பழுத்த பின்புறம் முதிராத இந்த இனத்தை எந்த குலவிளக்கு வந்து வழிகாட்டி சீர்படுத்த முடியும்?

ஆழ்ந்து யோசித்தால், இந்த வம்பும் பெண்கள், வீட்டை விட்டு வெளியேறுவதால் தானே வருகிறது. கண்ணகியைப்போன்று எல்லாப் பெண்களும் "வண்ணச் சீரடி மணமகள் அறிந்தலள்" என்று படி தாண்டாமல் வாழ்ந்தால் எவ்வளவு நன்மைகள் விளையும் இந்நாட்டிற்கு? ஆண்களுக்கு பெண்ணாசை வராது. பெண்கள் வேலைக்குப் போக முடியாது. அதனால் ஆண்களுக்கு வேலை வாய்ப்புக் கூடும். இந்நாட்டு ஆண்களின் வேலையில்லாத திண்டாட்டம் பெருமளவு குறையும்.

பிற ஆண்களைக் காணக்கூடிய வாய்ப்புக் கூட பெண்களுக்கு இருக்காது. ஆதலால், ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரையாய், தன் கணவனையே தெய்வமாக நினைத்துத் தெய்வமாய்ப் போற்றுவாள். அதனால் கற்புக்கரசியாவாள். நாட்டில் மாதம் மும்மாரி பொழியும். இந்தியா தற்காப்பு என்று ஆயுதங்களுக்கு செலவு செய்ய வேண்டியிருக்காது. எதிரி நாட்டிற்கு இந்த கற்புக்கரசிகளில் யாரையாவது அனுப்பினால், அவர்கள் ஆணையை ஏற்று அக்னி பகவான் அந்த ஊரையே எரித்துச் சாம்பலாக்கி விடுவார்.

"முடியைக் குறைத்து அலங்கோலம் ஆக்கிக்கொள்ளத் தெரியாது" என்கிறார் திரு.விசு. பத்தாண்டுகளுக்கு முன் 'பாப்' செய்த தலையும், மரியாதைக்குரிய உருவமுமாக தீர்க்கமான தீச்சுடர் போன்று ஒளிர்ந்து இந்திய தேசத்தை ஆண்டாரே அன்னை இந்திரா! அவரை திரு.விசு அவர்கள் எப்படி அழைப்பார்?



மழித்த புருவமும், மேக்கப் சாதனமும், உதட்டுச் சாயமும், கவர்ச்சியான அலங்காரமுமாய் வளையவரும் அவரது திரையுலகத் தோழியர்களின் ஆடை இடை வெளிகளில் தெரியும் உடம்பில் போஸ்டர் ஒட்ட நினைப்பதை திரு.விசு அவர்கள் சரி என்பாரா?

தங்களது உள்மன அழுக்குகளைப் போக்கிக்கொள்ளத் தெரியாத, ஒப்புக் கொள்ளவும் திராணியில்லாத ஆண் வர்க்கம், காலம் காலமாய் பெண்ணை வெறும் போதைப்பொருளைப்போல் சித்தரித்துக் கொண்டிருக்கிறது.

உங்கள் மனதைக்கட்டுக்குள் வைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். பெண்-சுயசிந்தனையுள்ள, சம உரிமையுடைய சகமனுஷி. காது கடுக்கன், ரெட்டை வடச்சங்கிலி போன்று, பாதுகாப்பாய் உங்கள் சட்ட திட்டங்கள் என்ற இரும்புப் பெட்டிக்குள் அவர்களைப் பூட்ட நினைக்காதீர்கள். ■

## ஏன் கூடாது?

கணவன் என்று ஒருவனைக் கைப்பிடிக்கும்போது தாலி ஒன்று மட்டும்தான் அவன் கட்டுகிறான். பூவும் பொட்டும் பிறந்ததிலிருந்து பெண்ணுடன் வருபவைதான். ஆண்கள் மனைவியை இழந்தாலும் சமூக அந்தஸ்துடன் இருக்க, பெண்களுக்கு மட்டுமே மங்கலப் பொருட்கள், நிகழ்ச்சிகள் மறுக்கப்படுகின்றன.



ஒரு பெண் தன்னுடைய பாதுகாப்பிற்காகப் பொட்டு வைத்துக்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. முக்காடு போட்டுக்கொண்டு மூலையிலே உட்கார முடியாது. வீட்டிலிருந்து வெளியே சென்று வரவேண்டிய அவசியம் ஏற்பட்டபிறகும் பெண்கள் பழைய-வழக்கங்களையே பற்றிக்கொள்ள வேண்டும் என்பதில்லை. இதைப் புரிந்துகொண்டு பெண்களை, பெண்களே மதிக்கத் துவங்க வேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது-சுகந்தினி**

### உருளைக்கிழங்கு பாயாசம்

**தேவையானவை:**
பால்- 1 லீட்டர்
உருளைக்கிழங்கு- 1(பெரியது)
சீனி- 100 கிராம்.
ஏலக்காய் பொடி- 1 தேக்கரண்டி
முந்திரிப்பருப்பு- 8

**செய்யும்முறை:**
1. உருளைக்கிழங்கை வேக வைத்து தோலை உரித்துக்கொள்ளவும். துருவியில் கிழங்கைத் துருவிக்கொள்ளவும்.
2. பாலைக் காய்ச்சவும். பாலில் கொதி வந்தவுடன் துருவிய உருளைக்கிழங்கையும் சேர்த்து 5 அல்லது 10 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும்.
3. அடுப்பிலிருந்து இறக்கி சர்க்கரை ஏலக்காய் பொடி சேர்க்கவும்.
4. முந்திரிப் பருப்பை பொடியாக நறுக்கி, நெய்யில் வறுத்து, பாயசத்தில் போடவும்.
5. சூடாகவோ, குளிர்ச்சியாகவோ பரிமாறலாம்.

## அழகுக் குறிப்புகள்

முகம் பளபளப்பாக, மென்மையாக இருக்க வேண்டுமா? ஒரு கப் மோர் எடுத்துக்கொண்டு, அதை மெல்லிய தீயில், சுமார் அரைமணி நேரம் வைத்து காய்ச்ச வேண்டும். பிறகு மூன்று மணிநேரம் அப்படியே ஆறவைத்து விடவும். பிறகு மீண்டும் அடுப்பில் வைத்து வெதுவெதுப்பாக சூடுபடுத்திக்கொள்ளவும். அதில்



இரண்டு ஸ்பூன் தேன் கலந்தால் பேஸ்ட் போல் வரும். அதை முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊற வைக்கவும். பிறகு குளிர்ந்த நீரில் கழுவி விடவும். தொடர்ந்து செய்து வந்தால் முகம் புதுப் பொலிவுடன் மென்மையாக இருக்கும்.



அலங்காரப் பொருட்கள் வைக்கப்படும் மேசையில் உள்ள தட்டுகளில் பிளாட்டிங் பேப்பர் (ஈரம் உறிஞ்சும் காகிதம்)போட்டு, அதன் மீது எண்ணை, நகப்பூச்சு, சாந்து போன்ற அலங்கார பொருட்களை வைக்கவும். எண்ணை போன்ற திரவ பொருட்கள் கீழே சிந்தினாலும், மேசை நாசமாகாமல் இருக்கும்.

## வீட்டுக் குறிப்பு

வீட்டுக் கூரையில் இருக்கும் பயன்படாத மின்சார விளக்கு கம்பிகளில், சிறுசிறு தொட்டிகளை மாட்டி பூச்செடிகளை வளர்க்கலாம். அழகாக இருக்கும். மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டதா என்பதை முதலில் நன்றாகச் சோதித்துக் கொண்டபின், மேற்கூறிய இந்த யோசனையைப் பயன்படுத்தவும்.


## இளைப்பதற்கு இதைச் செய்யுங்கள்



உடம்பு இளைக்க வேண்டும். ஆனால் பயிற்சி ஏதும் செய்யமாட்டேன் என்றால் எப்படி? பயிற்சி என்பது குதிப்பது, ஓடுவது மட்டும் இல்லை. நடப்பதுகூட ஒரு பயிற்சிதான். தினமும் 2 கிலோமீட்டர் நடந்துவிட்டு, கொழுப்பு, மாவு இல்லாத காய்கறி, சூப், கீரை என்று சாப்பிடுங்கள். இரண்டு வேளை சாப்பாடு, இரண்டு வேளை சூப் அல்லது இளநீர் என்று முயற்சி செய்து பாருங்கள். இளைத்துப் போகிறீர்களா இல்லையா என்று பாருங்கள்.

## சந்தனமும்-மஞ்சளும் கைகொடுக்கும்

வியர்க்குரு நிறைய இருக்கிறதே என்பது ஒரு கவலைதான். முகம் சொரசொரப்பாக ஆகிவிடும். வெய்யில் காலங்களில் காலையிலும், இரவிலும் சந்தனத்தை நன்றாக அரைத்து முகம், கழுத்து என்று தடவிக்கொண்டு, நல்ல குளிர்ந்த தண்ணீரில் கழுவி வந்தால் வியர்க்குரு குறையும். வெய்யில் படுவதாலும், சூடான இடங்களில் இருப்பதாலும் வியர்க்குரு வரும். அதனால் எப்போதும் குளிர்ச்சியாகச்



சாப்பிட்டு குளிர்ச்சியான இடத்தில் இருக்க வேண்டும். இன்னும் ஒரு செய்தி, மாநிறமாக உள்ள முகம் சிவப்பாக வேண்டும் என்று கிறீம்களைப் போடுவதால் மேலும் கறுப்பாகுமே தவிர சிவப்பாகாது. தினமும் சந்தனமும், மஞ்சளும் அரைத்துப்பூசிக் குளித்துவந்தால் முகம் சற்று நிறமடையும். சிவப்புத்தான் அழகா? மாந்தளிர் மேனியும் ஒரு தனி அழகுதான்.

பரிசுத் திட்ட கூப்பன் இல-15

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

# உங்கள் பாதணி அளவும்-



# ஆயுளின் கணக்கும்!

## ஒரு வித்தியாசமான ஆராய்ச்சி

உங்கள் பாதணியின் அளவுக்கும், உங்கள் ஆயுளுக்கும் இடையில் தொடர்புண்டா...? ஆம்! என்கிறது சுவீடன் நாட்டு ஆய்வாளர்களின் ஆராய்ச்சி முடிவு. 1987ம் ஆண்டு முதல் பல்லாயிரக்கணக்கான ஆண்களையும் பெண்களையும் வைத்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின்படி கிடைத்துள்ள தரவுகள் கூடுமானவரை சரியாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை நோய்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்த சுவீடன் நாட்டு ஸ்டொக்ஹோம் நகரைச் சேர்ந்த டாக்டர் ஹான்ஸ் ஜோஸ், பாதங்களுக்கும் கொள்ளை நோய்களுக்குமிடையில் உள்ள தொடர்புகள்பற்றி ஆராயும்போது தற்செயலாக இந்த உண்மையினைக் கண்டறிந்தார்.

கைரேகைகள் ஒருவருடைய ஆயுள், நோய், வாழ்க்கைமுறை ஆகியவற்றைக் கூறுவதுபோல் பாதத்தின் அளவும் வயதெல்லையினை வரையறுத்துக்கூறுகிறது.

இயற்கையாக-நோய்வாய்ப்பட்டு மரணமடைகிறவர்களுக்கு இந்தக் கணிப்பு 90 சதவீதம் சரியாக இருக்கிறதாம். விபத்துக்களில் சிக்கி மரணிப்பவர்கள் இதற்கு விதிவிலக்கு என்றும் டாக்டர் ஹான்ஸ் கூறுகிறார்.

இந்தப் பக்கத்தில் தரப்பட்டுள்ள பாதத்தின் அளவு சராசரி ஐரோப்பிய மனிதனின் பாதத்துக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாதத்தின் மீது உங்களுடைய வலது பாதத்தினை வைத்து உங்கள் பாத அளவினைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.




| பெண்கள் | |
|---|---|
| பாதணி அளவு | வயது வருடம் |
| 4 | 64-69 |
| 5 | 70-76 |
| 6 | 77-82 |
| 7 | 78-84 |
| 8 | 73-75 |
| 9 | 70-72 |
| 10 | 67-70 |
| 11 | 66-69 |

| ஆண்கள் | |
|---|---|
| பாதணி அளவு | வயது வருடம் |
| 5 | 63-66 |
| 6 | 64-69 |
| 7 | 66-69 |
| 8 | 67-72 |
| 9 | 72-75 |
| 10 | 73-77 |
| 11 | 75-82 |
| 12 | 74-79 |
| 13 | 67-72 |
| 14 | 66-69 |

ஆண்களுக்கான அளவும் பெண்களுக்கான அளவும் தனித்தனியே தரப்பட்டுள்ளன. அந்தந்த அளவுக்கான ஆயுள் கணக்கும் தனியாகத்தரப்பட்டுள்ளன.

உ+ம்: உங்கள் பாத (பாதணி) அளவு 7 என்று வைத்துக் கொண்டால் ஆண்களின் ஆயுள் 66 முதல் 69 வயதாகும். பெண்களின் அளவு 7 ஆனால் அவர்களுடைய ஆயுள் 78 முதல் 84 வரையாகும்.

"பாதணி அளவுக்கும் ஆயுளுக்கும் இடையில் இத்தகைய தொடர்பு எவ்வாறு அமைகிறது என்ற நிலையினை எம்மால் கண்டுகொள்ள முடியாதிருக்கிறது. இருப்பினும் மனிதனின் ஒவ்வொரு அங்க அமைப்பும் அவனுடைய வயதை மட்டுமல்ல, அவனுடைய வாழ்க்கையினையும் துல்லியமாக எடுத்துக் காட்டத்தக்கனவாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்கிறார் டாக்டர் ஹான்ஸ்.

இங்கு தரப்பட்டுள்ள அளவு மட்டங்களை பாத அளவு தொடாமல் இரு கோடுகளுக்கிடையில் அமையுமானால் அளவுக்கு மேலே உள்ள எண்ணைக் கொண்டு கணக்கிட்டுக்கொள்ளலாம்.

□□□

### உங்கள் பாத அளவினைக் கணக்கிட சில குறிப்புகள்:

1. *இப்பக்கத்திலுள்ள பாதச் சுவட்டை வெட்டி ஓர் அட்டையில் ஒட்டிக்கொள்ளுங்கள்.*
2. *படத்தின் குதியின் கீழ் உள்ள கோட்டுடன் உங்கள் வலது குதியினை வைத்து பாதத்தை வைத்து அளவினை எடுத்துக்கொள்ளுங்கள்.*
3. *உங்களுடைய பாதத்தின் பெரு விரல் தொடும் எண்ணே உங்கள் பாத (அணி)த்தின் அளவாகும்.*
4. *ஆண்கள் வலது புற கணக்கினையும் பெண்கள் இடது புறக் கணக்கினையும் அளவாகக் கணக்கிட்டுக் கொள்ளவும்.*
5. *இப்பொழுது அளவுக்கேற்ப தரப்பட்டுள்ள ஆயுள் கணக்கை ஒப்பிட்டுப் பாருங்கள்.*
6. *வரிகளுக்குக் கீழ் உங்கள் பெரு விரல் இருக்குமானால் விரலுக்கு மேற்புறமுள்ள எண்ணை உங்கள் அளவாகக் கொள்ளுங்கள்.*

முக்கிய குறிப்பு:

பொதுவாக ஒருவனுடைய ஆயுள் அவனுடைய பரம்பரை மற்றும் அவனுடைய வாழ்க்கை நெறி, பழக்கவழக்கங்கள் உணவு முறை ஆகியவற்றுடனும் பின்னிப்பிணைந்திருக்கிறது. பரம்பரை பரம்பரையாக ஒருவனுடைய நோய் தொடர்பு பட்டிருக்குமானால் நிச்சயமாக அவனுடைய ஆயுளை இத்தகைய அளவுகளைக் கொண்டு வகுப்பது பொருந்தாது.



"மன்னிக்க வேண்டும். பேருந்திலிருந்து தப்பிவர தாமதமாகிவிட்டது."

# நூறு வயதில் நடந்த திருமணம்

## "எத்தனை பெரிய மனிதருக்கு இத்தனை சிறிய குணமிருக்கு!!"

50இலும் ஆசை வரும். கையிலே பணமிருந்தால் நூறிலும் கல்யாண ஆசை வரும்.

திருமண விழாவில் தம்பதிகளை வாழ்த்தும்போது 100 வருசம் வாழணும் என்று வாயார வாழ்த்துவார்கள்.


ஆனால் 100 வயதான ஒருவருக்கு திருமணம் நடந்தால் என்ன சொல்லி வாழ்த்துவது?

50இல் ஆசை வருவதுகூட நியாயமாக இருக்கலாம். 100இல் கல்யாண ஆசை வருவது அநியாயம்தானே? என்ன செய்வது பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் காலம் இது. அதனால்தான் கென்யாவில் உள்ள 100 வயதான பணக்கார கிழவனுக்கு 14 வயதான இளம் பெண்ணை தாரை வார்க்க வைத்துவிட்டது.

பெண்ணின் பெயர் சல்தனா லத்தீ. குடுகுடு மணமகன் பெயர் மொகமட் அலு.

திருமணத்திற்கு மணமகனை அழைத்து வருவார்கள். குடுகுடு மணமகனை எப்படி அழைத்து வந்திருப்பார்கள்? இரண்டுபேர் தாங்கி வந்தனர். இந்த கண்றாவியைக் காண 400 பேர் வந்திருந்தனராம். 400 பேருக்கும் மூக்கு முட்ட விருந்துபோட்டு தாத்தா அசத்திவிட்டாராம்.

இன்னொரு செய்தி. மணப்பெண் கவலையே படவில்லையாம். 'என் கணவருக்கு வாரிசுகளைப் பெற்றுத் தருவேன்' என்கிறாராம். முடியுமா? முயற்சிதானே வாழ்க்கை!



# புற அழகும் அக அழகும்

படத்தில் இருப்பவர் ஜனட் ஹோய். உடலை அழகாகவும், துடிப்பாகவும் வைத்திருப்பதால் மனதில் உற்சாகம் ஏற்படுகிறது. தாழ்வு மனப்பான்மை இன்றி வாழ்வை சந்திக்க முடிகிறது என்கிறார். விளம்பரப் படங்களில் நடிப்பதன் மூலம் ஜனட் கை நிறைய சம்பாதிக்கிறார்.



# உலக அதிசய புகைப்படச் செய்தி

# ஒரே ஒரு ஊரிலே ஒரே முகச்சாயல்

## ஒருவரல்ல இருவரல்ல 237 பேர்!



இவர்கள் 15 பேரும் ஒரே சாயலில் உள்ள உறவினர்கள்

ஒரே சாயலில் உள்ள இரண்டுபேர் இருந்தாலே போதும். சிக்கல் ஆரம்பமாகிவிடும். அடையாளம் காண்பது பெரிய தலைவலிதான்.

அப்படியிருக்கும்போது ஒரே ஒரு ஊரில் ஒரே முகச் சாயலில் 237 பேர் இருந்தால் எப்படியிருக்கும்?

அப்படியும் இருக்குமோ என்று ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா?

இந்தியாவில் உள்ள கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூர். அங்கிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கலாகூனா என்னும் கிராமத்தில்தான் அந்த ஆச்சரியம் இருக்கிறது.

ஆண், பெண், குழந்தைகள், முதியவர்கள் அனைவரும் ஒரே முகச்சாயலில் இருக்கின்றனர்.

இதனையறிந்து ஜெர்மன் உடற்கூற்றியல் விஞ்ஞானி டாக்டர் ஏர்னஸ்ட் புச்சேர்ல்ஸ் அங்குபோய் ஒரு வருடம் தங்கியிருந்து ஆராய்ச்சி நடத்தினார்.

இருப்பினும் சரியான முடிவுக்கு வர முடியவில்லை.

பெண்கள் கருத்தரித்ததும் அக்கருக்களை ஏதோ ஒரு குறிப்பிட்ட ஜீவ அணுவின் தாக்கம் ஒரே ரீதியில் தாக்குவதனாலேயே இந்த ஒற்றுமை ஏற்படக்கூடும் என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

கிராமத்தவர்கள் அனைவரும் ஒரே முகச்சாயல் கொண்டவர்களாக இருப்பதால் அவர்களுக்கிடையிலும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுபிடிப்பதில் தடுமாற்றம் ஏற்படுவதுமுண்டு.

முக ஒற்றுமை இருந்தாலும் ஏனைய பல அம்சங்களில் நிறைய வித்தியாசம் காணப்படுவதாக 81 வயதான இந்திரா கபூர் எனும் பாட்டி கூறுகிறார். ஒருவர் நடந்து வரும் பாணியினை வைத்தே வெகு தொலைவில் அவர் வரும்போது அவரை அடையாளம் கண்டுவிட முடியும் என்கிறார் அவர். குரலில் வித்தியாசம் இருப்பதும் அடையாளம் காண்பதற்கு உதவும் சாதனமாகிறது என்று கூறுகிறார்.

இவர்கள் அனைவரும் இந்துக்கள். அக்கிராமத்திலுள்ள ஆசிரமத்துக்குச் சென்று பக்தி செலுத்துவதில் எவரும் தவறுவதில்லை. "நாங்கள் கர்மாவில் நம்பிக்கை உள்ளவர்கள். மனிதர் ஒருவருக்கொருவர் பேதம் கற்பிக்கலாகாதென்பதற்காகவே எங்கள் முகங்கள் யாவும் ஒன்றைப் போலுள்ளன.

"அந்தஸ்து பேதமின்றி ஒவ்வொருவருக்கும் மதிப்பளித்து மனித நேயத்தை வளர்க்க வேண்டும் என்பதனையே எமது முக ஒற்றுமை கற்பிக்கிறது" என்று திருமதி இந்திரா கபூர் தெரிவிக்கிறார்.


SHARMILA TRAVELS

IATA

கடல் கடந்த பயணங்களுக்கான கடுகதி வேக ஏற்பாடுகளுக்கு நம்மை நாடுங்கள். நன்மை பெறுவீர்கள்!

சர்மிளா ட்ராவல்ஸ்

F 23-26, Peoples Park,
Gas Works Street, Colombo 11, Sri Lanka.
Tel : 423840, 436726, 436727 Telex : 23202 SHARMI CE
Attn : SHARMI Fax : 94-1-438859

ASHMILA GRINDING MILL

NATURALLY TRADITIONAL METHOD WITH NEW TECHNOLOGY

DOOR TO DOOR SERVICE !!

CALL US !!!

P.Ramachandran

TEL 333330, 336169
07128505

No. 129/58, Jampettah Street,
Colombo - 13, Sri Lanka.
R.No. 13709; Trade License No.
E-MT/TL/DI/8/1262/87

பிரதா ஜுவல்

இல.39, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை
வெள்ளவத்தை, கொழும்பு-06

தங்கத்தில் போடும் பணம்
ஒருபோதும் சேதாரமாகாது!
பிரதா ஜுவல் நகைகள்
இன்றுபோல் என்றும்
பிரகாசிக்காமல் போகாது.

பொன் வண்ண அழகால்
பெண்ணுக்கு பெருமை சேர்க்க
நாடுங்கள்-வாருங்கள்

தங்கம் வாங்க-விற்க, வெள்ளி நகைகள்
ஓடரில் செய்துதர எம்மை நாடுங்கள்.
குறைந்த நேரம்-நிறைந்த சேவை

PRATHA JEWEL
NO.39, W.A.SILVA MAWATHA
WELLAWATHA
COLOMBO-06
580375




www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மனிதனுக்கும் கொம்பு வரும்!

தகவல் பெட்டி



மனிதனுக்கும் கொம்பு முளைக்கும். முன்னரும் கொம்போடு பிறந்த மனிதரை முரசு அறிமுகம் செய்திருந்தது.
இதோ இப்போது அறிமுகமாகின்றவரின் பெயர்- வெங்க்.
சீனாவைச் சேர்ந்தவர். அங்குள்ள மஞ்சூரியா மாநிலத்தில் ஆசீனாற்றின் என்னும் ஊரில் கொம்போடு ... பார்க்க வாழ்ந்தவர்.
... என்னும் தொழிற்சாலையில் வேலை பார்த்த போது 1730ம் ஆண்டு எடுக்கப்பட்ட படமே இது.
இந்த படத்தை கமராவில் 'கிளிக்' செய்தவர் 'நாசனல் சிற்றி பாங்க் ஒவ் நியூயோர்க்' வங்கியில் பணிபுரிந்த ரசியர் ஒருவர்.
உலகப் புகழ்பெற்ற படங்களை சேகரிப்பதில் பிரபலமான 'ஜிப்ளி' அந்த ரசியருக்கு பெருந்தொகைப் பணம் கொடுத்து இப்படத்தை வாங்கி வெளியிட்டார்.

# முட்டை விலை 2 இலட்சம்



இந்த பாவையின் கரங்களில் உள்ளது பலூன் அல்ல, முட்டை. இந்த மாபெரிய முட்டையை இராட்சத யானைப் பறவை ஒன்று போட்டுவிட்டு பறந்துவிட்டது. இந்த அதிசய முட்டையை இங்கிலாந்திலுள்ள பெண் ஏலத்திற்கு விட யோசித்துள்ளார். 2 இலட்சத்திற்கு ஒரு ரூபா குறைந்தாலும்கூட கொடுக்கும் எண்ணம் கிடையவே கிடையாதாம்.

ஆனால் இப்படியான அதிசய சமாச்சாரங்களை எவ்வளவு கொட்டிக்கொடுத்தும் வாங்குவதற்கு வெளிநாட்டில் ஆட்கள் இருக்கிறார்கள்.

# நள்ளிரவில் எழுப்பிவிடும் கருவி!

## சேலம் வாலிபரின் புதிய கண்டு பிடிப்பு

தமிழ் நாட்டில் தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. அதுவும் சேலம் போன்ற பகுதிகளில் தண்ணீர் பஞ்சம் பாடாய் படுத்துகிறது.

குடிநீர் குழாய்கள்முன் நள்ளிரவு வரை காத்துக்கிடந்தும் தண்ணீர் வராத கோபத்தோடு தூங்கப் போவார்கள். அவர்கள் தூங்கத் தொடங்க தண்ணீர் வரத் தொடங்கும். இதனால் ஒரே பிரச்சனை. தூங்காமல் எத்தனை நாளைக்குத்தான் இருக்க முடியும்.

குடும்பத் தலைவிகளின் கவலையை தீர்க்க தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டார் சேலம் வாலிபர் அப்துல் சலாம். ஆராய்ச்சி வெற்றியாகிவிட்டது.

அவர் ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளார்.

அதனை வாங்கிப் பயன்படுத்தினால் குடும்பத் தலைவிகள் நிம்மதியாக தூங்கலாம். எத்தனை மணிக்கு தண்ணீர் வந்தாலும் அந்தக் கருவி அவர்கள் பெயர் சொல்லி அழைத்து எழுப்பிவிடும்.

"சரசு தண்ணீர் வந்துருக்கம்மா. எழும்பம்மா." என்று குரல் கொடுக்கும்.

அந்தக் கருவியில் டேப்ரெக்கோடர், சிறிய கடிகாரம், சிறிய சர்க்யூட் ஆகியவை உள்ளன. குடிநீர் குழாயிலிருந்து தண்ணீர் விழும் இடத்துடன் சேர்த்து அந்தக் கருவியை கட்டிவிட்டால் போதும்.



இதன் விலையும் அதிகமில்லை. 200 ரூபா மட்டும்தான்.

அப்துல் ஸலாமை சேலம் பாராட்டுகிறது.

# கரடி வதை தொடர்கிறது!

## துடிக்கவைத்து துள்ளி ஆடும் பயிற்சி!!



துருக்கி நாட்டில் கரடிகளை வைத்து பணம் சம்பாதிப்பவர்களின் கொடுமைகள் பற்றி முரசு 24வது இதழ்-9ம் பக்கத்தில் படத்துடன் தகவல் வெளியிட்டிருந்தோம்.

இத்தகைய கரடிக் கொடுமைகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பரவிவிட்டதாக மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன.

கிரீஸ், துருக்கி, பல்கேரியா, ருமேனியா, மற்றும் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த நாடுகள் பலவற்றிலும்கூட இக்கொடுமை பரவியுள்ளது.

வாய்பேசா மிருகங்களைக் கொடுமைப் படுத்துவதைத் தடுப்பதற்கான உலகளாவிய நிறுவனம் இதனையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. இத்தகைய மிருகங்களுக்கு மீட்சி தரும் உலகளாவிய பிரசார இயக்கம் ஒன்றினை விம் டி கொக் என்பவர் ஆரம்பித்துள்ளார்.

கரடிக்குட்டிகளை பிறந்து ஓரிரு மாதங்களிலேயே தாய்க் கரடியிடமிருந்து பிரித்து விடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் குட்டியின் முன்னிலையில் வைத்து தாய்க்கரடிக்கு மிகப் பயங்கரமான சித்திரவதை தரப்படுகிறது. அதனைக் கொன்று, குட்டியின் கண்முன்னே அதன் தாயின் தோலுரிக்கப்படுகிறது. இதனால் அக்குட்டிக்கு என்றுமே மறந்துவிட முடியாத கொடிய பயம் ஏற்பட்டு விடுகிறதாம்.

குட்டியின் மூக்கில்-மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு மாட்டுவதுபோல், துளையிட்டு இரும்பு வளையம் ஒன்று மாட்டப்படுகிறது. இதிலிருந்து சங்கிலி ஒன்று பிணைக்கப்படும்.

தொடர்ந்து கரடிக்குட்டிக்கு நடனம் கற்பிக்கப்படுகிறது. இதுவும் மிக கொடுமையான முறையில்தான் நடைபெறுகிறது.

நெருப்புத் தணலின் மீது உலோகத்தாலான தாம்பாளம் ஒன்று வைக்கப்படும். அத்தாம்பாளத்தில் சூடு தாவியவுடன் அதன்மீது கரடி ஏற்றப்படும். பாதங்களில் சூடு தாங்காது கரடி துள்ளும். இதற்கேற்ப மேளம் தட்டி ஒலி எழுப்புவார்கள். இதே பழக்கத்தில் மேளத்தில் தாள ஒலிகேட்டதும் கரடி துள்ளித்துள்ளி ஆடப்பழகிக் கொள்கிறது.


இவ்வாறு பழக்கப்பட்ட கரடிகள் தெருத் தெருவாக இழுத்துச் செல்லப்படுகின்றன. பிறநாட்டு உல்லாசப் பயணிகளைக் கண்டதும் கரடி ஆட்டம் தொடங்கும். அவர்களும் கரடியை ஆட்டுவிப்பவனுக்கு போதிய சன்மானம் அளித்து விடுகின்றனர். பணம் சம்பாதிக்க கரடிக்கு புதுப்புது விதமான பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன. இப்பயிற்சிகளெல்லாமே சித்திரவதையுடன் கூடியவைதான்.

இத்தகைய சித்திரவதைகளைத் தாங்கும் கரடிகள் நீண்டகாலம் உயிர்வாழ முடிவதில்லை. ஆகவே புதுப்புதுக் குட்டிகள் தேவைப் படுகின்றன. போட்டிகளும்-வியாபார ரீதியில் பெருகுவதால் இந்தக் கரடி இனங்கள் அழிந்து வருகின்றன. உலகிலுள்ள 8 வகை கரடி இனங்களில் இன்று 5 வகை இனங்கள் சந்ததி விருத்தியின்றி அழிந்தொழிந்து போய்விட்டன என்றும் மேலும் இரு இனங்கள் அருகி வருகின்றன என்றும் ஐரோப்பாவில் மிருக இன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த ஜோனதன் பியேர்ஸ் தெரிவிக்கிறார். இந்த இனக் கொலை மற்றும் சித்திரவதைகளுக்கெதிராக சம்பந்தப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மிருக நேய உணர்வாளர்கள் தீவிர போராட்டம் நடத்த முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# சாவை விரட்டிய சர்வாதிகாரி!

## ஆண்டது 12 ஆண்டு

## அழிக்க நினைத்தார்கள் 31 முறை



படத்தில் உள்ளவர் பிரான்ஸ் நாட்டின் பிரபல சர்வாதிகாரி. பெயர்- சார்ள்ஸ் டி.கூல்.

பெயரில் கூல் இருந்தாலும் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு போட்ட ஆட்டத்தில் சூடு அதிகம்.

பொறுக்கமுடியாத தீவிரவாதிகள் கூல்மீது குறிவைத்தனர்.

ஒரு தடவை இரு தடவையல்ல 31 தடவை. 31 தடவையும் கூல் கொலை முயற்சிகளில் இருந்து தப்பினார்.

நாட்டின் தலைவர் ஒருவருக்கு எதிராக அதிக தடவை கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதும், அதில் இருந்து தப்பியதும் கூல் பெயரை உலக சாதனையாளர் பட்டியலில் இணைத்துவிட்டது. கின்னஸில் கூலின்படம் இருக்கிறது.

கூல் பிரான்ஸ் மக்களது மனதில் இருக்கிறாரோ இல்லையோ சாதனைப் புத்தகத்தில் இருக்கிறார்.

கூல் பதவியில் இருந்தது 1958முதல் 1970வரை கூல் பிரான்ஸ் ஜனாதிபதியாக இருந்தார். 12 வருடங்கள். அந்த 12 வருடங்களில்தான் 31 கொலை முயற்சிகள்.

சார்ள்ஸ் டி கூலின் வரலாற்றில் இடம்பெற்ற கொலை முயற்சிகளை கருவாக வைத்துத்தான் 'த டே ஒவ் த ஜக்கோல் (The day of the Jackal) என்னும் ஆங்கிலப் படம் உருவாக்கப்பட்டது.

திரையிடப்பட்ட இடமெங்கும் படம் வசூலில் சாதனை உடைத்தது.

கூலின் கதையில் இருந்த 'ஹீரோ' படத்தை சூப்பர் 'ஹிட்' ஆக்கிவிட்டது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சினி

## காதோடு சொல்லுகிறோம்

★ கோடம்பாக்க நடிகைகள் சிலரது தாய்க்குலங்கள் பம்பாய் நடிகைகள்மீது ஆத்திரப்படுகிறார்களாம். போற போக்கில் பூனாபட்டும், பூனாபேடியும் கோடம்பாக்கம் வந்தால் உள்ளதும் போச்சு என்று புலம்புகிறார்களாம்.

★ அப்சரா நடிகை எத்தனையோ வழிகளில் முயன்றும் சான்ஸ் கிடைக்கவில்லை. அதனால் தயாரிப்பாளர்கள்மீது கோபமோ கோபம். இப்போது திருமணம் செய்ய தயாராகிவிட்டாராம்.

★ ரோகிணி நட்சத்திரப் பெயர் உள்ள நடிகை தன்னால்தான் 'மகளிர் மட்டும்' பிய்த்துக்கொண்டு ஓடியது என்று ஒருபோடு போடுகிறாராம். இன்னமும் தான் ஒரு சூப்பர் நடிகையாக முடியவில்லையே என்று வருத்தத்தில் இருக்கிறாராம். அதனால் ஜோசியர்கள் சிலரையும் நாடியுள்ளாராம்.

★ மலையாள சூப்பர் மோகன் லாலுக்கு தூதுமேல் தூது விடுகிறாராம் மீன் நடிகை. மலையாளத்தில் நல்ல இடத்தை பிடித்தே தீருவேன் என்று உணர்ச்சிவசப்படுகிறாராம்.

★ சுகன்ய நடிகையின் தாய்க்குலம் போடும் உத்தரவுகளால் இயக்குநர்கள் வெறுப்படிக்கிறார்கள். முகத்தை மட்டும் குளோசப்பில் காட்டாமல் வேறு பகுதிகளை நோக்கி 'கமரா' நகர்ந்தால் ஊதியம் உயரவேண்டும் என்கிறாராம். வம்புதான்.

★ இந்த ஆண்டு கோடம்பாக்கத்தில் ஒரு கலக்கு கலக்குவேன் என்று சபதம் செய்திருக்கிறார் இராவண நாயகி. எப்படிக் கலக்கப் போகிறாரோ?

★ வில்லனாக மாறிவிட்ட 'ஏழு' நடிகர் மீண்டும் போதை சமாச்சாரங்களில் நாட்டம் கொள்கிறாராம்.

## மதுபாலா பற்றி மதுபாலா

தன்னைப் பற்றி மதுபாலா சொன்னவை இவை:
காதலிப்பது-கண்ணாடியை
ரசிப்பது- வாசனைப் பொருட்கள்
மிகப் பெரிய ஆயுதம்-நாக்கு
மிகத் தேவைப்படுவது- வேலை, வேலை
மறக்க முடியாத நிமிடம்-திரைப்...
வெட்கப்படவைத்த சம்பவம்-அதை சொல்லவே வெட்கம்
களைப்படைவது- சென்று-தூக்கம்
தழுவுவது-என் உடைகள்
பலம்- ரசிகர்கள், நண்பர்கள், உறவினர்கள்



## மோகனின் வியாபாரம்

## ரோஜாவுக்கு ஹிட்

தெலுங்கில் பாலகிருஷ்ணா ரோஜா ஜோடி சேர்ந்து நடித்த 'பைரவதீபம்' சூப்பர் ஹிட். தமிழில் 'விஜய பிரதாபன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. தெலுங்கில் ஒரு ரவுண்ட் வரும் நம்பிக்கையில் இருக்கிறார் ரோஜா.

## குழந்தை பிறந்த நேரம்

நாகார்ஜுனுக்கும் அமலாவுக்கும் குழந்தை பிறந்த நேரம் நல்ல நேரமாம். நாகார்ஜுன் நடித்த 'ஹலோ பிரதர்' தெலுங்கில் வெற்றிகரமாக ஓடுகிறது. தமிழிலும் மொழி மாற்றம் செய்யப்படலாம்.

## ஸ்ரீதேவிக்கு எந்த ஊர்?

ஸ்ரீதேவிக்கு சொந்த ஊர் எந்த ஊர் என்று கேட்டால் எல்லோரும் சிவகாசி என்கிறார்கள். ஸ்ரீதேவி தமிழ்நாட்டைச் சேர்ந்தவரல்ல தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர். ஆந்திராவைச் சேர்ந்தவர் என்று ஒரு செய்தி பரவியிருக்கிறது ஸ்ரீதேவி ஏன் மறுக்கவில்லை?

## முதல் வாய்ப்பு!

நிழல்கள் ரவிக்கு ஹிந்திப்பட வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதுதான் ரவியின் முதல் ஹிந்திப்படம். படத்தின் பெயர் 'ஜிந்தகி கி அதாலத்'. இதில் கதாநாயகன் மிதுன் சக்கரவர்த்தி. கதாநாயகி யார் தெரியுமோ? நம்ம கௌதமி.

## இவர் மட்டுமே

தற்போதைய இளம் கதாநாயகர்களில் தமிழ், மலையாளம், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளிலும் நடிப்பவர் யார்? ரமேஷ் அரவிந்த்!



புவியில் காணாத பொங்கும் மங்களத்தை இந்த பூவையின் முகம் அறிமுகம் செய்கிறதோ?

## பெயர் ரெடி. நடிகை....?

இடையிலே காணாமல் போன ராமராஜன் மீண்டும் நடித்துவரும் படம் 'வள்ளல் மகன்'. இயக்கம் கங்கை அமரன். படத்தில் நடிக்க புது முகம் தேடும் அமரன் ஸ்ரீரம்பை, மீனாம்பிகை என்று இரு பெயர்களை கையில் வைத்துக்கொண்டு பெயருக்குத் தோதாக தேடுதல் நடத்துகிறார்.

## குஷ்பூ சமாச்சாரம்

பிரபுவுக்கு ஜோடியாக குஷ்பூ நடித்ததுதான் அதிகம் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. கன்னடப் படங்களையும் சேர்த்தால் அர்ஜுனும் குஷ்பூவும் சேர்ந்து நடித்துள்ள படங்கள் அதிகம். மொத்தம் பதின்மூன்று.

## ரூபினியின் நேரம்

'தாமரை' படத்தில் நெப்போலியனுக்கு ஜோடியாக நடிப்பவர் ரோகிணி. இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார் ரூபினி. ஒரு பாடல் காட்சியில் வந்து ஆடுவதைக் காட்டிலும் இது மேல் என்று நினைத்துத்தான் சம்மதித்திருப்பாரோ?

## பாடுவதற்கு தயாராகிறார்கள்

தியாகராஜ பாகவதருக்குப் பின்னர் பல நடிகர்கள் பின்னணி பாடி வருகிறார்கள். கமல், ரஜினி, கார்த்திக், சரத்குமார், 'டூயட்'டில் பிரபு என சத்தியராஜ், விஜயகாந்த் தவிர முன்னணி நடிகர்கள் பாடிவிட்டார்கள். நடிகைகளில் கே.பி.சுந்தராம்பாளுக்குப் பின்னர் மனோரமா பல பாடல்கள் பாடியுள்ளார். ஸ்ரீவித்யா ஒரு பாடல் பாடியுள்ளார். தற்போது மோகினி, சிவரஞ்சனி பின்னணி பாடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.



## அனுபவம் உதவும்

எம்.ஜி.ஆர், சிவாஜி உட்பட பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து ஜோடியாக நடித்தவர் தேவிகா. பின்னர் இவரது மகள் கனகாவை சினிமாவில் அறிமுகப்படுத்தி அவரது வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்து வருகிறார். இவர் மீண்டும் சினிமாத்துறையில் முழு மூச்சுடன் செயற்படத் திட்டமிட்டுள்ளார். கனகா நடிக்கும் படமொன்றிற்காக கதை-திரைக்கதை-வசனம் எழுதி சொந்தமாகத் தயாரிக்கவுள்ளார்.

## ஆடுவதில் நாட்டம்

'ஜென்டில்மேன்' படத்தில் கவர்ச்சி நடனம் ஆட ஆரம்பித்து ... தெலுங்குப் படங்களிலும் நடனமாடி வருகிறார் ...

'தொடர்ந்து கவர்ச்சி நடனமா?' ... 

## ஹீரா யாருக்கு விசிறி?

இந்தியில் தற்போது முன்னணியில் இருக்கும் ஜூஹி சாவ்லாவின் தீவிர இரசிகையான ஹீரா, ஜூஹி நடித்த படங்களை எல்லாம் உடனடியாகப் பார்த்துவிடுகிறார்.

தற்போது இந்தியில் உருவாகிவரும் 'ஜென்டில்மேன்' படத்தில் ஜூஹியுடன் இணைந்து நடிப்பதைப் பற்றிப் பெருமையாகச் சொல்லுகிறார் ஹீரா.

## ஊடிய பின் வருவது?

அதர்மம் படம் நன்றாக ஓடிக்கொண்டிருப்பதால் படு திருப்தியாக இருக்கிறார் முரளி. இரசிகர்களது இரசனை அடிக்கடி மாறிக் கொண்டிருக்கிறது.

எந்தப் படம் ஓடும்? எது ஓடாது? என்று புரிந்துகொள்ளவே முடியவில்லை என்பது முரளியின் கவலை.

முரளியின் சந்தோசமான நாட்கள் எவை தெரியுமோ? இதோ அவரே சொல்கிறார்:

"மாதத்தில் ஒரு முறையாவது மனைவியுடன் ஊடலாகி, மறுபடியும் சமரசமாகும் நாட்கள். அந்த நாட்களில் கிடைக்கும் 'கவனிப்பே' தனி"

முரளியின் அனுபவம் அப்படி!

இவ்வருடம் தனக்கு ஒரு திருப்பமாக இருக்கும் என்று நம்புகிறார்.

## உண்மையாக ஒரு அறை!

'பவித்ரா' படத்தில், கீர்த்தனாவின் காதலனாக நடிப்பவர் 'அமராவதி' படத்தின் நாயகன் அஜித். விபத்தொன்றில் அடிபட்டு உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அவரைப் பார்க்க வரும் காதலி கீர்த்தனாவை, தாதி ராதிகா உள்ளே விட மறுத்து விடுகிறார். ஆனால் தடையை மீறிப் பாய்ந்து சென்று காதலனைப் பார்க்கிறார்.

அப்போது பளார் என்று கீர்த்தனாவின் கன்னத்தில் ராதிகா அறைய வேண்டும். இந்தக் காட்சியில் மிகவும் ஒன்றிப்போன ராதிகா நிஜமாகவே அறைந்து விட்டார். காட்சி முடிந்ததும் இருக்கைக்கு வந்த ராதிகா கீர்த்தனாவின் கன்னத்தை இதமாகத் தடவிக்கொடுத்தார்.




www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



"பாதகஞ் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா- அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"
-சுப்பிரமணிய பாரதியார்-



# கற்று சிறந்திடுவோம்

1. மூன்றெழுத்தில் மொழி மலர்ந்து,
மூவிரெண்டில் பள்ளி சென்று ஈரெட்டு வகுப்புயர்ந்து எமதறிவை வளர்த்தெடுக்க கல்வி என்னும்களஞ்சியத்தை கசப்பின்றி கற்றிடுவோம்.
2. கல்வி கற்கையிலே சிறு கசப்பு வரும்;
தொடக்கத்தில் சில கணங்கள் தொல்லை தரும்;
கற்ற பின்னே கற்கண்டாய் இனிப்பு தரும்.
கற்று முடிக்கையிலே உள்ளத்தில் மகிழ்ச்சி வரும்.
3. மாறுபடும் மனிதரைப்போல் கல்வி மாறிடுமோ? மங்கிப்போகும் ஒளியைப்போல் கல்வி அணைந்திடுமோ?
பட்டுவிட்ட மரத்தைப்போல் கல்வி மறைந்திடுமோ?
காலங்கள் பல சென்றும் கல்வி குறைந்திடுமோ?

கந்தப்பெருமாள் நிமலதாசன்-மட்/மாங்காடு ச.வி.

## பாப்பா முரசு சிறுகதை

# மூளையை விற்கலாமா?

கடைவீதிப் பக்கம் போன ராசாக்கண்ணுவுக்கு அங்கே ஒரு கடையில் தொங்கிய விளம்பரப் பலகை ஆச்சரியப்பட வைத்தது. அந்தப் பலகையில் அப்படி என்னதான் எழுதி இருந்தது!

'இங்கே மனித மூளைகள் விற்கப்படும்.'

இந்த அறிவிப்புத்தான் அங்கே காணப் பட்டது. மனிதன் மூளையை எப்படி விற்க முடியும்? தைரியமாக யார் அதன் விலையைக் கேட்டு அங்கு வருவார்கள்? யாராவது மூளையைத் தப்பித் தவறி விலை கேட்டால் அது, 'அவனிடம் இல்லை' என்றுதானே கடைக்காரன் நினைப்பான்?

இப்படிப் பல கேள்விகள் அவன் மனதிற்குள் எழுந்தன. தனது சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள அவன் ஒரு உபாயம் செய்தான்.

பயமின்றி அந்தக் கடைக்குள் சென்றான்.


"கடைக்காரரே, அதோ அங்கே நிற்கிறானே அவனுக்கு மூளை வேண்டுமாம். உங்களிடம் வந்து நேரில் கேட்கக் கூச்சப்படுகிறான். அவனுக்காக நான் கேட்கிறேன். அதன் விலை என்ன?" என்று சற்றுத் தொலைவில் நிற்பவனைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

கடைக்காரர் சற்றும் சிரிக்காமல், "அறிவாளி மூளை வேணுமா? முட்டாள் மூளை வேணுமா?" என்று கேட்டான். ராசாக்கண்ணுவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அறிவாளி மூளை வேண்டும் என்று கேட்டால் அவனுக்கு அறிவு இல்லை என்றல்லவா கடைக்காரன் நினைப்பான். அதனால் "முட்டாள் மூளையே கொடு, என்ன விலை?" என்றான்.

"முட்டாள் மூளை முன்னூறு ரூபாய்தான் விலை. அறிவாளி மூளை மூவாயிரம் ஆகும்," என்றான் கடைக்காரன்.

"அது சரி, அது முட்டாள் மூளைதானா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? கொண்டு வாருங்கள். அதனிடமே சில கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொண்டபிறகு வாங்கிக்கொள்ளும்படி சிபாரிசு செய்கிறேன்," என்றான்.

கடைக்காரனும் சம்மதித்து, ஒரு சிறிய அட்டைப் பெட்டியை அவன் முன் கொண்டு வந்து வைத்தான்.



ராசாக்கண்ணு அந்தப் பெட்டியைத் திறக்கப் போனபோது, கடைக்காரர் தடுத்து நிறுத்தி, "பெட்டியைத் திறக்கக்கூடாது. திறந்தால் அது கெட்டுப்போகும். இருட்டு அறையில்தான் அதைத் திறந்து மாட்டிக் கொள்ள வேண்டும்," என்றான்.

பெட்டியைத் திறக்காமலேயே பெட்டியைப் பார்த்துக் கேள்வி கேட்கலானான்.

உன்னை நான் விலை கொடுத்து வாங்கிப் போய் உடைக்கப் போகிறேன். நீ வெளியில் உலாவினால் நாட்டில் அறிவாளிகள் குறைந்து போவார்கள். நான் சொல்வது சரியா? என்று கேட்டான்.

"நீ சொல்வது தவறு. நாட்டில் அறிவாளிகளைவிட முட்டாள்களே அதிகம். இதை உடைக்கலாம். உன் மண்டைக்குள் இருக்கும் மூளையை நீ உடைத்தால் நீ செத்துப்போவாய். உன்னைப் போன்ற முட்டாள்கள் நாட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?" கடைக்காரனே பதில் சொன்னான்.

ராசாக்கண்ணுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. "நீ சொல்வதைப் பார்த்தால் என்னை முட்டாள் என ஏசுவது போல் அல்லவா இருக்கிறது," என்றான்.

கடைக்காரன் அதற்கு, "மூளையின் அருமை தெரியாமல் அதை உடைப்பதாகச் சொன்னதால் உனக்குப் புத்தி வரட்டுமே என்று அப்படிச் சொன்னேன். நீ அறிவாளியாக இருப்பதால்தான் மூளையைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறாய். அதனால் உன்னிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு இந்த மூளையை இலவசமாகவே நீ எடுத்துக் கொண்டு போ," என்றார்.

"என்ன கேள்வி? கேளுங்கள், நான் அறிவாளி. எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல என்னால் முடியும் என நிரூபிக்கிறேன்." உணர்ச்சி வசப்பட்டுப் போசினான் ராசாக்கண்ணு.

"இந்த மூளை வியாபாரத்தை நானே முதன் முதலாக ஆரம்பித்துள்ளேன். இது நாட்டிற்கு நல்லதா? கெட்டதா?" என்று கேட்டான்.

"நல்லதுதான். மூளை இல்லாதவன் அதை உங்கள் கடையில் வாங்கி அணிந்து கொண்டு அறிவாளியாகி விடுவான். பின்னர் நாட்டில் முட்டாள்களே இருக்கமாட்டார்கள்."

"நீ நினைப்பது தவறு. அப்போதும் முட்டாள்கள் இருப்பார்கள். ஏனென்றால் மூளையை விலை கொடுத்து வாங்கப் போகிறவனுக்கு அது நல்ல பெரிய மூளையா என்று கண்டுபிடிக்கத் தெரியாது. அதனால் என்னைப் போன்றவர்கள் அவனைச் சுலபமாக ஏமாற்றிவிட முடியும். உலகில் பல மனிதர்களிடம் போலி மூளையே இருக்கும். அதனால் நாட்டுக்கு எந்தவித நன்மையும் இருக்காதே," என்றான்.

ராசாக்கண்ணு வாதாடினான். "நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். என்னைப்போன்ற அறிவாளிகள் அந்த மூளை நல்ல மூளையா, இல்லையா என்று சோதித்துப் பார்த்துத்தானே வாங்கிக்கொண்டு போவார்கள். நானே உங்களை இவ்வளவு கேள்விகள் கேட்கும் போது நான் அறிவாளியாகத்தானே இருக்க முடியும்?" ராசாக்கண்ணு பேச்சில் கர்வம் தெரிந்தது.

"சரி...நீ அறிவாளி என ஒப்புக்கொள்கிறேன். இந்த மூளையை இலவசமாகவே தருகிறேன். அந்த இருட்டறைக்குள் போய் அணிந்து கொள்," என்று கடைக்காரன் ஒரு அறையைச் சுட்டிக் காட்டினான்.


ராசாக்கண்ணு சற்று நேரம் யோசித்துவிட்டு கேட்டான், "ஆமாம் என் மண்டைக்குள் இந்த மூளையை மாட்டிக்கொள்ள வேண்டுமானால், என் மண்டையைப் பிளக்க வேண்டி வருமே, பிளந்தால் நான் செத்துப் போவேனே," என்றான்.

"இது உனக்கு இப்போது தான் புரிகிறதா? இந்தச் சின்ன விஷயமே உன் புத்திக்கு இத்தனை நேரம் எட்டாமல் என்னிடம் வாதாடி வந்திருக்கிறாய். இந்த இலட்சணத்தில் உன்னை நீயே அறிவாளி என்று அடிக்கடி கூறிக் கொள்கிறாய். இதிலிருந்தே உனக்கு மூளை வேலை செய்யவில்லை என்று தெரிகிறது. ஒப்புக் கொள்கிறாயா?" என்று பெட்டியைத் திறந்து காட்டி, "பார்த்தாயா இது காலிப்பெட்டி.? உன்னைப் போன்றவர்களைச் சோதிக்கவே இந்தப் பலகையை எழுதித் தொங்கவிட்டேன். மூளையை யாராவது விற்கக் கொடுப்பார்களா? இதுகூட உனக்குத் தெரியவில்லையே?" என்றான் கடைக்காரன்.

ராசாக்கண்ணு அங்கிருந்து மாயமாய் மறைந்தான்.

## செய்து பாருங்கள்

### மறையும் கடிகாரம்



ஒரு பெரிய காகிதப் பையில் கைக்கடிகாரத்தைப் போடுங்கள். பின் அந்தப் பையை ஊதி 'டப்' எனத் தட்டி உடையுங்கள். பை கிழிந்து விடும். ஆனால் கடிகாரம் மட்டும் பையிலிருந்து கீழே விழாது. எப்படி?

கடிகாரம் இன்னும் பைக்குள்ளேதானே இருக்கிறது. பெரிய காகிதப் பையினுள் சற்றுக் கனமான சிறிய காகிதப் பையை வைத்து ஒட்டிவிட வேண்டும். அந்தச் சிறியபையினுள் தான் கடிகாரத்தைப்போட வேண்டும். அந்தச் சிறிய பையில் துளையிட வேண்டும். பையை ஊதும்போது துளை வழியே காற்று பெரிய பைக்குச் செல்லும். அதனால் பெரிய பைதான் ஊதும். நீங்கள் தட்டி உடைக்கும்போது கிழிவதும் பெரிய பைதான். சிறிய பையினுள் கடிகாரம் அப்படியே இருக்கும்.

## உலக சர்வதேசத் தாபனங்கள்

1. சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கி (I.B.R.D)
2. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (I.A.D)
3. ஆசிய அபிவிருத்தி வங்கி (A.D.B)
4. கொழும்புத் திட்டம் (COLOMBO PLAN)
5. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)
6. உலக சுகாதாரத் தாபனம் (W.H.O)
7. உணவு, விவசாயத்தாபனம் (F.A.O)

ஜெ.ஜேக்கப்-சாந்த கூம்ஸ் வித்தியாலயம்,தலவாக்கலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. தொட்டதும் கண் விழிப்பான். அவன் யார்?
2. தூரப்பார்த்தால் இரும்புக் குண்டு. கையில் எடுத்தால் இனிய பழம். அது என்ன?
3. உயிர் அற்றவன்- ஊர் முழுதும் செய்தி தருவான். அவன் யார்?
4. காலையில் கண் விழித்து மாலையில் உறங்குவான். அவன் யார்?
5. மண்ணின்மேலே மண்ணால் வீடு கட்டி, மண்ணில் உள்ளவர்களுக்கே தீங்கு செய்வான். அவன் யார்?

**விடைகள்**

1. தொலைக்காட்சிப்பெட்டி 2. பனம்பழம் 3. பத்திரிகை 4. சூரியன் 5. பாம்பு

ஏ.சி.ஏ.வகாப்-கல்முனை-2.

1. சோற்றை கொட்டிவிட்டு, பானையை சாப்பிடுவார்கள். அது என்ன?
2. காலையிலும், மாலையிலும் நெட்டை. பகலில் குட்டை. அது என்ன?
3. இரண்டு மடு வெட்டி இருகாய் நாட்டி. அது என்ன?
4. பார்த்தால் அழகு. தொட்டால் ஆபத்து. அது என்ன?
5. பகலெல்லாம் ஊர் சுற்றுவான். இரவில் ஒதுங்கிக்கிடப்பான். அவன் யார்?

**விடைகள்**

1. பப்பாசிப்பழம் 2. நிழல் 3. அகப்பை 4. நெருப்பு 5. செருப்பு

எஸ்.சுதர்சன்-வாழைச்சேனை.

## இங்கே-இவை


இலங்கையில் காணப்படும் கனியவளங்களும் அவை உள்ள இடங்களும்:

| | |
|---|---|
| இரத்தினக்கல்- இரத்தினபுரி | ஓட்டுக்களிமண்- பங்கதெனியா |
| வெண்களி- பொரலஸ்கமுவை | சீமெந்துக்களிமண்-முரங்கன் |
| அடையற் சுண்ணக்கல்- யாழ்ப்பாணம் | கண்ணாடி மணல்- நாத்தாண்டி |
| இல்மணைற்று-புல்மோட்டை | அபதைற்று-எப்பாவலை |
| காரீயம்- நோறகொல்லை | பளிங்குச் சுண்ணாக்கல்-நாவுல |

சி.ராதிகா

றோ.க.தமிழ் வித்தியாலயம்-நூரைச்சோலை-புத்தளம்.

## அறிவோம் மனதில் பதிவோம்




### அசலும் நகலும்

பெரிய மீன்கள், சிறிய மீன்களைப் பிடித்துத் தின்பது இயற்கை. அதனால் பெரிய மீனைக் கண்டதுமே, சிறு மீன்கள் ஓடி ஒளிவது வழக்கம். 'ராஸ்' என்ற பெரிய மீன் இதற்கு விதிவிலக்கு. இது சுத்தத்தை விரும்பும் மீன். நல்ல பண்பு உடைய மீன். இதன் அருகில் வரும் மீன்கள் சிறிதாய் இருந்தாலும் சரி, பெரியதாய் இருந்தாலும் சரி அவற்றை அப்படியே நிற்கச் செய்து அவற்றின் உடலில் ஒட்டியுள்ள அழுக்குகள், பூச்சிகள், பாசிகளைக் கடித்துத் தின்னும். ராஸ்ஸின் உணவு இந்த அழுக்குகள்தான். பிறமீன்களைச் சுத்தமாக்கி அவற்றின் அழுக்குகளைத்தான் உணவாக்கிக்கொள்ளும்.

'பிளென்னி' என்ற ஒருவகை மீன் உள்ளது. இது பார்வைக்கு 'ராஸ்' போலவே இருக்கும். பிற மீன்கள் பிளென்னியையும் ராஸ் என நினைத்து அவற்றிற்கு முன்னால் உடலைக் காண்பிக்கும். அவ்வளவுதான். அந்த மீன்களை 'லபக்' என விழுங்கிவிடும் பிளென்னி. ராஸ் இடம் உள்ள நல்ல பண்பை இந்த பிளென்னியும் கற்றுக்கொள்ளக்கூடாதா?

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.06.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 43
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 40

**பரிசுக்குரியவர்**
செல்வி.அஞ்சனா இறெங்கசாமி
வ/மகளிர் மகாவித்தியாலயம்
வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்**

டி.எல்.பல்தசார்
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

செல்வி.கி.அமிர்தவாகினி
மட்/விக்னேஸ்வரா வித்தியாலயம்
கதிரவெளி.

அலோஷியஸ் குரூஸ்
பசறை.

கார்மலீற்ற சாமிளா குணசேகரம்
நல்லாயன் கன்னியம் மடம்-கொழும்பு-13.

எஸ்.கிரிசாந்
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி-கொழும்பு-4.


கே. மதுமிதா
பாலையூற்று அரசினர் கலவன் பாடசாலை
திருகோணமலை.

நூருல் முஸாடிகா-மாவனல்லை.

எம்.எம்.ஸன்பர்
கிண்ணியா மத்திய மகாவித்தியாலயம்
கிண்ணியா-06.

துரையப்பா-விஜயானந்தன்
விபுலானந்த மத்திய கல்லூரி-காரைதீவு-02.

நியூ ஆரிய பவான்
சாப்பாடு மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்!
சுகாதாரமான தயாரிப்பு—சூடான உபசரிப்பு
உங்கள் திருப்தியே எங்கள் எல்லை!
மறவாதீர்கள்.
NEW ARIYA BAWAN
இல.9, டாம் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 435362



## முதலாவது பிறந்த தின வாழ்த்து

1.6.1994

மொஹமட் றினோஷன்

வாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மொஹிடீன்-றினோஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் றினோஷன் 1.6.94ல் தனது முதலாவது பிறந்ததினத்தை கொழும்பில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்.

மொஹமட் றினோஷனை உக்ரைனில் இருக்கும் வாப்பா, உம்மா, மம்மிம்மா, ... அம்மாமார்கள், சுவிஸ் றிபாய் ... அஸ்ஹர், றிஸ்வான், சித்தீக், ஹம்சின், ... அஜித், கலீல், நிஜாம் (ஜேர்மன்) நிலார், ... குடும்பத்தினர், றினோசா, சிஹானா, ... சியாமா அன்டி குடும்பத்தினர், பஹ்மிதா ... அல்லாஹ் அருளால் பல்கலையும் கற்று ... வாழ்த்துகிறார்கள்.

-சமீன் மும்தாஜ்-

# ஐ ல வ் யூ



68 வயதிலும் தனது திடகாத்திரமான தோற்றத்தோடு ஜோர்ஜ்- இரசிக்கிறார் துணைவி கெர்ரி. 1955ம் ஆண்டு காதல் நெருக்கத்தில் கெர்ரியும் ஜோர்ஜும் இடது பக்க படத்தில்-



# மகனின் தாயை மணம் முடித்த ஆணழகர்

ஜோர்ஜ் எஃபர்மான் முன்னாள் ஆணழகன், 1962ல் நடத்தப்பட்ட உலக ஆணழகன் போட்டியில் ஆணகன் பட்டத்தை வென்றவர். இன்று இவருக்கு 68 வயதாகிறது. கெர்ரி என்ற 72வயதான பெண்ணை அண்மையில்தான் இவர் திருமணம் செய்துகொண்டார்.

இவர்களுடைய கதை விசித்திரமானது. 1950ம் ஆண்டின் மத்தியில் கலிபோர்னியாவிலுள்ள வெனிஸ் கடற்கரையில்தான் இவர்கள் முதன்முதலில் சந்தித்தனர்.

அப்போது ஜோர்ஜ் அமெரிக்காவின் அணழகன் என்ற விருதினைப் பெற்றிருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டதும் காதல் வசமாயினர். இருப்பினும் கெர்ரி அப்போது வாறன் என்பவரின் மனைவி. அத்துடன் ஒரு பெண் மகளின் தாயாராகவுமிருந்தார். இதனால் இருவரும் தம்பதியாக முடியாத நிலையிலிருந்தனர். எனினும் தனிமையில் பல தடவைகள் சந்தித்து அன்பைப் பரிமாறிக்கொண்டனர்.

கெர்ரிக்கும் வாறனுக்குமிடையில் மணமுறிவு ஏற்பட்டது.

இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் கெர்ரியின் வீட்டுக்கு ஜோர்ஜ் வந்திருந்தார்.

இடையில் விடுபட்ட தொடர்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கெர்ரி கருவுற்றாள். எனினும் இந்த உறவிலும் ஒரு முறிவு.

ஜோர்ஜ்-கெர்ரியும் பிரிந்தனர்.

1962ல் ஜோர்ஜ் உலக ஆணழகன் பட்டத்தை வென்றபோது அவருக்கும் கெர்ரிக்கும் பிறந்த பையனுக்கு பத்து வயது. ஆனால் ஜோர்ஜ் தனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பதை அறியமாட்டார். 37 வருடங்களின் பின்னர் பழைய காதலர்கள் மீண்டும் சந்தித்துக்கொண்டனர். அப்போது 36 வயதான ஒரு மகன் இருவருக்கும் மத்தியில் தோன்றினான். தனது மகன் தான் அவன் என்ற உண்மை அறிந்ததும் ஜோர்ஜ் பூரித்துப்போனார்.

இப்பொழுது தடை ஏதுமின்றி இருவரும் தங்கள் மகன் பொப் முன்னிலையில் திருமணம் செய்துகொண்டனர்.



மேலே: ஜோர்ஜ்-கெர்ரி மகன் 'பொப்'புடன். 1955ல் அமெரிக்காவின் ஆணழகன பட்டத்தை வென்றபோது



135 இறாத்தல் எடையை ஒரு கையில் ஏந்திய ... பறகையினால் ... இசை மீட்டும் ... -

# எனக்கும் ஓ.கே.



மனிதர்களுக்கு மட்டும்தான் செயற்கை உறுப்புக்கள் பொருந்துமா? மிருகங்களுக்கும் பொருத்தினால் எப்படியிருக்கும்? மருத்துவத்துறை விஞ்ஞானிகளின் ஆவலைப் பூர்த்திசெய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. சீட்டல் நகர மிருகக் காட்சிச்சாலையில் இந்த ஏப்-இன மனிதக் குரங்குக் குட்டி தனது இடது கையை ஒரு விபத்தில் இழந்து விட்டது. 'சாய்பூரி' என்று பெயரிடப்பட்ட இதற்கு பல ஆராய்ச்சிகளின் பின்னர் பொருத்தப்பட்ட இந்த செயற்கைக் கை நன்றாகப் பொருந்துவதாகவும்(குரங்குச்) சேட்டைகளுக்கு ஏற்ப ஒத்துழைப்புத் தவருவதாகவும் காட்சிச்சாலை அதிகாரிகள் கூறுகின்றனர்.

# அழகி கொடுத்தது!



இந்த அழகியின் பெயர் எரிக்கா பிரஸ்ரன். பிரஸ்ரன் அருகில் உள்ளது அவரது செல்லமான நாய்க்குட்டி. இந்த நாய் ஒருநாள் ஒடிவிட்டது. உடனே இந்த மொடல் அழகி வாடிப்போனார். இறுதியில் நாய்க்குட்டியை கண்டுபிடித்து கொடுத்தார் ஒருவர். மகிழ்ச்சியில் திக்கு முக்காடிய அழகி அந்த நபருக்கு எக்கச்சக்கமாக கொடுத்து விட்டார். அதாவது சன்மானம்-50 ஆயிரம் ரூபாய்கள்! யப்பா!

# சுகமான தோழமை



3 சிங்கக் குட்டிகள் 3 சிறுத்தைக் குட்டிகள் அத்தோடு 3 நாய்க் குட்டிகள் வஞ்சமில்லா தோழமை. சுகமான தூக்கம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கிரைம் செய்திகள் கிரைம் செய்திகள் கிரைம் செய்திகள்

## சாமிக்கு வந்த ஆசை!

## சொத்துக்காக ஒரு கொலை!!

### மூன்றாண்டுகள் உறங்கிய மர்மம்

அவள் பெயர் சாகரே. இந்தியாவுக்கான அவுஸ்திரேலிய தூதராக இருந்த அக்பர் காலியின் முன்னாள் மனைவி.

சாகரேக்கும், அக்பருக்கும் ஒத்துப்போகவில்லை. விவாகரத்து செய்து கொண்டனர்.

இந்தியாவில் பெங்களூரில் இருந்த சாமியார் சாரதானந்தா என்பவருக்கும் சாகரேக்கும் இடையே காதல் மலர்ந்தது.



காவியுடை கலைந்த நிலையில் போலிச் சாமியார் சாரதானந்தா எனப்படும் முரளி மனோகர் மிஸ்ரா

சாமியாருக்கு சாகரேயின் சொத்துக்கள் மீதுதான் ஆசை.

முற்றும் துறந்த சாமியாராக ஊரை ஏமாற்றிய சாரதானந்தாவுக்கு பெண்ணாசை-மண்ணாசை நிறையவே இருந்தது.

சாகரேயோடு 4 ஆண்டுகள் வாழ்ந்த சாமிக்கு சொத்துக்களை விரைவாக அடையும் ஆசை வந்துவிட்டது.

அன்று சாகரேக்கு தன் கையால் ரீ போட்டுக் கொடுத்தார் சாமியார்.

சாகரேயும் தன் கணவரின் பரிவை வியந்தபடி ரீயைக் குடித்தார். குடித்தவர் குடித்தவர்தான்- பிறகு பேசவே இல்லை. அப்படியே மயங்கி விழுந்தார்.

"யாரங்கே?" சாமியாரின் குரலுக்கு ஓடிவந்தார்கள் 4 ஆசாமிகள்.

அவர்களுக்கு ஏற்கனவே பணம் கொடுத்து தயாராக வைத்திருந்தார் சாமியார்.

அந்த 4 பேரும் சேர்ந்து ஒரு சவப்பெட்டிக்குள் வைத்து சாகரேயை மூடினார்கள். வீட்டின் பின்புறம் பெரிய குழி தோண்டி அதற்குள் சவப்பெட்டி இறக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நடைபெற்றது 1991ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி.

சாகரேக்கு ஒரு மகள் இருந்தாள். பம்பாயில் படித்து வருகிறாள். அம்மாவைக் காணவில்லை என்று பொலிசில் புகார் கொடுத்தாள்...

பொலிசார் விசாரித்தனர். சாமியார்மீது சந்தேகம் வரவில்லை.

சொத்து கைக்கு வந்ததும் சாமியார் தன் வேசத்தைக் களைந்தார். காவி உடைக்கும் விடை கொடுத்தார்.



மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சவப்பெட்டி புதைக்கப்பட்ட இடமும், மீட்கப்பட்ட பின்னர் பெட்டிக்குள் சிதைந்து கிடந்த உடலும்.

பழங்கலைகளை ஆய்வு செய்வதாக கூறிக்கொண்டு இந்தியத் தலைநகரான டில்லிக்குப் போனார்.

சாமியாரின் வேசக் கலைப்பு நாடகத்தால் உஷாரான பொலிஸ் அவரைப் பிடித்து விசாரித்தது.

பொலிஸ் கவனிப்பில், எலும்புகள் எண்ணப்பட்ட சாமியார் உண்மைகளை உடனே கக்கினார்.

சாமியாருக்கு உடந்தையாக இருந்த 4 ஆசாமிகளும் கைது செய்யப்பட்டனர்.

சாகரே சவப்பெட்டியோடு புதைக்கப்பட்ட இடத்தை சாமியார் காட்டினார். தோண்டிப் பார்த்தபோது சாகரேயின் சிதைந்த உடல்தான் கிடந்தது.


மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கொலையை பொலிசார் இப்போதாவது கண்டுபிடித்துவிட்டார்களே! அது போதும்.

சாமியார் இப்போது கம்பி எண்ணுகிறார். தீர்ப்பு எப்படி இருக்கப் போகிறதோ?"



சாகரே

## அப்படியா சேதி!



இவர்கள் இருவரும் சிறுவயதிலேயே துப்பாக்கிகளோடு புறப்பட்டு விட்டார்களோ என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. சும்மா ஒரு ஜாலியாக 'கௌ போய்ஸ்' ஸ்ரைலில் உடையணிந்து போட்டோவுக்காகப் போஸ் கொடுக்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டி என்னும் பகுதியைச் சேர்ந்த இணைபிரியாத நண்பர்கள் இவர்கள். வயது? மூன்றே மூன்றுதான்!

## காதலித்துக் கைவிட்டான் காளை! அழித்துவிட ஆணையிட்டாள் அன்னை!!

ஜோயி ஃபிஸ்செர் என்ற 18 வயது இளைஞன் கிறிஸ்ரீனா சின்னெரோஸ் என்ற அழகியைத் காதலித்தான். ஆனால் ஏதோ காரணத்தினால் காதலியைக் கைவிட்டான். தனது மகளைக் கைவிட்ட காதலனை கூலிக்கு கொலையாளிகளை அமர்த்தி கொன்றுவிட்டாள் கிறிஸ்ரீனாவின் தாய். இன்று நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு



தண்டனையை எதிர்பார்க்கிறாள்.

ரெக்சாஸ் மாநிலம் பிரவுண்ஸ்விலியைச் சேர்ந்த டோறா கிரேசியா சின்னெரோஸ் என்ற 56 வயதுப் பெண்ணே ஜோயி ஃபிஸ்செரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியவள். இவள் ஒரு பிரபல மருத்துவரின் மனைவி.

ஃபிஸ்செரும் டோறா கிறேசியாவின் மகளான கிறிஸ்ரீனாவும் இரண்டு வருடங்களாக காதல் வயப்பட்டிருந்தனர். திடீரென ஃபிஸ்செர் கிறிஸ்ரீனாவை உதாசீனம் செய்துவரத் தலைப்பட்டான். காதலியின் பல வேண்டுகோள்களை அவன் செவி சாய்க்காது போகவே தனது தாயிடம் கிறிஸ்ரீனா முறையிட்டாள். ஜோயி ஃபிஸ்ச்சரை மீண்டும் தனது மகளுடன் சேர்த்துவைக்க டோறா பெரும் முயற்சிகளை மேற்கொண்டாள். எதுவும் பலிக்காமல் போகவே தனது மகளை ஏமாற்றியவனைப் பழி தீர்க்க டோறா திட்டமிட்டாள்.

சோதிடம் கூறும் மரியா மேர் செடெஸ் மார்ட்டின்ஸ் என்பவளின் உதவியுடன் இஸ்ரேல் ஒலிவேர்ஸ் மற்றும் ஹெறிபேட்டோ பியூன்ரெஸ் பிஸானா ஆகிய - கூலிக்காகக் கொலை செய்யும் இருவரை நாடினாள். இவர்கள் இருவரும் ஜோயி ஃபிஸ்செரை அவனுடைய வீட்டின் அருகிலேயே சுட்டுக்கொன்றனர்.

பொலிசார் தீவிர விசாரணையின் பின்னர் டோறாவையும் மரியா மாட்டின்ஸையும் கைது செய்தனர். மரியாவின் நண்பனாகக் கருதப்படும் டானியல் கார்ஸாவும் இக்கொலைக்கு உடந்தையாக இருந்ததாக பொலிசாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



பலியானோர் உடலை பரிசோதிக்கும் பொலிசார்

கொலையாளிகளான இஸ்ரேலும் ஹெறிபேட்டோவும் கொலை செய்தமைக்காக டோறா கொடுத்த பணத்துடன் எல்லையைக் கடந்து மெக்ஸிக்கோ நாட்டுக்குள் சென்று தலைமறைவாகிவிட்டனர். மரியா மாட்டின்ஸ் - தான் கொலைகாரர்களுடன் தொடர்பு கொண்டு கொலைக்கு உடந்தையாக இருந்ததை ஒப்புக்கொண்டு விட்டாள்.

விசாரணைகளின் முடிவில் ஜூரிமார் மூன்று மணிநேர ஆலோசனையின் பின்னர் ஐவரையும் குற்றவாளிகளாகக் கண்டுள்ளனர்.

## இரட்டைக் கொலைகள் எட்டு! இத்தாலியைக் கலக்கிய கொலைஞன் கைது!!

இத்தாலியிலுள்ள ஃபுளோரன்ஸ் நகரில் பல படுகொலைகளைச் செய்து, அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களின் பல்வேறு அங்கங்களைச்



சின்னாபின்னமாக வெட்டிய கொடிய அரக்கன் பிடிபட்டுள்ளான். 1968முதல் 1985வரை 8 இரட்டைக் கொலைகளைச் செய்துவிட்டு அ பாவிபோல் நடமாடிய பியற்றோ பக்கியானி என்பவன் இப்பொழுதுதான் சட்டத்தின் கைகளில் அகப்பட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறான்.

கொலையானோரின் மொத்த எண்ணிக்கை 16.

ஆண்கள் 9 பேர்- பெண்கள் 7பேர்.

கொல்லப்பட்ட முறை ஒன்றாகவே இருந்தது.

அதுவும் சாதாரண முறையல்ல. முதலில் துப்பாக்கிச் சூடு! சுட்ட பின்னர் உயிர் போனதை உறுதி செய்துவிட்டு உடலின் முக்கிய பாகங்கள் வெட்டி எடுக்கப்படும். கூரிய ஆயுதங்களால் குத்திக் குடையப்படும்.

கொல்லப்பட்ட பெண்களின் மர்மஸ்தானங்கள் வெட்டி எடுக்கப்பட்டிருந்தன. முக்கிய உறுப்புக்களில் கத்தியால் காயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.


சகல கொலைகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட தினம் சனிக்கிழமை. நேரம் இரவு. வேளை. பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியின் ரவைகள் ஒரே துப்பாக்கிதான் 16 கொலைக்கும் காரணம் என்பதை தெளிவுபடுத்தின.

பொலிஸ் தீவிரமாக விசாரித்தது. கொலைக்கு காரணம் ஒரு நபரா? அல்லது ஒரு கும்பலா? என்று அறிய முடியாமல் முடியைப் பிய்த்துக்கொண்டது.

இந்த நேரத்தில் பொலிசாருக்கு ஒரு தபால் வந்தது. அதில் கொல்லப்பட்ட ஒருவருடைய உடலில் இருந்து உரிக்கப்பட்ட தோலின் ஒரு பகுதி இருந்தது.

அதன்பின்னர் கொலைகள் நின்றுவிட்டன. எனினும் பொலிஸ் பொறுமையாக மோப்பம் பிடித்தது. பொலிசாருக்கு கிடைத்த முக்கிய தகவலை அடுத்து 1992இல் பியற்றோ பாகியான் என்பவரது வீடு சோதனையிடப்பட்டது.

வீட்டின் பின்புறம் ஒளித்துவைக்கப்பட்டிருந்த கைத் துப்பாக்கியும், ரவைகளும் சிக்கிக்கொண்டன. கொல்லப் பட்டவர்களது உடல்களை வெட்டிக் கொத்தப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் மாட்டிக்கொண்டன.



முதலில் துப்பாக்கியால் சுடுவது. பின்னர் உடலின் பாகங்களை கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கூறுபோடுவது....



பாகியான் ஒரு விவசாயி. 68ம் ஆண்டு முதல் யாருக்கும் சந்தேகமே வராமல் கொலை வெறி வேட்டையை நடத்தி வந்தான்.

வக்கிர மனம் படைத்த பாகியான் உடல்களை வெட்டி என்ன செய்தான் என்று நினைக்கிறீர்கள்? ஜாலியாகச் சப்புக்கொட்டி சாப்பிட்டுவிட்டானாம்.

இப்போது இத்தாலிய ஃபுளோரன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. 200 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அங்கு மரண தண்டனை இல்லை என்பதால் அந்த மனித மிருகம் தனது மீதிக் காலத்தை சிறையில் கழிக்க வேண்டி வரலாம்.

# தேன் கிண்ணம்

## ஆசைக்குணம்

கோபப்படும் வேளையில் நீ கொவ்வைப்பழம்-மனதால்
நொந்துநின்ற போதினிலே கொய்யாப்பழம்
பாசம் நெஞ்சில் வைக்குமினம் பெண்ணினம்-வைத்தால்
பாடைவரை கூட வரும் பொன்மனம்.

நாவுகின்ற விழியிரண்டும் நாவற்பழம்-நாவோ
நட்டைச்சுளை யாக வந்த பலாப்பழம்
கோவையிதழ் குவித்தால்துண்டு வாழைப்பழம்-உன்னைக்
கொண்டணைத்தால் மகிழுமிந்த ஏழையுளம்.

கனிகள் நிறைந்த சோலைதானுன் தேகவனம்-எந்தன்
கண்களிலே ஆடுகின்ற மோகவனம்
இனியபழம் அத்தனையும் உந்தன் வசம்-அதற்காய்
ஏங்குகின்ற பேதைமனம் எந்தன் வசம்.

ஆசையென்றும் சூழல்பார்த்து வருவதில்லை-அதை
அணைக்க நினைத்தபோதும் அது அழிவதில்லை
தேசமெங்கும் ஓர்குணந்தான் ஆசைக்குண்டு-தன்
தேவைதன்னை கேட்டு நிற்கும் துணிவு கொண்டு.

*க.கோணேஸ்வரன்-திருகோணமலை.*

## சாகச மனிதன்




ஓ மனிதா
இம் மண்ணின்
உயிரினங்களின்
உயரிய
தலைவா..!

[illegible]

ஒரு நாவிருந்தும்
ஒன்றியத்தை
ஒழித்தாயடா..!
இரு நாவிருந்தால்
[illegible]
நீ
[illegible]டா!!

*[illegible]*
*திருகோணமலை.*

## (வி)சுவாசம்



இப்பொழுதும்
நீ
சுவாசிப்பாய்,
நான்
விசுவாசிக்கின்றேன்.
◇◇
உன்
நீல விழியால்
ஒரு கனவு
கலைக்கப்பட்டதே!
ஞாபகமா?
◇◇
உன்னன்பை
அஸ்திவாரமாக்கி
உன்
நினைவால்-கட்டிய
கோட்டை
உன்
துரோகத்தாலேயே
தூர்ந்ததே!
அதுவாவது
ஞாபகமா?
◇◇
இருக்கட்டும்,
என்
பெயராவது
உனக்கு
ஞாபகமா?
◇◇
பரவாயில்லை,
நீ-சுவாசித்துக்கொள்
வெளியேறும்
காற்றிலாவது
என்
பெயரிருக்கும்
◇◇
இனியும்,
நீ-சுவாசிப்பாய்
நான்
விசவாசிப்பேன்!

*-வாழையூர்-ஸ்ரீவரணி.*

## தினமுரசே வாழ்க நீ பல்லாண்டு...!

தினமுரசே! தினமுரசே! கலைக்காவில்
நின்றூதும் மணிமுரசே!
மனமுரசாய் ஆனாயே மாணிக்கமே!
பொற்பாவாய்! உன் பாதார விந்தங்கள்
பதித்தனயே பார்முழுதும்.

வியாழனதின் காலையிலே நின்று கூவும்
ஒரு வாரக் குயில் நீயே.
ஞாயிறு வரை இருக்கமாட்டாய் என்ன இது
பிறப்புக்கு முன்னே பிரசவமாகும் அற்புதம் நீ!

கன்னியரின் மனத்தினிடை கனியதுவின்
விதையாய் நீ ஊன்றி விட்ட காரியமே!
காளையரின் உளத்தின்மீது
கற்பனையாய் வந்துலவும் பெண்ணைப்போல
ஆனாயே, உந்தன் புகழுக்கு ஒருவருடம் பூர்த்தியம்மா.

நேற்றுப்போல்...!!
ஒருவருடம் ஆயிற்றா? கையெடுத்தால் வைக்காத
உந்தனுக்கு வருடவிழா!
மணி மகுடம் சூட்டுகின்றேன், பாவால் ஒரு
பாமாலை சூட்டுகின்றேன்.

ஈராண்டின் பதிவடியில் எடுத்து நீ வைக்குமடி
மூவாண்டின் தொடக்கமென்போம்.
உன் முயற்சி புரிந்த பின்னர் விற்பனையில்
வேகம் கொண்டாய் நீ முந்திவிட்டாய்.

நடுநிலையாய் நீ கொண்ட கொள்கை மீது
நாமும் தான் இணைகின்றோம். நாடுகின்றோம்.

பல்லாண்டுகாண வேண்டும் தீஞ்சுவையே! நீ
பகலின் கடைசிவரை வாழ வேண்டும்.
சூரியனும் உள்ளவரை சந்திரனும் சாகும்வரை
உன் வாழ்வு இருக்க வேண்டும்!

சோபனங்கள் சொல்லுகிறேன்.
வாழ்த்துகிறேன் முரசாளே உன்னை நானும்
பாவால் ஒரு பாமாலை சூட்டுகிறேன்.
வாழ்வாய் நீ யென்றும்,
வளமுடனே! வளமுடனே!!

*அக்குறணை ஹரீரா அனஸ்.*



## ஓயாதோ...?

கார்மேகம் காணவில்லை வானிலே எங்கும்
போர்மேகம் சூழ்ந்திருக்கு(ப்) பாரிலே


ஏர்முனைகள் ஏறவில்லை புவியிலே-எங்கும்
போர்முனைகள் ஓயவில்லை மண்ணிலே....
ஆடையின்றி எமது மானம் பறக்க-சிலர்
ஆக்குகின்றார் கோடி போர் விமானம்
தாக்கிடும் பிணிதீர உணவுகளில்லை-தினம்
தீர்த்திடும் வெடி மருந்துக்குமோர் எல்லையேயில்லை...
கிராமங்கள் கடந்தேவு கணைகள் பாயுது
கிழக்கு வடக்கு யாவும் செந்நிறமாகுது
மண்ணாசைத் தொழுநோயில் உயிர்கள் மாயுது
எந்த நாளிலே தான் இந்தக் கொடுமைகள் ஓய்வது...???

*ஜெயந்தி-பம்பலப்பிட்டி.*

## பழைய ஞாபகங்கள்

கண்மணி
மறக்க முடியவில்லை
◇◇
செவிகளிரண்டும்
செவிடாகின்றன
உன் வார்த்தைகள்
காணாமல் போனதால்
விழிகளிரண்டும்
ஒளியிழக்கின்றன
உன் உருவம்
எனக்காக
தூரமாகிப் போனதால்
◇◇
நீ என் காதோடு
காதாக
பேசுகின்ற
காதல் மொழியின்
ரகஸ்யங்களின்போது
உன் லோலாக்கு
சங்கீதமிசைத்ததே—!
கண்மணி
மறக்க முடியவில்லை.
◇◇
நம்
சொண்டு நீட்டல்
சுகத்தின்போது
சுரக்கும்
உமிழ்த்தேன்
சுவர்க்கத்துக்கு
ஊற்றெடுத்ததே
கண்மணி
சத்யமாய்
மறக்கமுடியவில்லை.
◇◇
நம்
நிலாநேர
சந்திப்புகள்
வேலியோர
இடுக்குகளில்
விழிகள் நான்கு
பேசிய
காதல் பாஷைகள்
காதல் ஞாபகமாய்
நீவரைந்த
பழைய காதல்
கடிதங்கள்
நினைத்துப் பார்க்கிறேன்.
நிச்சயமாய்
மறக்கமுடியவில்லை.
◇◇
ஓ...இன்று
என் நெஞ்சம்
குண்டு வெடியில்
குதறியெடுக்கப்பட்ட
சதைப்பிண்டமாய்
சிதறிச் சிதறி.....!
◇◇
நேசகி
காற்றோடு
உன் காதுகளை
கழட்டி வைத்துப்பார்.
மறக்க முடியாத
ஸ்வதிய நிகழ்வுகளுக்காக
நான் என்னுயிரை
மறந்து கொண்டிருப்பதை.
◇◇

*கிண்ணியா-சபறுள்ளா.*



## மரணம்

உண்மையுணர்வின்
அனுபவ ஆயுதம்!
நாடித்துடிப்பின்
ஆராவாரப் பேரொலி!
இரத்த நாளங்களின்
இரும்புக் கறை!
மூச்சுக்கொடியின்
வெட்டுப்பள்ளம்!
விலாசம் தெரியாமல்
காற்றினால் சிதறப்படும்
மழைத்திவலை!
இருள் சுமந்து செல்லும்
மந்தார விடியல்!
ஊடல்கள் கலந்த
மனச் செருக்கின்
உயிர்க் கறை!
உயிர் மூச்சின்
இடைவெளி!
குற்றப் பழிப்புரையின்
உள்ளீடு!
வயிறநெஞ்சு
ஈன்றெடுத்த
வரட்சிக்குழந்தை!
மரணம்
வீதிகளின்
ஒரு விளையாட்டு!

*செல்வன்-ஷஹிர்ஷா தாஸிம்*
*தர்கா நகர்.*



## மீண்டும் அகதிகள்தான்

உதிரங்கள்
உதிர்ந்துவிட்ட
வடகிழக்கில்
வானமும்
கிழிந்து
விழுந்துவிட்டது போல்
ஒரு
புதிய சோகம்...
◇
எந்த
இழப்புக்களுக்காக
இந்த வானத்தின்
ஒப்பாரிக்
குரல்—?
எந்தக் காதலிக்காக...
கறுப்பு மேகத்தின்
இந்த
கண்ணீர் அஞ்சலி...?
◇
ஆகாயத்தின் ஒவ்வொரு
அசைவுகளிலும்
அழுகையின்
அடையாளங்கள்.
வான
வாசல் எங்கும்
சூரியன் தொலைத்த
இருள் சோகங்கள்...
◇
எங்கள்
நூற்று முடித்த
நூறாயிரம் கனவுகளும்
நீரோடு போனாலும்...
வீடுகள்
விலாசங்களின்றி
மூழ்கிப் போனாலும்....
நிசப்த பூமியில்
நிரந்தர சோகம்
ஓங்கி
ஒலித்தாலும்....
வங்கக் கடலே
நீர் நிரம்பி
வழிந்து
வந்தாலும்....
......
வருத்தம்
என்ன வென்றால்,
நாங்கள்
மீண்டும்
அகதிகள்-என்பதுதான்.

*அ.சுதா சேகர்*
*பொத்துவில்.*



## மழைக்கு முளைத்த காளான்கள்!

இதுவரை-
தேடாதவர்களெல்லாம்
எம்மைத்
தேடுகிறார்கள்.
தெருவில்
நாம் போகும்போது
திரும்பிப் பாராதவர்களெல்லாம்
பக்கம் வந்து
பக்குவமாக
எங்கள்
கஷ்டங்களைப் பார்த்து
கண்ணீர் விடாக்
குறையாக
கலங்குகிறார்கள்-
ஏன் என்று
எண்ணிப்பார்த்தால்
விடயம்
வெளிச்சத்துக்கு
வந்தது.
தேர்தல்
விரைவில் வருகிறதாம்.
இவர்களெல்லாம்
வேட்பாளர்களாம்.
வெட்கக்கேடு!

*ஷெல்லிதாசன்-திருகோணமலை.*

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.06.94 முதல் 11.06.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன் |
| மிதுனம் | - புதன், வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - செவ்வாய், கேது |

சந்திரன்— மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

([illegible], உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | [illegible] | காலை 7 மணி |
| திங்கள்- | [illegible] | காலை 10 மணி |
| செவ்வாய்- | [illegible] | பகல் 12 மணி |
| புதன்- | [illegible] | காலை 9 மணி |
| வியாழன்- | [illegible] | பி.ப 2 மணி |
| வெள்ளி- | [illegible] | காலை 8 மணி |
| சனி- | [illegible] | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, தொழில் மேன்மை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், பொருள் இழப்பு. | பி.ப 1 மணி |
| புதன்- | கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, தொழில் சிறப்பு | பகல் 12 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |
| சனி- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 9 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை நீங்கும், தொழில் சித்தி. | காலை 7 மணி |
| புதன்- | செய்தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தனலாபம், பெரியோர் உதவி. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| சனி- | கடன் பயம், மனக்கிலேசம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | துயர் நீங்கும், உறவினர் தொல்லை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | காரியத் தடை, மனக்குழப்பம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகாயம், புதிய முயற்சி. | பி.ப 4 மணி |
| சனி- | பயந்தநிலை, வீண் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

([illegible])

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | [illegible] | பி.ப 2 மணி |
| திங்கள்- | [illegible] | பி.ப [illegible] மணி |
| செவ்வாய்- | [illegible] | காலை [illegible] மணி |
| புதன்- | [illegible] | பகல் 12 மணி |
| வியாழன்- | [illegible] | காலை 6 மணி |
| வெள்ளி- | [illegible] | பகல் 12 மணி |
| சனி- | [illegible] | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| திங்கள்- | தன்னம்பிக்கை, பிரயாணம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், தெய்வ நம்பிக்கை. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் பகை, மனக்குழப்பம். | காலை 6 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| சனி- | தனலாபம், முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சிநிலை, பாராட்டு. | காலை 6 மணி |
| திங்கள்- | பயணங்களில் அலைச்சல், பண இழப்பு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், நம்பிக்கை. | காலை 10 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், தெய்வானுகூலம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | காரியத்தடை, சந்தேகம். | காலை 9 மணி |
| வெள்ளி- | நண்பர்கள் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, முதலீட்டு வெற்றி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நட்டம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி போராட்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், காரியசித்தி. | பகல் 11 மணி |
| புதன்- | குடும்பப் பிரச்சனை, நிம்மதியிழப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, நண்பர்களால் தொல்லை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | எடுத்த காரியம் தடை, வீண் செலவு. | காலை 8 மணி |
| சனி- | பயனற்ற பிரயாணம், பணத்தட்டுப்பாடு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் பிரச்சனை, மனப் பயம். | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனஉறுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நோக்கம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | உறவினர் தொல்லை, மனநிலை மாற்றம். | காலை 10 மணி |
| வியாழன்- | தீர் பிரயாணம், பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வீண் வாக்குவாதம், பொருள் இழப்பு. | காலை 10 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவுக்கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணத்தட்டுப்பாடு, செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | தனலாபம், முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| புதன்- | வீண் கவலை, குடும்ப சுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- | தொழில் சித்தி, உறவினர் கலகம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | உத்தியோக நன்மை, இடமாற்றம். | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் உயர்வு, பொருள்வரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | காரியசித்தி, மகிழ்ச்சி நிலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் தொல்லை, மனக்கிலேசம். | காலை 6 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, முயற்சி வெற்றி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பணத்தட்டுப்பாடு, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியசித்தி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, பொருள்வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | கடன் பயம் நீங்கும், உயர்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மன அமைதி. | பகல் 12 மணி |
| சனி- | பயணங்களில் இழப்பு, கவலை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 9

அறிந்து கொள்ளுங்கள் - ஆரோக்கியம் பெறுங்கள் - ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்



## வயிறு முட்ட உண்டபோதும் வளர்ச்சியில்லை

### வளர்ச்சியைத் துரிதப்படுத்த வைத்தியர்கள் பெரும்பாடு!

சந்தால் பப்பின் 15 மாதக்குழந்தை. ஆனால் முழு வளர்ச்சியுற்ற ஒரு ஆணுக்குரிய உணவினை உண்ணும் இக்குழந்தை வயதுக்குரிய வளர்ச்சியைப் பெற முடியவில்லை. எடையும் அதிகரிக்கவில்லை. மருத்துவத்துறையைச் சேர்ந்த பல விற்பந்நர்கள் பரிசோதித்துப்பார்த்தும் குழந்தை சந்தாலின் உடல் நிலையில் பாதிப்பினை ஏற்படுத்தும் நோயையோ காரணத்தையோ கண்டுபிடிக்க முடியவில்லை.

சாந்தால் அவளுடைய வயதுக்கு 26 இறாத்தல் எடையாவது கொண்டிருக்க வேண்டும். ஆனால் 3 மாதக் குழந்தையைப் போன்று 23 அங்குல உயரமும் 12 இறாத்தல் எடையும் கொண்டவளாகவே காணப்படுகிறாள்.

இவளுடைய வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக மருத்துவர்கள் 4,200 கலோரி பிரத்தியேக உணவினை தினசரி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தனர். இறைச்சி,முட்டை, பாலுணவு, பழவகைகள், தானிய உணவு ஆகியவற்றைச் சேர்த்து முறையாக அளித்து வந்தனர். சாந்தாலின் அகோரப் பசிக்கு இவை போதவில்லை.

சில திரவ உணவுகளை அவளுடைய வயிற்றுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள குழாய் மூலம்-அவள் தூங்கும்போதும்- அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால் இரவு பகல் 24 மணி நேரமும் சாந்தாலின் வயிற்றில் ஏதாவது உணவுப் பதார்த்தம் போய்ச் சேர்ந்த வண்ணம் இருக்க வேண்டும்.

கனடா ரொறாண்டோவில் வசிக்கும் பிறெறி பெப்பின் (வயது 32) மார்லின் (வயது 30) தம்பதியினருக்கு நாலாவது குழந்தை சந்தால். ஏனைய மூன்று பிள்ளைகளும் சாதாரண நிலையிலிருக்கும்போது இவள் மட்டும் விசித்திரமாகவும் மருத்துவர்களுக்கே ஒரு சவாலாகவும் இருப்பதனால் பெற்றார் மிகவும் கவலையடைகின்றனர். இருப்பினும் தங்கள் குழந்தை ஏனையவற்றைப்போன்று விரைவில் குணமடைவாள் என்றே பெரிதும் நம்பியுள்ளனர்.

மருத்துவர்களும் தங்கள் பரிசோதனைகளை விடாமல் தொடர்கின்றனர்.

## அணைப்பதும் அருமையான மருந்தாகும்!

### துன்பத்தில் நனைவோரை அன்போடு அணையுங்கள்!!

நல்வாழ்வுத்துறை பேராசிரியர் அறிவுரை



அல்லலுற்று அழும் ஒருவரை அன்புடன் வாரி அணைத்துத் தடவிக் கொடுங்கள். அவர் அழுகை ஓடி மறைந்து விடும். வீரிட்டு அழும் குழந்தையை ஆதரவுடன் தூக்கி அணைத்துக்கொண்டால் அதன் அழுகை நின்றுவிடும்.

அணைப்பதன் மூலம் பல அல்லல்களைப் போக்கிவிடலாம் என்று பென்சில்வேனியா மாநில பல்கலைக்கழக நல்வாழ்வு மற்றும் மனித மேம்பாட்டுத்துறை பேராசிரியர் ஜியோஃப் கொட்பி தெரிவித்துள்ளார்.

"மனிதனுக்கு ஏற்படும் துன்பதுயரங்களை மறக்கடிப்பதற்கு மற்றுமொரு மனிதனின் உடல் ரீதியான ஸ்பரிசம் பெரிதும் உதவுகிறது. துயரத்துக்குள்ளாகித் தடுமாறும் ஒருவரை அவருக்கு வேண்டிய ஒருவர் ஆரத் தழுவுவதன் மூலம் அந்நபருக்கு ஏற்பட்ட தாக்கத்தின் பழுவில் பெரும் பங்கு பறந்தோடி விடுகிறது என்பதனை ஆய்வுகளின்மூலம் கண்டுள்ளோம்" என்கிறார் பேராசிரியர் கொட்பி.

கோபம் கொண்ட ஒருவரின் வேகத்தைத் தணிக்கவும் அணைப்பு உதவுகிறது. கோபம் இரத்த அழுத்தத்தை அதிகரிக்க வைக்கிறது. நாடித்துடிப்பும் அதிகரிக்கும். இரத்த நாளங்கள்கூட புடைத்தெழும். அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர் அவரை அரவணைத்தால் மிக வேகமாக கோபம் தணிந்து விடுகிறது.


ஸ்பரிசம், அரவணைப்பு போன்றவை நட்பை வளர்க்கவும் உதவுகின்றன; உறவு வலுவடையவும் ஆதாரமாகின்றன.

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கை குலுக்குவதும், அரபு நாடுகளிலுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவுவதும் இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே எழுந்துள்ளன. நாட்டின் உயர் மட்டத் தலைவர்களும் கை குலுக்குவதுடன் முதுகில் வாஞ்சையுடன் தட்டுவது போன்ற செயல்களெல்லாம் ஸ்பரிசத்தின் மூலம் உறவுகள் வலுவடைகின்றன என்ற உண்மையின் வெளிப்பாடேயாகும்.

தனிமை, ஒதுக்கி வைக்கப்படல் போன்ற நிலைகளுக்குள்ளானோரையும் ஆசுவாசப் படுத்த அணைத்தல் பெரிதும் உதவுகிறது என்கிறார் டாக்டர் கொட்பி.

காதலருக்கிடையில் அந்யோன்ய உறவினை வலுப்படுத்துவதற்கும் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் உறவினை நிலைபெறச் செய்வதற்கும் அணைப்பு பெரும் உதவி செய்கிறது. குறிப்பாக மனவருத்தங்களைப் போக்குவதற்கு நெருக்கமானவர்களின் அணைப்பு சிறந்த மருந்தாக அமையும் என்கிறார் அவர்.

## மந்திரம்-பில்லி சூனியம்! ஆராய்கிறார் நிபுணர்!



மந்திரம்,பில்லி சூனியம், கெட்ட ஆவிகள் போன்ற வார்த்தைகளில் இன்றுள்ள புத்தி ஜீவிகள் நம்பிக்கை வைப்பதில்லை. இருப்பினும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் இவற்றின் மீது அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள் இல்லாமலில்லை. இவற்றை அறிவியல் ரீதியாகப் பலர் ஆய்ந்தறிய முன்வந்துள்ளனர்.

அமெரிக்காவில் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக நரம்பியல் பிரிவில் பணி புரியும் பேராசிரியர் ஸ்ரீஃபன் ஒப்பென்ஹீமர் நீண்ட கால ஆய்வின் முடிவுகளை அண்மையில் வெளியிட்டுள்ளார். மூளைக்கும் இருதயத்துக்குமிடையிலான தகவல்களை அனுப்பிவைக்கும் ஒரு மண்டலமே இந்த ஆய்வின்படி பிரதான காரணியாக விளங்கு கிறது என்பதனை அவர் கண்டறிந்துள்ளார்.

### இதயம் வெடித்து இறப்பது எப்படி?

ஒரு நபரை நினைத்து ஒரு மந்திரவாதி அவருக்கெதிராக ஓர் ஏவலைச் செலுத்துகிறார் என்று வைத்துக்கொண்டால், மந்திரவாதியின் ஒருங்கிணைக்கப்பட்ட எண்ணத்தின் தாக்கம் அந்த நபரின் மூளையை எட்டுகிறது.

இதனைத் தொடர்ந்து மூளை குறிப்பிட்ட நரம்பின் மூலம் இருதயத்துக்கு தகவல் அனுப்புகிறது. மந்திரவாதியின் எண்ண அழுத்தத்தின் அளவுக்கேற்ப மூளைக்கு எட்டும் அலைகளின் அடிப்படையிலேயே அது இருதயத்துக்கு அனுப்பி வைக்கும் கட்டளையும் அமைகிறது. 'உடனடியாகவே அந்த நபர் கொல்லப்பட வேண்டும்' என்று மந்திரவாதி வைராக்கியமாக எண்ண அலைகளைச் செலுத்தினால் அந்த நபரின் மூளையும் அதற்கு அமைய இருதயத்துக்குக் கட்டளையிடும். இதனால் திடீர் மரணம் சம்பவிக்கிறது.

திடீரென ஏற்படும் பயம் காரணமாக நமது இதயம் வேகமாகத் துடிக்கிறது. நமக்கு மிகவும் வேண்டிய ஒருவர் திடீர் விபத்துக்குள்ளாகி விட்டால் அச்செய்தி கேட்டதும் நமது இதயத்தின் வேகம் அதிகரிக்கிறது. தாங்கமுடியாத துக்கம் மேலிட்டால் இருதயம் நின்றுவிடவும் கூடும். இவை அனைத்தும் மூளையிலிருந்து இருதயத்துக்குரிய கட்டளைகளைப் பிறப்பிக்கும் மென்மையான மண்டலத்தின் செயலாகும் என்று டாக்டர் ஸ்ரீபன் கூறுகிறார்.

மூளையின் ஒரு பகுதியில் 'இன்சூலர் கோர்ட்டெக்ஸ்' (INSULAR CORTEX) என்ற ஒரு மண்டலம் இருக்கிறது. இந்த மண்டலத்திலிருந்தே இருதயத்துக்குரிய கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. "இந்த மண்டலம் அதிக அழுத்தத்தைத் தாங்கும் வலிமையற்றது. இதனால், பயங்கரமான-அதிர்ச்சியூட்டும் தகவல்கள் எட்டியதும் இம்மண்டலம் பாதிப்படைகிறது. இதனைத் தொடர்ந்து இருதயத்தின் துடிப்பு வேகமடைகிறது. வேகம் மேலும் அதிகரிக்குமானால் அது செயலை நிறுத்திக்கொள்ளும். திடீர் அதிர்ச்சி மரணங்களுக்கு இதுவும் ஒரு காரணமாகும்" என்கிறார் பேராசிரியர் ஸ்ரீஃபன்.

'இருதயம் வெடித்து இறந்து போனான்' என்று சாதாரணமாகக் கூறுவதும், 'பேயடித்து மாண்டுபோனான்' என்று சொல்லுவதும் இதன் அடிப்படையில்தான். இவ்வாறு திடீர் மரணமடைப வர்களின் வாய், மூக்கு மற்றும் காதுகளி லிருந்து இரத்தம் வெளியேறுவதுண்டு




## நில்! கவனி!! முன்னேறு!!!

### சிந்திக்கலாம் இங்கே...

நீர் தள்ளிச் செல்கிறது. அது செல்லும் திசையில் ஓடம் செல்கிறது.

ஓடத்திற்கு என்று ஒரு இலக்கு கிடையாது. எங்கு-எப்படி போய்ச் சேருவது என்று முடிவும் கிடையாது.

எங்கு போய்ச் சேர முடிகிறதோ அங்கு போய் சேர்ந்து கொள்ளும்.

அந்த ஓடம் போலத்தான் பலர் இங்கே வாழ நினைக்கிறார்கள்.

தங்களைச் சுற்றி உள்ள சூழ்நிலை தான் அவர்களுக்கு நீரோட்டம்.

சூழல் அசுத்தமாக இருக்கிறதே சுத்தமாக்க வேண்டுமே என்று நினைக்கமாட்டார்கள்.

எதிர்வீட்டுக்காரன் வெளியே தெருவில் கொண்டுவந்து குப்பையைக் குவித்துவிட்டுப்போனால் தாங்களும் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போவார்கள்.

கொட்டுவது அசுத்தம்தான் என்று தெரிந்தாலும் எதிர்வீட்டுக்காரன் கொட்டும்போது நாம் மட்டும் கொட்டினால் என்ன கெட்டுவிடப் போகிறது என்றுதான் நினைத்துக் கொள்வார்கள்.

வீட்டுச் சூழலைக்கூட தம் விருப்பப் படி வைத்துக்கொள்ள முடியாதவர்கள் நாட்டு சூழலைப்பற்றியா அக்கறைப்படப் போகிறார்கள்?

ராமன் ஆண்டால் என்ன ராமனின் செருப்பு சிம்மாசனம் ஏறி ஆண்டால் என்ன? திரும்பியும் பார்க்கமாட்டார்கள்.

செருப்புக்குத்தான் நாட்டில் மதிப்பிருக்கும் சூழ்நிலை இருந்தால், அடடே அந்த செருப்பாக இல்லாமல் போனோமே என்று வருந்தி, தமது பிறப்பையே வெறுத்துக்கொள்வார்கள்.

நாய் வேசம் போட்டுக் குலைத்தால் தான் பிழைத்துக்கொள்ள முடியும் என்றால், மறு பேச்சே இல்லாமல் போட்டுக் கொள்வார்கள்.

சில நேரங்களில் நாய்வேசம் போடுவதும் நியாயமாக இருக்கலாம்.

நாய்கள் மத்தியில் இருந்து தப்பிக் கொண்டு அந்த நாய்களை ஒரு வழி பண்ணும் நோக்கத்தை கொண்டதாக உள்ளபோது அந்த வேசம் நியாயமானதாக இருக்கலாம்.

அப்படி வேசம் போடுகிறவன் நாய் வேசம் நமக்கு ஒத்துவராது, நம்மால் ஒத்துக்கொள்ளவும் முடியாது என்பதில் உறுதியானவனாக இருக்க வேண்டும்.

நாய் வேசமோ, பேய்வேசமோ எப்படியும் பிழைப்பை நடத்தி முடித்தால் சரிதான் என்று நினைப்பதுதான் கெடுதி.

ஆனால் துரதிஷ்டவசமாக அப்படி நினைப்பவர்கள்தான் அற்புதமாக வாழுகிறார்களே என்று புருவத்தை வளைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.

நல்லவர்கள் வாழ்வார்கள் என்பது தற்போதைய நடப்பில் நடக்காத காரியமோ என்று நினைக்க வேண்டி வந்துவிட்டது.

தர்மம் தலைகாக்கும் என்று சொல்லப் படுகிறது. தலையைக் காக்க வேண்டாம். குறைந்தபட்சம் தம் பெயரைக்கூட காக்கவில்லையே என்று அடுத்தவருக்கு உதவியவர்கள் பலர் தலையில் அடித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

"தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும்" என்று சிலர் திரும்ப திரும்ப சொல்லக் கேட்டு காது புளித்துவிட்டது.

தர்மம்கூட் தனது தலைகறுப்பைக் காட்டுவதற்குக்கூட பயந்து கவ்விய சூதுக்குள் காணாமல் போய் விட்டதோ என்று கருத வேண்டியிருக்கிறது.

திரைப்படங்களில்கூட அதர்மத்தை எதிர்ப்பவனின் குடும்பமும் மிஞ்சாது. கொஞ்சம் குழந்தையும் தப்பாது என்பதுபோலத்தான் எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் திரைப்படத்தை பார்ப்பவருக்கு தீமையை எதிர்த்துப் போராடும் தெம்பு வராது. ஏனடா நமக்கு வம்பு என்ற எண்ணம்தான் வரும்.

ஆக, மொத்தத்தில் நம்கால நடப்புக்கள் நல்லதுக்கு காலமில்லை என்று கற்பிப்பது போலவே காணப்படுகின்றன.

'யார் எக்கேடு கெட்டால் எமக்கென்ன?' என்று வாழ்பவன்தான் வளமாக இருக்க முடியுமோ என்று நல்லவர்கள் பலரே கேட்டுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

நாமும் அப்படி இருந்துவிட்டுப் போனால் என்ன என்று சலனப்படவும் செய்கிறார்கள்.

ஒழுக்கமில்லாத மாணவனை ஆசிரியரே உயர்த்திப் புகழ்ந்தால் ஒழுக்கமான மாணவனும் கெட்டுப்போகத் தானே வேண்டிவரும்.

அதுபோலத்தான்-இங்கே அரசியலில் உள்ளவர்கள் பொதுவாழ்வில் நேர்மையில்லாதவர்களையும் நெறிதவறாதவர்கள் என்று விளம்பரம் செய்ய முற்படுகிறார்கள்.

ஓடு காலிகளைத் தூக்கி உயரத்தில் வைக்கும் அரசியல் உறுதிவாய்ந்தவர்களையும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள கற்றுக்கொடுக்கிறது.

அரசியல் முதல் சகல துறைகளிலும் ஆதிக்கம் வகிக்கத் தொடங்கிவிட்ட ஆரோக்கியமற்ற போக்குகள் தனிமனித உணர்வுகளின் தரம் உயர முடியாமல் தம் கறைபட்ட கரங்களால் அதனை தறித்துக்கொண்டிருக்கின்றன.

எனவேதான்-உயர்ந்த உள்ளங்கள்கூட தம் உருவத்தை மாற்றிக்கொள்ளலாமோ என்று யோசிக்கத் தொடங்குகின்றன.

இது சரிதானா? இதன் விளைவுகள் என்ன என்பதையெல்லாம் அடுத்தவாரம் ஆராயலாம்.

(வரும் வாரமும் சிந்திக்கலாம்)



### பிஞ்சுக்கு நஞ்சு!

இவை எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட ரோமானியக் குழந்தைகள்

பெரியோர் செய்த தவறு இந்த பிஞ்சுகளை பாதித்துவிட்டது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கொலை விழும் நேரம்



தென்றல் உறங்கிடக் கூடுமடி-எந்தன்
சிந்தை உறங்காது- புவி
எங்கும் உறங்கிடக் கூடுமடி-எந்தன்
கண்கள் உறங்காது!
நீலக் கடலலை மோதி வருவதில்
நெஞ்சம் பறிகொடுப்பேன்- இன்று
கோடி அலைகள் என் நெஞ்சில் எழுவதை
யாரிடம் போயுரைப்பேன்?

-கவியரசு கண்ணதாசன்-

மீறுமுனையில் பேசியவன் தலைவர் [illegible] கேட்ட விலை டி.ஐ.ஜி.[illegible] [illegible] இருந்தது. [illegible] [illegible] என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியது.

மறுமுனையில் இருந்து [illegible] [illegible].

"[illegible] டி.ஐ.ஜி. பலமான யோசனை? [illegible] அதிகமாகக் கேட்டு [illegible]... [illegible] முத்தம்! [illegible] ஏன் இத்தனை யோசனை?"

[illegible] கேட்டுவிட்டு [illegible] பென்சில் உடனே ஒரு [illegible] வந்தது.

"ஓ.கே. எங்கே சந்திக்கலாம்?"

"[illegible]"

"எந்நேரமா?"

"[illegible] [illegible] என்னால் [illegible] என்று சொன்னால் [illegible] மழை வசனம். இந்த [illegible] நம்முடியவில்லை டி.ஐ.ஜி."

"மழை தானாகக் கனியும் போது வேண்டாம் என்று சொல்ல மனம் வராது [illegible] வரும்போது [illegible] பூசாமல் வா. என்ன?"

"ஏன் பிடிக்காதா?"

"இயற்கைதான் பெட்டர்."

சூர்யாவைப் பார்த்தார். சூர்யா அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவர் பார்த்தபோது வேறெங்கோ பார்ப்பதுபோல் பார்வை திருப்பி தடுமாறினாள்.

"ரியலி கிரேட்"

என்று மறுமுனை சிரிக்க,

"எப்போது பார்க்கலாம்?"

"அவசரமா டி.ஐ.ஜி? அவசரத்தைப் பார்த்தால்..... தந்துவிட்டு சேதம் இல்லாமல் திருப்பி எடுக்கலாம் போல் தெரியவில்லையே. ஓ.கே. வருவேன். திடீரென்று வருவேன். வரும்போது உங்களிடம் விலையை வாங்கி விட்டு தகவல் தரப்படும். ஓ.கே.தானே!"

மறுபுறம் ரிசீவர் வைக்கப்படும் சத்தம் கேட்டது.

வருவானா? அல்லது நாடகமா? யோசித்தபடி ரிசீவர் சாத்திவிட்டு, சூர்யாவைப் பார்த்து புன்னகைத்தார். சூர்யா பதிலுக்கு புன்னகைக்காமல் முகத்தில் சலனமே இல்லாமல் பார்த்துக்கொண்டிருக்க,

"சிலரை அவர்கள் போக்கில்தான் விட்டுப்பிடிக்க வேண்டியிருக்கும்... அதுதான்..."

சிறிது அசட்டுத்தனம் அவர் முகத்தில் தெரிந்தது. தான் போனில் பேசியதை சூர்யா கவனித்திருப்பாள் என்று புரிந்து விளக்கம் சொன்னார். சூர்யா விளங்கிக்கொண்டாளா இல்லையா என்பதை உடனே ஊகிக்க இயலவில்லை. போனில் பேசியது பற்றி என்ன நினைக்கிறாளோ என்ற சங்கடத்தால் அவள் முகத்தை நேரடியாக நோக்குவதில் சங்கடம் வந்தது.

"ஓ.கே. சூர்யா. இப்போது நீங்கள் போகலாம். தேவையானால் அழைப்போம். அவசியம் வராது என்று நினைக்கிறேன்."

சூர்யா எழுந்து கொண்டாள். ஒரு நொடி தயங்கியபின் கேட்டாள்,

"என் டயறி?"

"அனுப்பி வைக்கிறேனே சூர்யா. சித்ராவின் மரணம் பற்றிய மர்மம் இன்னும் துலங்கவில்லை. சோ... அவள் வீட்டில் இருந்து... எடுத்த பொருட்களை தற்போது திருப்பிக்கொடுப்பது முறையல்ல."

"என் டயறி எப்படி அங்கு போனது என்று அறிவது உங்களுக்கு அவசியமில்லை."

"அவசரப்படாதீர்கள் சூர்யா. விடை அல்ல விடைகள் தேடுகிறோம். நிச்சயம் கண்டுபிடிப்போம். அப்போது உங்கள் கேள்விக்கும் விடை வரும்."



சூர்யா சென்று கதவு திறந்து போன வேகத்தில் அதிருப்தி நிறையவே இருந்தது. ■

**வா**னம் இடிந்து விழுவது போல மழை கொட்டிக் கொண்டிருந்தது. பாலைவனத்தில் தாகத்தில் தவித்தவன் போல வெப்பத்தில் வறண்டு போயிருந்த பூமி கொட்டும் மழையை குடித்துக் கொண்டிருந்தது. இன்னமும் தொடர்ந்து ஒரு வாரம் அவுட் ஆகாமல் வானம் பொழிந்தால்கூட சந்தோசமாய் பூமி தாங்கும் போல்தெரிந்தது.

அவன் மழைக் கோர்ட்டின் கொலர் பகுதியால் தனது முகம் தெரியாதவாறு மறைத்திருந்தான்.

மழைக் கோர்ட்டின் மீது விழுந்து சிறிதாய் ஒலி எழுப்பும் மழையை இரசித்தான்.

ஒரு காலத்தில் தனது மனசுக்குள் பொழிந்த மழை இதைவிட அதிகம் என்று நினைத்துக்கொண்டான்.

மழை நிரந்தரமல்ல. பெய்யும்போது சுகம். பெய்தது இரசித்து மட்டும் வாழ்வது முடியுமா? மழை வேண்டுமென்றே மறந்து, விலகி விலகிப் போக வெப்பம் தாங்காத பூமி மழை இரசித்த சுகம் தொலைத்து சோகத்தில் சுருளும் அல்லவா? சுருளும். நிச்சயம் சுருளும். பெய்யும் போது மழை சுகம்... பொய்த்துவிட்டால் அதுவே சோகம். உதடுகளை பற்களால் கடித்துக்கொண்டான்.

வீதியில் தேங்கி நின்ற வெள்ளத்தை விசிறியடித்துக்கொண்டு கார் ஒன்று அவனைக் கடந்து போனது. சேறு வந்து மழைக் கோர்ட்டில் பட, பெய்து கொண்டிருந்த மழை சேறு கழுவிப் போனது.

உள்ளத்தில் பூசிய கறையை அழிப்பது யார்? மனது விசாரித்தது.

மழை வரும் என்று எதிர்பார்க்காமல் வந்தவர்கள் ஆங்காங்கே ஒதுங்கி நின்றார்கள். மழையும் காதலும் ஒரே மாதிரி. சொல்லிக்கொள்ளாமல் திடீரென்று வரும். திடீரென்று போய்விடும். கொட்டப்போகிறது என்று குடையோடு வந்தால் திடீரென்று பளிச்சென்று மாறி வானம் சிரித்துக் கொண்டிருக்கும். மழை எதிர்பார்த்து ஏமாந்துபோன மனசுக்கு குடை கறுப்புக்கொடி காட்டி துக்கம் பகிர்ந்து கொள்வது போல இருக்கும்.

யோசித்தபடியே நடந்து வந்ததில் தூரம் தெரியவில்லை.

முகத்தை மறைத்து மழைக்கோர்ட் தெரிய, கடந்து போன வேனின் பின்புறக் கண்ணாடி வழியாக குழந்தை ஒன்று ஆச்சரியமாய் பார்ப்பது மங்கலாய்த் தெரிந்தது.

குழந்தையாகவே இருத்தல் எத்தனை சௌகரியம்?! இடது கரம் உயர்த்தி டாட்டா காண்பித்தான்.

உதடு குவித்து விசில் அடித்துக் கொண்டே ஹரிகரனின் வீட்டை நெருங்கி விட்டான்.

இப்போது சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டான். ஆள் உயர மதில் வசதியாக இருந்தது. இரு கரங்களையும் சுவரில் பதித்து தாவி ஏறி மறு புறம் குதித்தான். மழை நிலம் 'சதக்' ஒலி எழுப்பி 'ஸ்போர்ட்ஸ் சூ'வின் பாரம் வாங்கியது.

யாரும் வெளியே இல்லை என்பதை உறுதி செய்துவிட்டு புல்வெளி தாண்டி வீட்டை நெருங்க, உள்ளேயிருந்து பேச்சுக்குரல் கேட்டது.

திருமதி ஹரிகரனை நெருங்கிய பிரசாத் அவள் முகத்துக்கு நேரே தன் வலது கர முஷ்டி மடக்கிக்காட்டி குரல் உயர்த்தி பேசிக்கொண்டிருந்தார்,

"உன் மகளையும் உன்னையும் இந்த நிமிடமே நடுத்தெருவுக்கு கொண்டு செல்ல முடியும். வேண்டாம் பிழைத்துப் போங்கள் என்று விட்டால் திமிர் காட்டுகிறாய்."

திருமதி ஹரிகரன் பயந்ததாகத் தெரியவில்லை. பிரசாத் மீது அலட்சியமான பார்வை வீசினாள். இகழ்ச்சியாக ஒரு புன்னகை உதிர்த்தாள். நிதானமாக சொற்களை வீசினாள்.

"நீ ஒரு கொலைகாரன். என் ஹரி கொல்லப்பட்டதற்கு நீதான் காரணம் என்று நான் ஒரு புகார் கொடுத்தால் போதும். உன் ஆட்டம் பூச்சியம்தான்."

பிரசாத் அவளை முறைத்தார்.

"சோ...நீ எதற்கும் துணிந்து விட்டாய்?"

என்று கேட்டார்.

"யெஸ். முடிந்ததை நீ செய்துகொள். இப்போது வெளியே போ."

என்றாள் திருமதி ஹரிகரன் குரலில் வெறுப்புக்காட்டி.

பிரசாத் இப்போது அவளைப் பார்த்துச் சிரித்தார். சிரிப்பின் இடையே சொன்னார்.

"போகத்தான் போகிறேன் மைத்துனியே!

## தருவது ரசிகன்

போகத்தான் போகிறேன். அதற்குமுன் உன்னை அனுப்பலாம் மேலே என்று நினைக்கிறேன்."

சொல்லிக்கொண்டே காற்சட்டை பொக்கற்றுக்குள் இடது கரம் செலுத்தி வெளியே எடுக்க,

ஒரு நைலான் கயிறு கையோடு வந்தது.

படங்களில் கதாநாயகியின் முகத்துக்கு நேராக தாலிக் கயிற்றை உயர்த்திப் பிடிக்கும் வில்லன்போல, பிரசாத்தும் நைலான் கயிற்றை திருமதி ஹரியின் முகத்துக்கு நேரே உயர்த்திக் காட்டினான்.

திருமதி ஹரிகரனுக்கு விபரீதம் புரிந்து விழிகள் பயத்தில் விரிந்தன.

'தப்பவேண்டும். இந்த மிருகத்திடம் இருந்து தப்பியேயாக வேண்டும்' மனம் துடித்துக்கொண்டது.

பின்னேற முயன்று வலது பாதம் தூக்கி இரண்டடி பின்னால் வைத்தாள்.

ஒரு குரூரமான சிரிப்போடு பிரசாத் தனது வலதுரம் நீட்டி திருமதி ஹரிகரனின் இடதுகர மணிக்கட்டில் பிடித்தார்.

அவள் திமிற, தன்னை நோக்கி பலம் கொண்டு இழுத்தார்.

திகைத்துப்போய், குரல் விக்கித்து கடுமையாய் முயன்று வாய் திறந்து கத்த முயல, ஒரு கோழிக் குஞ்சைப்போல அவளை மடக்கிப் பிடித்து கழுத்தில் நைலான் கயிற்றை போட்டு இறுக்கத் தொடங்க,

மேலே சின்ன ஜன்னல்வழியாக அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்த உருவம், கையடக்கமான தனது கமராவின் பட்டனை அழுத்தியது.

அந்தப் பதட்டத்திலும் 'கிளிக்' சத்தம் பிரசாத் செவியில் விழ, சத்தம் வந்த திசை நோக்கி சடுதியாய் நிமிர்ந்த நொடியில்–

பிரசாத்துக்கு சத்தம் கேட்டுவிட்டது என்று புரிந்து, இனியும் தாமதித்தால் ஆபத்து என்று நினைத்து–

கமராவோடு கீழே குதித்த உருவம், தன்னைப் போலவே கறுப்பு உடையில் இன்னொரு உருவம் தன்னையே கவனித்துக் கொண்டு நிற்பதைக் கண்டு அச்சமும் ஆச்சரியமும் அடைந்தது.

திருமதி ஹரிகரனைத் தள்ளிவிட்டு ஓடிவந்த பிரசாத் கதவு திறக்க,

கமராவோடு நின்ற உருவம் கதவைத் திரும்பிப்பார்த்துவிட்டு மழைக் கோர்ட்டோடு நிற்கும் உருவத்தை பார்த்தது. அவன் அசையவில்லை.

கமராவோடு நின்ற உருவம் இடது புறமாய் நகர்ந்து ஓடத் தொடங்க, அவன் மறுபுறமாய் பின்வாங்கி நகர்ந்து ஹோலின் முன்பாக நின்ற பிரசாத்தின் காரை நோக்கி ஓடினான்.

கதவு திறந்து வெளியே ஓடிவந்த பிரசாத்தின் கண்ணில் கமராவோடு ஓடிய உருவம் கண்ணில்பட குரலை உயர்த்தி,

"டேய்! ஓடாதே. சுடுவேன்!"

என்றார் வெறுங்கையோடு நின்று கொண்டு.

எச்சரிக்கையை அலட்சியம்பண்ணி கமராவோடு ஓடி சுவர் ஏறிக்குதித்து அந்த ஊருவம் மறைய, பிரசாத் புல்வெளியில் குதித்து ஓடிப்போய், சுவர் விழிம்பின் வழியாக வெளியே எட்டிப்பார்த்தார். உருவம் மாயமாய் மறைந்துவிட்டது.

கைத்துப்பாக்கியை கொண்டு வந்திருக்கலாம். விட்டு வந்தது தப்பாகப் போயிற்று. கையாலாகாதவனாக நிற்க வேண்டியதாகி விட்டது.

பிரசாத்தின் இதயம் பயத்தில் துடித்த சத்தம் வெளியே கேட்கும்போல் இருந்தது. என்ன செய்ய உத்தேசம்? படத்தை வைத்து மிரட்டி பணம் பறிப்பதுதான் நோக்கமா? அப்படி எனில் ஆள் யாரென்று அறிந்து விடலாம். ஆனால் வேறு நோக்கம் இருந்தால்? கமராவோடு வந்து காத்திருந்து கச்சிதமாக என் கொலை முயற்சி கமராவில் வாங்கி.. யார் அவன்?..அவனா? அவளா? ஒரு வேளை..., பிரசாத் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தபடி தெருவையே எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, திருமதி ஹரிகரனின் நினைவு வர,

இந்நேரம் அவள் பொலிசுக்கு போன் பண்ணியிருந்தால் தன் கதி அதோ கதி என்று பதறியபடி வீடு நோக்கி திரும்பி ஓடினான்.

உள்ளே அமைதியாக இருந்தது. தப்பி ஓடியிருப்பாளோ? முன் ஹோலின் வலது மூலையில் இருந்த தொலைபேசிமீது பார்வை செலுத்தியவர் 'திடுக்' வாங்கினார்.

விரைந்துபோய் பார்த்தபோது தொலைபேசி வயர் அறுக்கப்பட்டுக் கிடப்பது தெரிந்தது.

நெஞ்சின் மையத்தில் 'திக்.திக்' அரங்கேற கால்கள் நடுங்கிக்கொண்டிருக்க,

எங்கோ ஒரு முனகல் சத்தம் கேட்டது.

யாரோ உள்ளே வந்திருக்கிறார்கள். 'ஓடு. தப்பி ஓடு' என்று மூளை எச்சரித்தது.

மறு நொடியில் கதவு ஒன்று அறைந்து மூடப்படும் சத்தம் கேட்டது. பின்புறத்தில் இருந்துதான் அந்த சத்தம் கேட்டிருக்க வேண்டும்.

'யார் ஓடுகிறார்கள்? அவள்தான் தப்பி ஓடுகிறாளா?' நினைத்து முடிக்கு முன்னர்,

மறுபடியும் முனகல் சத்தம். முதலில் இங்கிருந்து தப்பவேண்டும். அதற்கு முன்னர் யார் முனகுவது என்று பார்த்துவிடலாம்.

ஹோலின் இடது புறமாய் இருந்த அறைக்கதவு சற்று விரிந்திருக்க அங்கிருந்துதான் சத்தம் வந்தது.

மெல்ல அடியெடுத்து வைத்தார். பயத்தில் கால்கள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டன. தடுமாறி முன் சென்றார்.

'அறையின் உள்ளே யார் இருக்கக் கூடும்?' வெளியே நின்று கை நீட்டி கதவைத் தள்ளி அகலத் திறந்தார்.

கதவு திறக்க எதிரே கட்டில் தெரிந்தது. கட்டில் மேலே திருமதி ஹரிகரன் கால்களை நீட்டி விரித்துப் போட்டபடி, நெஞ்சின் மையத்தில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்க,

கொஞ்சம், கொஞ்சமாக உயிரின் துடிப்பு அடங்கிக்கொண்டிருந்தாள்.

பிரசாத் பயத்தில் உறைந்துபோய், விழிகள்கூட இமைக்க முடியாமல், உடலெங்கும் வியர்த்துக் கொண்டிருக்க–

இனியும் இங்கே நின்றால் கொலைப்பழி தோளில் விழும் என்று பயந்து தன் காரை நோக்கி ஓடினார்.

கார்க் கதவு திறந்து உள்ளே ஏற நினைத்தவர், கேற் பூட்டியிருக்குமே என்று நினைத்து, ஓடி கேற் விரிய வைத்து மூச்சுவாங்க ஓடி வந்து காரை உயிர்ப்பித்தார். பின்புறமாய் எடுத்து, வளைத்து நிமிர்த்திச் செல்ல, மழை நிலம் காரின் சக்கரப் பதிவுகளை வாங்கிக் குறித்துக் கொண்டது. ■

**ரா**கவனை வெளியே விருந்தினர் அறையில் காத்திருக்க வைத்துவிட்டு நிர்மலா மட்டும் பசுபதியை காண அவர் அறைக்குள் சென்றாள்.

"வா நிர்மலா" என்று அழைத்தபடியே நிர்மலாவின் மார்புகளை விழிகளால் விழுங்கினார் பசுபதி.

நீண்ட வட்டமான மேசையின் பின்னால் இருந்தவர் நாற்காலி விட்டு எழுந்து நிர்மலாவை நோக்கி வந்தார்.

வெளியே பிரியாவோடு காரில் வந்திறங்கிய குலாம்ஷா,

"பிரியா நீ காரிலேயே இரு."

"ஏன்?"

"வந்து சொல்கிறேன். உன் தந்தையின் ரூம் எங்கே என்று ஒரு குறிப்புச் சொல்லு அது போதும்."

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: சந்தனம் ராமநேசன்
வயது: 20
முகவரி: அல்கொல்ல எஸ்டேட் அல்கொல்ல குறூப் எட்டியாந்தோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் படித்தல்.



பெயர்: பஸீர் எம். ஜவாஹிர்
முகவரி: இலங்கை மின்சார சபை மின்பொறியியலாளர் அலுவலகம் வென்னப்புவ.
பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, மற்றும் வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: தி.ஜெயநந்தினி
வயது: 20
முகவரி: மகாவித்தியாலய வீதி தம்பிலுவில்-2
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: எம்.எஸ். மாஜிதா
வயது: 19
முகவரி: 357/7, ஏ.யுனிட் முள்ளிப்பொத்தானை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: செ.மரியசிலன்
வயது: 28
முகவரி: PUBLIC RELATION P.O. BOX-10-13001 SAFAT-KUWAIT.
பொ.போக்கு: வானொலி, கதைப் புத்தகம் மற்றும் வார இதழ்கள்.



பெயர்: ஏ.எல்.எம்.பாஹிம்
வயது: 23
முகவரி: P.C.A. PROJECT SAUDI OGER LTD. P.O.BOX-17061-JEDDAH-21484 SAUDI ARABIA.
பொ.போ: கதைப்புத்தகம் படித்தல்.

பெயர்: ஆர்.ஜெயகுமார்
முகவரி: AV.ED. ROD- 14 1007. LAYASANNE SWITZERLAND
பொ.போக்கு: ரீ.வி.பார்த்தல், பாடல்கள் கேட்டல்.

பெயர்: எம். முர்ஷீட்
வயது: 22
முகவரி: P.O.BOX-86411 RIYADH 11612 K.S.A.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், நீச்சல்.

பெயர்: சு.சுரேஷ்
வயது: 16
முகவரி: 18/7, எட்டம்பல வீதி, ஹெந்தளை, வத்தளை.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: ஏ.எல்.எம்.அன்சார்
வயது: 19
முகவரி: 77, மௌலானா றோட், நிந்தவூர்-05.
பொ.போ: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஏ.நிக்ஸன்
வயது: 23
முகவரி: 399 1/1, காலிவீதி, கொழும்பு-04
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: கே.எம்.ஆரிஸ்
வயது: 15
முகவரி: சின்ன சிப்பிக்குளம், நேரிய குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, சினிமா.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# குளிர் காயாத குரு

**-அஸ்வதி-**

**ம**கேஸ் எப்போதும் அப்படித்தான். பிடிவாதம் தான் அவனது மூலதனம். அதிக லாபம் கொடுக்காது விட்டாலும் அதிக நஷ்டமும் கொடுப்பதில்லை. தேவையின்றி தேவையற்ற இடங்களில் முதலிடுவதுமில்லை. தாய் பேசுவது எதுவுமே காதில் கேளாதவன் போல் ஒரு புத்தகத்தை மிகவும் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தான். அர்த்தமற்ற வார்த்தைகள் காதில் விழுந்தபோது தனக்குள் சிரித்துக் கொண்டான். அவளும் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தாள். பொறுமை கொஞ்சம் கொஞ்சமாக அவனிடமிருந்து விடைபெற்றது.

"அம்மா, கொஞ்சம் சும்மா இருக்கிறியே. படிக்கவிடாமல் படுத்திறபாடு. நான் ஒருக்கால் சொன்னது சொன்னது தான். முப்பது வருஷமா என்னை வளத்த உனக்கு அது இன்னும் விளங்கேல்லை எண்டால் நான் எங்கை மோதிறது?"

"உதைப் படிக்கிற நேரம் நாலு வீட்டுக்குப் போய் நாலு பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் குடுத்தால் வருமானம் கொஞ்சம் கூடவரும். அதை விட்டுட்டு கண்டறியாத நாவல் படிக்கிறாராம். நாளைக்கு பெண்சாதி, பிள்ளை குட்டி எண்டு வந்தால் உன்ரை கௌரவமே சோறு போடும்?"

"இண்டைக்கு விடிஞ்சதிலையிருந்து உதைத்தானே சொல்லிக் கொண்டிருக்கிறாய். நான் எத்தினை தரம் எத்தினை விதமாய்ச் சொல்லிப்போட்டன் என்னால முடியாதெண்டு. விளங்கிக் கொள்ளிறியள் இல்லையே."

"சரி, நீ வீடுகளுக்குத் தேடிப்போய்ப் படிப்பிக்கத் தேவையில்லை. எங்கையாவது ரியூட்டரியிலை போய்ப் படிப்பிக்கலாந்தானே!"

"எங்கடை பள்ளிக்கூடத்திலைப் படிக்கிற என்ரை பிள்ளையளுக்கு நான் சரியாத்தான் எல்லாம் சொல்லிக் குடுக்கிறன். எடுக்கிற சம்பளத்துக்காக மட்டுமில்லை, என்ரை திருப்திக்காகவும் தான் நான் வேலை செய்யிறன். உண்மையில ஆர்வமிருந்தா என்னைத் தேடி வரட்டும். நான் சொல்லிக்குடுக்கிறன். ஆனால் உன்ரை ஆசை நிறைவேறாது. ஏனென்டால் நான் காசவாங்கமாட்டன். அதைவிட்டுட்டு அம்பிபொழிபிறவன் மாதிரி வீடுவீடா போய் நான் படிப்பிக்க மாட்டன்."

"உன்னட்டைப் படிக்கிற பிள்ளையள் ரியூசனுக்கும் போகுதுகள் தானே..?. அப்ப நீ படிப்பிக்கிறதிலை......"

மகேஸ் குறுக்கிட்டான்.

"எந்தக் குறைபாடுமில்லை. ரியூட்டரியிலை படிக்கிறது ஒரு கௌரவமாப் போச்சு. அதோடை ரியூட்டரியள் வந்தாப் போலை பள்ளிக்கூடங்களிலை படிக்கிற நிலமை இப்ப இல்லை. 'நீங்கள் அங்கை வாருங்கோ வடிவாச்சொல்லித்தாறன்' எண்டு சொல்லிற வாத்திமார்தான் கூட. பிள்ளையளும் படிக்கிற ஆர்வத்திலைதான் ரியூஷனுக்கு வருதுகள் எண்டு சொல்லேலாது... வேறு சில பொழுதுபோக்குகள்...... எல்லாருமில்லை....."

கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் பக்கத்தைத் தவற விடாது முகம் குப்பற வைத்தான். கண்ணாடியை கழற்றி 'ஈசிசெயாருக்கு' கீழே வைத்தான்.

கண்ணாடியைக் கழற்றியபின் அவனுடைய தோற்றத்தில் பெரிய மாற்றம் தெரிந்தது. தடித்த பிறேம் போட்ட கண்ணாடிக்குப்பின் தெரிந்த அவனது முகத்தில் இருந்த அறிவு இப்போது இல்லாமற் போனது போல இருந்தது. இந்தக் கண்ணாடிகள் (சண்கிளாஸ் அல்ல) கொடுக்கும் பெரிய மனிதத் தன்மையை அல்லது 'இன்டர்லெக்சுவல் லுக்'கை தங்க ஆபரணங்களோ அழகிய உடைகளோ கூடக் கொடுப்பதில்லை.

தகப்பன் சேர்த்து வைத்திருந்த சொத்துக்கள் ஓரளவு கையிலிருந்தபோது மிகப்பெரிய கஷ்டம் எதுவும் படாது பட்டதாரியானான் மகேஸ். தனது கல்வியிலும் ஆசிரியத் தொழிலிலும் அதிக அக்கறையும் வைத்திருந்தான். கற்பித்தலை வெறும் ஜீவாதாரத் தொழிலாக மட்டும் நினையாது அதனைச் சமூகக் கடமையாகவும் கருதினான்.

சிறிது கண்மூடிப்படுத்திருந்தவன் அடுப்படியை நோக்கிப் போனான். அவன் மீதுள்ள கோபத்தை எல்லாம் தாய் தேங்காய் மீது காட்டிக்கொண்டிருந்தாள். தேங்காய் துருவும் சத்தம்கூட அவனைப் பேசுவதுபோல பட்டது. ஐஸ் வைப்பது தவிர வேறு வழியில்லை.

"விடம்மா, நான் திருவித்தாறன்."

"உனக்கேன் தேவையில்லாத வேலை? நீபோய் உன்ரை வேலையைப்பார்". அவளுடைய வார்த்தைகளில் காரம் இருந்தது. கண்ணும் கலங்கியிருந்தது.

இந்த அம்மாக்கள் எல்லாமே இப்படித்தான். கண்ணீராலும் பட்டினியாலும் காரியத்தைச் சாதித்துவிடுவார்கள். ஆனால் அவனுடைய பிடிவாதத்தின் முன் இவை நிலைப்பதில்லை.

**"வாத்தியாரை வீட்டுக்கு கூப்பிட்டு படிக்கிறதிலை ஒரு கௌரவம் இருக்கிறதாகவும் சிலர் நினைக்கினம்"**



"அம்மா, எந்தத் தொழிலாக இருந்தாலும் அது அதுக்கெண்டு தனியான கௌரவம் இருக்கு. புராண காலம் தொடங்கி நேற்று வரைக்கும் மாணவர் ஆசிரியரெட்டைப் போய்ப் படிச்சுத்தான் பழக்கம். ஆசிரியர் மாணவனைத் தேடிப்போனதாகச் சரித்திரமில்லை. வாத்தியாரை வீட்டுக்குக் கூப்பிட்டுப் படிக்கிறதிலை ஒரு கௌரவம் இருக்கிறதாகவும் சிலர் நினைக்கினம்.சில வாத்திமாரின்ரை வறுமையை தங்களுக்குக் கவசமாக்கி தாங்கள் பொருளாதார ரீதியா முன்னேறப் பாக்கினம் சிலர். இது சும்மா அடுப்படியிலை கதைச்சு முடிக்கக்கூடிய விசயமில்லை. கல்விமான்கள் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய பெரிய விசயம்."

தேங்காய் திருவுவதை நிறுத்திவிட்டு தாய் கேட்டாள்,

"சரியடா தம்பி, ஒரு ஆளைத் தேடி நாலைஞ்சு பேர் போறதைவிட நாலைஞ்சு பேரைத் தேடி ஓராள் போறதிலை நேரம், காலம், வீணான சிரமம் எல்லாம் மிச்சம் தானே?"

"நான் முதலிலை சொன்னமாதிரி இது நானும் நீயும் கதைச்சு முடியிற விசயமில்லை. சோம்பேறி வாத்திமார், ரியூட்டறிக்காரன், பொறுப்பற்ற பெற்றோர் ஒவ்வொருத்தரையும் தனித்தனி திருத்தி எடுக்கவேணும். நீங்கள் சொன்ன நேரம் காலம் எல்லாம் மற்றத்தொழிலுகளுக்குச் சரியா இருக்கும். ஆனால் வாத்தித் தொழிலுக்கெண்டு தனிக் கௌரவமிருக்கு."

அவனுடன் பேசி, வெல்ல முடியாதென்பது அவளுக்குத் தெரியும். அவன் பேசியது எதனையும் கருத்திற்கொள்ளாதவள் போல அவள் அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் சோற்றைக் கிளறினாள்.

அவளும் ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை நன்கு அறிந்தவள்தான். இருப்பினும், மாத இறுதி வறுமை அவளைப் பேச வைத்தது.

"சும்மாதானே நிற்கிறாய். கடையிலை போய் நூறுகிராம் புளிவாங்கியாவன்."

"என்னட்டைக் காசில்லை.."

"உதுக்குத்தான் சொன்னனான்.."

அடுப்படியை விட்டு மெல்ல வெளியேறினான் மகேஸ். முகம் குப்புறக் கிடந்த கே.ஏ.அப்பாசின் புத்தகமும் தடித்த பிரேம் போட்ட கண்ணாடியும் அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தன.

---

நிஜத்தோடு கலந்த கற்பனை

## சிறுகதை

# தாயகம் தந்த கோலம்

**றூத் சந்திரிக்கா**



**ஒ**ன்டாரியோவின் விசாலமான வீதிகளில் வழுக்கிப் பறந்தது அந்த லான்ஸர். உள்ளே பிரனிதாவும் சுரேனும் ஒருவித கவலையுடன் மௌனமாய் அமர்ந்திருந்தார்கள். றிச்மண்ட் ஹில் போய்விட்டு நேரே 'சிவாவுக்கு' போய் காலையுணவை முடித்துக்கொண்டார்கள். கிலோனி வீட்டுக்குப் புறப்பட்டார்கள். கிலோனி பிரனிதாவுடன் 'றிப்ளக்ஸ் பிறஸில்' வேலை பார்ப்பவள். பிறப்பால் கனேடியப் பெண். அவள் கணவன் ஒரு ஆங்கிலோ இந்தியன். விச் ரே மிகவும் திறமை வாய்ந்த வழக்கறிஞன். சுரேன் கனடாவுக்கு வந்து 'அகதி மனு' நிராகரிக்கப்பட்டுக் கிடந்த காலங்களில் 'இமிகிரேஷன் றிபியூஜியாக' ஏற்றுக்கொள்ள வழி செய்தது விச் ரே தான். 'புறொவின்ஷல் புறோகிராமின்' கீழ் அரச சலுகைகள் கிடைக்க வழி செய்ததும் விச் ரே தான். கிலோனியின் பிள்ளைகள் மிச்சிகனி லிருந்து விடுமுறைக்காக வந்திருந்தார்கள். ஏகப்பட்ட அமர்க்களமாய் இருந்தது அந்த வீடு. பிள்ளைகள் சுரேனைச் சூழ்ந்துகொண்டு கதையளந்தார்கள். சிக்காக்கோ, மில்வாக்கி, கிளீவ்லாந்து ஆகிய இடங்களுக்கு தாங்கள் பாடசாலையால் 'ற்றிப்'போன சம்பவத்தை சுவைபடச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'நாங்களும் சிறிலங்காவுக்கு வரப் போகிறோம்' என்று அடம்பிடித்தார்கள். 'இப்போது இல்லை. நாங்கள் மறுமுறை போகும்போது கூட்டிப் போகிறோம்' என்று சமாதானப்படுத்தினான் சுரேன்.

றொறண்டோ நகர வீதிகளில் அவர்களோடு சேர்ந்து 'ஷொப்பிங்' செய்து 'சிவிக் காடின் சென்டரில்' நடந்த அவர்கள் உறவினரின் 'என்கேஜ்மென்டு'க்குக்குப் போய்விட்டு திரும்பும்போது நள்ளிரவாகி விட்டது. காலடியில் எழுந்து எதிரில் குடியிருந்த சீக்கியர்களிடமும், அயலில் இருந்த பாகிஸ்தான் ஷல்மன்ஹான் குடும்பத்தினரிடமும் பயணம் சொல்லிவிட்டு சிறிது நேரம் இளைப்பாறினார்கள். மனதில் இனம் புரியாத வேதனைக் கீறல்கள். ஏழு ஆண்டுகளாக- அதாவது இலங்கையில் மனிதாபிமானம் மரணித்த ஜுலையோடு ஓடி வந்தவர்கள் இப்போது ஒரு புதிய ஜனனத்துக்காக தாயகம் திரும்புகிறார்கள் ஆறுமாத லீவில்.

▫▫▫

**வி**ச் ரேயிடமும் எல்லாவற்றையும் பொறுப்புக் கொடுத்து விட்டு கனமான பொதிகளுடன் வெளியேறிய போது கிலோனி சொன்னாள் 'இருவராய் போய் மூவராய் திரும்புங்கள்' சிரித்தவாறே பிரிந்தார்கள். அந்தத் தொண்ணூறின் ஏப்ரல் விடுமுறைக்காக ஏராளமான பயணிகள் சிறிலங்காவுக்குப் போக இருந்தார்கள். 'கஸ்டம்ஸ் ஸ்ரேச்'சில் வாய் பிறந்த பொதிகள் நகர்ந்தன.

'இமிகிறேஷன் சீல்' கொடுத்த பின்பு நிம்மதியாய் நகர்ந்தார்கள். தாயகம் பற்றிய அதீத கனவுகளுடன்.

▫▫▫

**எ**ல்லாமே தலைகீழாய் மாறிய அந்த இரண்டாம் கட்டப் போர்க் காலங்கள். 'ஏன் வந்தோம்' என்றிருந்தது இவருக்கும்.

நிறைமாதமாய்- ஊரூராய் உடுப்பு மூட்டைகளோடு திரிய வேண்டிய நிர்ப்பந்தம் பிரனிதாவுக்கு. எவ்வளவு கனவுகளோடு தன் பேறுகாலத்தை தாயகத்தில் கழிக்க வந்தாள். வந்து எத்தனை உபாதைகள் பட வேண்டியிருந்தது. மாதக் கணக்கில் ஓட்டமும் நடையுமாய் மனிதர்கள் அங்கலாய்த்தார்கள்.

அகப்பட்டவர்கள் அழிந்தார்கள். அப்போது தான் அவளுக்கு வலியெடுத்தது.

வண்டிலில் ஹொஸ்பிட்டலுக்கு கொண்டோடினார்கள்.

அந்த நேரத்தில் உக்கிரமாகத் தாக்கப் பட்டுக்கொண்டிருந்தது அந்தப் பிரதேசம். மதஸ்தலங்கள் அழிக்கப்பட்டதன் விளைவாக மனித உயிர்கள் பறிக்கப்பட்டன.

அப்போதுதான் சுரேன் அவசரமாய் ஆஸ்பத்திரிக்கு விரைந்தான். அதுவே அவன் இறுதி யாத்திரையானது.

சுரேன் எங்கு போனான் என்று யாருக்குமே தெரியவில்லை. அடையாள அட்டையும் எரிந்த நிலையில் மோ பைக்கும் கண்டெடுக்கப்பட்ட பின்பு எல்லாமே உறுதியானது. அவ்வேளை பிரனிதா அழகானதொரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். ஓருயிர் காணாமல் போக இன்னொரு உயிர் உதயம் கண்டது.

▫▫▫

**மு**ப்பது முடியுமுன்பே அவள் வாழ்வு கருகிப் போனது. இளம் வயதில் ஏராளமான சமுதாயக் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. மங்களமான காரியங்களுக்கு தள்ளி வைத்து வேடிக்கை பார்த்தது சமூகம்.

வயதான பெற்றாரும் போய்ச் சேர்ந்த பின் தனியனாய் நின்று அவள் படும்பாடு.- தாலியிழந்த பின் பல்வேறு சமுதாயக் குற்றச்சாட்டுக்களுக்கும் தாக்குப் பிடித்து அந்த இளந்தளிரை உருவாக்கப்படும் பாடுகள்- மனது வலித்தது. உள்ளே பட்ட காயங்கள் ஆறாத ரணங்களாயின.

சௌஜன் இப்போது நேஸரிக்குப் போகிறான். பற்றாக்குறையில் நாட்கள் நகர்கின்றன.

அந்த இனிதான காலங்களை அவள் நினைத்துப் பார்த்து அடிக்கடி அழுது கொள்கிறாள். ஏழு ஆண்டுகளாக அன்னிய நாட்டில் வாழ்ந்த போதும் அனுபவிக்காத கஷ்டங்களை தன் தாயகத்தில் அனுபவிக்கின்றாள். ஆங்கில நாடு செய்யாத கொடுமையையும், கோலத்தையும் தாய்நாடு தந்துவிட்டது.

"அம்மா கெதியா வெளிக்கிடுங்கோ. அப்பா இல்லாதவைக்கு இலவசமாய் கோழிக்குஞ்சும் தீனியும் கொடுக்கினமாம். சிவா அன்ரியும் போறா நீங்களும் போங்கோ" சௌஜன் இந்தப் பிஞ்சு வயதிலே இப்படிப் பேசப் பழக்கப்பட்டிருக்கிறான். பொங்கி வந்த அழுகையோடே வேகமாய் கிணற்றடி நோக்கி நடக்கிறாள் பிரனிதா.

---



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

**ஒருவன்:** ஓடிப்போயிடலாம்னு பார்க்கிறேன்.
**மற்றவன்:** உன் காதலி என்ன சொல்றா?
**ஒருவன்:** கட்டின வேட்டியோட கிளம்பி வாங்க...நான் வச்சு காலம் பூரா காப்பாத்துறேன்னு சொல்லுறா.

▫▫

**அவர்:** ஒப்பரேஷன் செய்துக்கப் போனீங்களே, ஏன் அலறி அடிச்சு ஓடி வாறீங்க?
**இவர்:** அந்த டாக்டர் வேட்டைப் பிரியராம், ஒப்பரேசன் ஃபெயிலியர் ஆயிட்டா, தலையை மட்டும் வெட்டி எடுத்து பாடம் பண்ணி, வரவேற்பு அறையில் மாட்டிக்கவான்னு கேட்கிறார்.

▫▫

- இந்த ஏரியாவில வழிப்பறி ஜாஸ்தியாமே?
- சரி ஜாக்கிரதையா, பார்த்துப் போ.
- சரி போறேன். கத்தியை நீட்டுறதுக் குள்ளே உன் பேர்ஸ், வோட்சை குடு.

▫▫

**காதலி:** ஒரு கையால இழுத்தே ரயிலை நிறுத்திட்டீங்களா! அது எப்படி? ஆச்சரியமா இருக்கே?
**காதலன்:** ஒரு கையால அபாயச் சங்கிலியைப் பிடிச்சு இழுத்தேன் ரயில் நின்னுடுச்சு.

▫▫

**அவர்:** எதுக்காக வேலையை திடீர்னு ராஜினாமா பண்ணுறீங்க?
**இவர்:** இப்பெல்லாம் ஒஃப்பீசுக்குப் போனால் சரியாவே தூக்கம் வரமாட்டேங்குது.

▫▫

**காதலன்:** உன் தங்கை எப்படி இருப்பாள்?
**காதலி:** (பெருமையாக) என்னை மாதிரியே தான் இருப்பாள்.
**காதலன்:** அப்போ உங்க வீட்டில் யாருமே அழகாக இருக்க மாட்டீங்களா?

▫▫

**எழுத்தாளர்:** நாலு பக்கத்தில் எழுதி முடிக்கணும்னு நினைச்ச 'பிடாரி' கதை மேலும் பத்து பக்கம் போகும்போல இருக்கு சார்.
**மற்றவர்:** அப்ப அது, 'அடங்கா பிடாரி' என்று நினைக்கிறேன்.

▫▫

**ஒருவர்:** கடிக்காத செருப்பாய் பாத்து குடுங்க.
**கடைக்காரர்:** உங்களுக்குப் புடிச்சதை எடுங்க. பல்லைப் புடுங்கித் தர்றேன்.

▫▫

**ஜோஸியர்:** சுக்கிரன் இரண்டாவது இடத்தில் இருக்கு.
**மற்றவர்:** எப்படியாவது முதலிடத்துக்குக் கொண்டுவர முடியுமா? அஞ்சு பத்து கூடுதலா தந்துடுறன்.

▫▫

**யாழ்வாசி:** எங்கள் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் கடவுள் மாதிரி.
**நண்பர்:** அத்தனை நல்லவரா?
**யாழ்வாசி:** இல்லை. ஒருநாள்கூட அவரை நாங்கள் கண்டதே கிடையாது.

▫▫



கல்யாணமாவதற்கு முன்தினம் மணமகன் தன் காதலியிடம் சொன்னான்....

"எனது கடந்த கால அனுபவங்கள் பற்றி உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்."

"நீங்கள்தான் இருவாரங்களுக்கு முன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்களே?"

இது காதலி.

அதற்கு மணமகன் சொன்ன பதில்: "உண்மைதான். ஆனால் அது இருவாரத்திற்கு முற்பட்ட விடயங்கள் தானே!"

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# வைகறை தேடும் வானங்கள்!

சிறுகதை

அம்தரவல்ல நிலாவாசன்

மிப்றா முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டிருந்தான். சோபையிழந்த அவன் முகமும் சூழ்நிலையின் சூன்யமும் பொறுக்கமுடியாத ஷப்ராஸ் கெஞ்சினான். "துக்கம் கொண்டாடினது போதும். சீக்கிரம் கிளம்பு."

அவனை உறுத்தலாகப் பார்த்தான் மிப்றா. தனக்குள்ள கவலையை அவன் எப்படிப் புரிந்துகொள்வான் என்று மனம் சொன்னது. ஷப்ராஸ் மீண்டும் கெஞ்சினான். "தாடியில்லாத தேவதாஸ் நான் உனக்குச் சொன்னது கேட்கவில்லையா? புறப்படு. ஜொக்கிங் போகலாம்."

"ஐயோ..." என்று தலையில் கை வைத்துக்கொண்ட மிப்றா ஷப்ராஸை வெறித்தவனாகச் சொன்னான். "என் பிரச்சினை உனக்குப் புரியாது."

"புரியும். நல்லாப் புரியும். அதுக்காக இப்படி முகத்த தொங்கப்போட்டுக்கிட்டா சரி வருமா? டேக் இட் ஈசி. இப்போ கிளம்பு."

மிப்றா கவலையில்லாமல் புன்னகைத்தான். அந்தப் புன்னகையின் அர்த்தம் புரிந்தது போல ஷப்ராஸ் சொன்னான். "காதலுக்கு நாடடங்கா விடுதலைபெற்ற சரித்திரங்கள் நிறைய இருக்குது. அதுக்காக நீ 'தேவதாஸ்' மாதிரி அலைய வேண்டாம். இப்படி தொங்குன முகம் தொங்கப் போட்டுக்கிறதும் கூடாது."

"ஷர்மிலா..." என்றான் மிப்றா. "மாத்துறைக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படுறது எனக்கும் பிடிக்கல்ல. அது என் கௌரவத்துக்கு சரின்னும் நினைக்கல்ல."

"நினைக்காதே" என்று வெறித்தான் ஷப்ராஸ். சொன்னான். "காதலித்தாய், முடிஞ்சு போச்சு. தொடர்ந்து நீ காதலிக்கனும்னு சொல்லித்தானா உன்ன அங்கு அனுப்புறாங்க. உன் பதவியிலும் திறமையிலும் நிர்வாகத்துக்கிருக்கிற நம்பிக்க இன்னும் போயிடல்ல. அதனாலதான் திரும்பவும் உன்ன 'ப்ரான்ச்' ட்ரெக்ட்டரா தெரிவு செஞ்சிருக்காங்க. 'லுக்...' மிப்றா, ஷர்மிலாவினதும் உனதும் நட்புக்கு உன் 'போண்ட' பச்சைக் கொடி காட்ட விரும்பல்ல. ஷர்மிலாவும் அது கற்பனைக் காதலா இருக்கட்டும்னு மனச மாத்திக்கிட்டா. இப்போ அவ அங்கே இருக்கிறான்னு நீ 'ட்ரான்ஸ்பர்' வேணாம்னா அர்த்தம் என்ன?"

"மனசுக்கு விலங்கு பூட்டிக்கிட்டு வாழ வெனாலும் முடியாது ஷப்ராஸ். முனிவன்கூட மேனகையின் மோக வலையில விழத்தான் செஞ்சான். நாங்க காதலித்த நாட்கள் எங்க எண்ணத்தில இருந்து மறைஞ்சு போய்ட்ற அளவுக்கு பழமையானதில்ல. நெருப்பும் பஞ்சும் பக்கம் பக்கமா இருந்தா பற்றும்னு உனக்குத் தெரியாது...?"

சொன்ன மிப்றா பெரிதாய் ஒரு பெருமூச்சுவிட. "இவர் பெரிய றோம்யோ.." என்றான் ஷப்ராஸ்.

மிப்றா ஒருமுறை அவனை தீர்க்கமாகப் பார்த்துச் சொன்னான். "என் மன நிலை என்னான்னு உனக்குப் புரியாது. பழைய காதல நினைத்துப் பார்ப்பதுகூட மலீஹாவுக்குச் செய்கிற புதுத் துரோகம்னு நினைக்கிறவன் நான்."

ஷப்ராஸ் அவனைப் புதிரோடு பார்த்தான். கவலைகளால் எப்போதும் கட்டுண்டு போகிறவன் மிப்றா... அடுத்தவர்களின் கவலைகளையாவது அள்ளிக்கொட்டிக் கொண்டு தீர்வு தேடுவதில் மிப்றா சளைத்தவன் அல்ல என்பது அவனுக்குத் தெரியும். அதற்காக அவனோடு சேர்ந்து அழவா முடியும்? பிரச்சனைகளைச் சமாளித்துப்போக ஷப்ராஸ் போன்ற ஏழைகளால் முடிகிற அளவு மிப்றா போன்ற பணக்காரர்களால் முடிவதில்லை. முயில் பட்ட முள்ளின்மீது கோபம் கொள்வதைப் போல் எதற்கெடுத்தாலும் 'சிம்பன் கொம்ப்ளக்' தேடிப் போகிற மிப்றா அவனுக்குப் புதிராகவே தெரிந்தான்.

"உன் காதல் கதை எனக்குப் புதிசா? ஜோக் வா, 'ரன்'பண்ணிக்கிட்டே பேசலாம்."



குயிக்...குயிக்..." என்ற ஷப்ராஸ் ஹங்கரில் இருந்த சேர்ட்டையும் டீசர்ட்டையும் எடுத்துப் போட்டுவிட்டு ஷூவைத் தேடினான்.

ஷப்ராஸின் நட்பை நினைத்து எப்போதும் பெருமைப்பட்டுக்கொள்கிற மிப்றா இப்போது அவன் பேச்சை சட்டை செய்யவில்லை. மனதுக்கு வெறுமை ஊட்டிய அந்த மடலை எடுத்து மீண்டும் படித்தான்.

"என்னுயிர் மிப்றா. இந்தத் திருமணம் சரிவரக்கூடாது" என்று இருவரும் சேர்ந்து பிரார்த்திப்போம். இதைத்தவிர வேறு வழியில்லை. என் இதயப் பாரத்தை உங்கள் மேல் போட்டுவிட்டு நான் நிம்மதியாக இருக்கப் போவதாக நீங்கள் நினைக்க வேண்டாம். நம் அன்புக்கு நம்மைச் சேர்த்து வைக்கும் சக்தி இருக்கிறது என்று மனப்பூர்வமாய் நம்புகிறேன்."

மலீஹா... மிப்றாவின் இதயமே அவள்தான். அவள் எழுதியிருந்த அந்த வார்த்தைகளைப் படிக்கும் ஒவ்வொரு முறையும் எங்கோ வலித்தது அவனுக்கு. ஷர்மிலா..., நான் உனக்காகவே பிறந்தவள்' என்றாள். கௌரவம் அந்தஸ்துப் போராட்டத்தில் அந்த நட்பு செத்துப்போனது. என்னுயிர் என்னுயிர் என அவனை உயிராக்கிக் கொண்ட மலீஹாவின் வாழ்க்கையினுள்ளும் போராட்டங்கள். வசதியான இடத்தில் அவளுக்குப் பிடித்த மாப்பிள்ளை கிடைத்திருக்கிறது. மிப்றாவுக்கு உயர்ந்த பதவியும் அந்தஸ்தும் இருந்தாலும் கல்வியில் அவளுக்கு இணையாய் இல்லை. அவள் உச்சத்தில் இருக்க அவன் கற்க இன்னும் மிச்சம் வைத்திருக்கிறான்.

மிப்றா ஒரு பெருமூச்சுக்கு பிரியாவிடை கொடுத்தான். பஞ்சு மெத்தை. பலவகையான ஆங்கில தமிழ் வாராந்தரிகள். அலுப்பு வந்தால் சலிக்காமல் வீடியோ பார்... என்று தேவையான உபகரங்கள் ரு இன்

> மிப்றா சாந்தமே உருவான மலீஹாவின் முகத்தை மனதுள் இருத்திப் பார்த்தான். அந்த வெகுளித்தனமான- தூய்மையான சிநேகிதத்தை ரசித்தான்.

வன், தூசு தட்டப்பட்டு பளிச்சென்றிருக்கும் ஐபிஎம் கணனி, ரக் நிறையப் புத்தகங்கள், கூப்பிடு தூரத்தில் பணியாள், இணைப்பு இல்லாத தொலைபேசி இத்தனை வசதிகளையும் செய்து கொடுத்து இன்னும் என்ன வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிற நிர்வாகத் தைப் புறக்கணித்து அவன் தனக்கு தரப்பட்டிருக்கிற மாற்றலை துஷ்பிரயோகம் செய்யப் போகிறான். அதற்குக் காரணம் தன் பழைய காதலி ஷர்மிளாவோடு ஒன்றிணைந்து வேலை செய்ய வேண்டி இருப்பது அல்ல. தன் புதிய காதலி மலீஹா வின் நினைவுகளுக்கு பங்கம் வரக்கூடாது என்பதுதான். அவனது காதல் கதை கேட்டு அனுதாபப்பட்ட அவள் பின்னர் அவனுக்காகத் தன்னையே அர்ப்பணித் திருக்கிறாள்.

மிப்றா ஷப்ராஸைத் தீர்க்கமாகப் பார்த்தான். "என்ன இன்றைக்கு நீ மட்டும் பேர்ன்னு சொல்லப் போறியா?" என்றான் ஷப்ராஸ் எரிச்சலோடு. மிப்றா அந்த மடலை அவனிடம் நீட்டினான். 'யாரு மலீஹாவா..." என்று கேட்டுக்கொண்டே மடலை வாங்கிய ஷப்ராஸ் "அடுத்தவர்கள் மடல் படிப்பது கூடாது, என்று தடை சொல்கிற மிப்றா இன்று ஏன் படி என்கிறான்.." என்று புரியாமல் வாசிக்க ஆரம்பித்தான். மிப்றா அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

படித்துக்கொண்டே போன ஷப்ராஸ் விஷயம் புரிந்து சீரியஸ்ஸானான். "இ...இதென்டா இது.." என்று தனக்கு நடந்த இழப்பைப் போல தடுமாறினான்.

"மலீஹா பொருத்தமான வரனோட வெளிநாட்டுக்குப்போகப் போறா. அதுவும் உயர் கல்விக்கு, நல்லா சந்தோஷப்படு, ஏப்ரல் பஸ்ட் டேய்'ல அவ பிறந்த நாள்'னு சொல்ல எல்லோர்க்கும் ஸ்வீட் வாங்கிக் கொடுத்தியே, அது மாதிரி இது அவ வெற்றி'ன்னு எதையாவது செய்.... ஃபூல்- இப்படி கன்னத்தில கை வெச்சுக் கிட்டிருந்தா எல்லாம் சரியாயிடுமா?" ஷப்ராஸ் கோபத்தில் கத்தினான்.

"ஷப்ராஸ் என்றான் மிப்றா மிருதுவாக. ஷப்ராஸ் அவனைக் கோபம் மாறாமல் பார்த்தான்.

"அவமேல என்ன குத்தம் இருக்கு. அதைத்தான் தெளிவா எழுதியிருக்காவே."

"எதை.." மிப்றாவின் அசட்டையை சட்டை செய்யாமல் கேட்டான் ஷப்ராஸ்.

"அவ வீட்டில என்னைப்பற்றி எடுத்துச் சொல்ற அளவு சாத்தியக்கூறுகள் இல்ல. அதுக்குக் காரணம் நான்தான்." மிப்றா மிருதுவாகவே பேசினான்.

அதுக்காக... ஷப்ராஸ் மயிர்கள் பிடுங்கப் பட்டு வருமாப்போல் தலையை கோதிக் கொண்டே சொன்னான். "யூ பூல், நீ ஒரு இழிச்சவாயன். போய் அந்த மாப்ளயப் பார், உன் காதலச் சொல், இல்லேன்னா நான் போறேன். மீறி வந்தாப் பாத்துக்கலாம்."

மிப்றா ஜீவனில்லாமல் சிரித்தான். "ஏன் ஷப்ராஸ் அந்த மாப்ளக்காரன் 'யுனிவேர்ஸிடி விரிவுரையாளன்'னு தெரியுது. என்ன விட மலீஹாவுக்கு பொருத்தமா இருக்கும்...இல்லையா?"

"நீயெல்லாம் ஒரு ஆம்பிள. எதுக்குத்தான் உனக்குக் காதல். ஏற்ற துணை, படிப்பு, அந்தஸ்துன்னு பார்த்தா அவ உன்னைக் காதலிச்சா? ஏண்டா இப்படி படிப்பறி வில்லாத பாமரன் மாதிரி நடந்துக்கிற?"

ஷப்ராஸால் சாந்தமடைய முடியவில்லை. அது தன்னை எதுவும் செய்து விடவில்லை, என்பதைப்போலக் கதைத்தான் மிப்றா.

"என் காதலி உயர் கல்விக்காக வெளிநாடு போகப்போறாள்னா அது எனக்குப் பெருமதான்."

"மிப்றா உன்னைத் திருத்தவே முடியாது. உன் காதலி உயர் கல்விக்காக வெளிநாடு போறான்னா அது எனக்கும் பெருமதான். ஏன்னா..." எதையோ சொல்லப்போன ஷப்ராஸை இடை மறித்தான் மிப்றா.

"நீ என்ன சொல்லப் பேறேன்னு எனக்குத் தெரியும். "நீ செஞ்ச உதவிகளுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன்னு சொல்லப் போற. ஷப்ராஸ், நான் உன் நன்றிக்கடன எதிர்பார்த்து எந்த உதவியும் செய்யல்ல. ஆனா உன் நட்பு எனக்கு வேணும்.

ஷப்ராஸ் மிப்றாவின் வாதம் புரிந்து சிரித்தான். பின்னர் கோபத்தில் சிலிர்த்தான்.

"உனக்கு அஸிஸ்டனா இருக்கிற அந்தஸ்த வெச்சு சொல்றேன். அவ விரும்பாததனால்தானே நீ 'அப்ரோட்' போற முயற்சிக்கு முற்றுப்புள்ளி வெச்ச. சரி, உழைக்கத் தெரிஞ்ச உனக்கு 'அப்ரோட்' டெல்லாம் அனாவசியம் தான். ஆனா காதலி கல்யாணம் கட்டி வெளிநாட்டுக்குப் போகப் போறான்னு சொல்ற அளவுக்கு உன்னால் சந்தோஷப்பட முடியுதா? உனக்கென்ன மூள கெட்டுப்போச்சா?"

மிப்றா சாந்தமே உருவான மலீஹாவின் முகத்தை மனதுள் இருத்திப் பார்த்தான். அந்தச் சிரிப்பில் தெரிகிற வெளிப்படையான வெகுளித்தனமான, தூய்மையான சிநேகத்தை இரசித்தான். இந்த ரசனைக்கு நான் அருகதையுள்ளவனா என்று வெதும்பினான். ஷப்ராஸைப் பார்த்து கவலை மிகைக்கச் சொன்னான்.

"ஷப்ராஸ், நான் அந்தஸ்தில ரொம்பக் குறைஞ்சு போய்ட்டேன்னுதான் நினைக் கிறேன். ஏன்னா...நான் போஸ்ட்'ல இருந்து விலகிட்டா என் கௌரவத்தில முக்கால்வாசி குறைஞ்சிடும். அதுக்காக நான் என் அந்தஸ்த விட்டுக்கொடுக்கவும் விரும்பல்ல. என் திறமை, செல்வாக்கு நியாயங்கள், எல்லாத்தையும் புரிந்துகொள்கிற நிர்வாகம் என் மன உணர்வுகளையும் புரிஞ்சிக்கணும். இல்லேன்னா, அந்த இடத்தில இருந்து போராட்றதில அர்த்தமில்ல.

இந்த நிலையில மலீஹா எந்த கௌரவத்தச் சொல்லி அவ பேமிலிக்கு என்ன அறிமுகம் செய்வா? என் பேமிலி அந்தஸ்த கௌரவத்த வெச்சு பீத்திக் கொள்ளலாம். ஆனா அது எந்த அளவில் நியாயம்னுதான் எனக்குப் புரியல்ல.

சொன்ன மிப்றாவின் முகத்தில் சோகம் மிஞ்சிப்போய் இருந்தது.

ஷப்ராஸ் சாந்தமாகிப் பேசினான். 'தலையால வாரதக் காலால உதைப் பாங்களாம். அதற்கு உதாரணம் நீதான். அவுஸ்திரேலியாவுக்கு 'ஸ்காலஷிப் தந்தப்போ என் நாடு எனக்குப் போதும்னு சொன்னாய்? அந்த நேரம் நீ அங்க போயிருந்தாய்னா என்றைக்குமே உன் காட்டில மழையாத்தான் இருந்திருக்கும். "பணமும் அந்தஸ்தும் எனக்கு விரோதின்னு நீ நினைச்சா உன்னால வாழ முடியாது மிப்றா.

ஆமா..." என்று வெடுக்கெனச் சொன்னான் மிப்றா. பட்டங்களை சுமந்துக்கிட்டு வந்திருப்பேன். மறக்காம ஒரு பணக்கார பேமிலிக்கு மருமகனா மாறியிருப்பேன். இதுதான் வாழ்க்கையா..... இத்தனையும் செய்ய படிப்பு அவசியமா? ஷப்ராஸ் புகழ் அந்தஸ்த்துன்னு அள்ளிக் கொட்டுற ஒரு வாழ்க்க சந்தோஷமா ஆயிடாது."

"அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைக்குத்தான் இப்போ நீ முகம் கொடுக்க வேண்டியிருக்கு."

"அதையெல்லாத்தையும் வாய்ப்பாக்கிக் கொள்றவன் நானில்ல."

"சரி....சரி... என்றான் ஷப்ராஸ். 'போஸ்ட்'ட ரிசைன் பண்ணிட்டு அப்புறம் என்ன செய்ய ஐடியா? நானும் ரிசைன் பண்ணிட்டு உன்னோட சேர்ந்துக்கிறேன். நீயில்லாத இடம் எனக்கும் வேணாம். ஆனா இனிமே அப்ரோட் போற ஐடியாவ விடு. ஏற்கனவே 'லெட்சங்களத் தூக்கிக்கிட்டு ஏஜன்ஸிக்காரன் சிங்கப்பூர் போய்ட்டான்னு நாங்க கொடுத்த கம்பளய்ன் தான் மிச்சமிருக்கு."

"ஷப்ராஸ் நாங்க லெட்சங்களத்தான் நஷ்டப்படுத்தினோம். வாழ்க்கையையே நஷ்டப்படுத்திக்கிட்டு வாழ்வதா சாவதான்னு அலையிறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. நான் பிஸ்னஸ்'ல இறங்கிட லாம்னு இருக்கேன்.

"திரும்பத் திரும்ப உன் வாதத்த மறுத்துப் பேச என்னால் முடியல்ல. சரிவிடு, உங்க பரம்பரைத் தொழில் பிஸ்னஸ்தானே? நீ செய்றதிலயும் தப்பில்ல. எதையும் சாதிக்கக்கூடிய தெம்பும் மன வலிமையும் உன்கிட்ட இருக்கு. ஆனா தொழிலில்லாதவன் தான் பிஸ்னஸ் செய்வான். உனக்கு பணம் அந்தஸ்து, கௌரவம் எல்லாம் தருகிற நல்ல பதவி இருக்கும்போது இப்படி ஒரு துறையில நுழையிறது மடத்தனமாத்தான் தெரியுது. அதுவும் பரவாயில்லை. "காதல் ஒரு காவியம்"னு நினைக்கிற நீ உன் காதல் விஷயத்தில இப்படி கலங்கிப் போறதுதான் எனக்குப் பிடிக்கல்ல.

மிப்றா ஷப்ராஸின் வார்த்தைகளைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தான். பின்னர் வார்த்தைகள் நழுவாமல் சொன்னான்.

"காதலுக்கு முன்னால எல்லாம் தூசுன்னு நான் எழுதிருக்கேன். வாழ்க்கைன்னு வரும்போது அதுவே ஒரு பெரிய வடிவம் எடுத்துப் பயமுறுத்துது. ஆனா அதுக்குப் பயந்து போகிறவன் நானில்ல. எப்போதும் பணத்தை எண்ணி எடுக்காமல் அள்ளி யெடுக்கும் குடும்பத்திடமிருந்து நான் பாடம் படிச்சிட்டேன். அதனால் என் முயற்சிகள் என்றைக்குமே சளைக்காது.

"காசுக்காக வாழ்க்கையை அடகு வைக்கிறவர்களுக்கும் அந்தஸ்துக்காக பணத்தை அறுவடை செய்கிறவர்களுக்கும் என் உழைப்பும் ஜீவியமும் பணமும் அந்தஸ்த்தும் பரம எதிரியாத்தான் மாறும். நாலுபேர் வாழ்க்கைய என்னால் தீர்மானிக்க முடியும்'னா அதுதான் என் வாழ்க்கை வெற்றின்னு நான் நினைப்பேன்.

சொல்லிக்கொண்டு போன மிப்றாவை இடை மறித்துக்கேட்டான் ஷப்ராஸ். "அப்போ உன் காதல் கானல்தானா?"

"இல்ல ஷப்ராஸ். படைத்தவன நம்புறவன் நான். என் காதலியக் கைப் பிடிக்க முயன்ற அளவு போராடுவேன். அது நிச்சயம்."

ஷப்ராஸ் மிப்றாவைக் கட்டியணைத்துக் கொண்டான்.

"குயிக் பண்ணு. 'ரன்' பண்ணிக்கிட்டே எலைட் போறோம். சந்தோஷமா டீ வித் கேக் சாப்பிடப் போறோம். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வந்தோஷம்னு டைரியில குறிச்சு வைக்கப் போறேன்.

"மிப்றா கண் நிறைந்த கனவோடு அவள் பற்றி என்றைக்கோ எழுதிய கவிதையை டைரி பிரித்து வாசித்தான்.

**"கவிக்கென்று பிறந்தவளோ**
**கண் நிறையக் கனவோ-அவள்**
**கண்ணாடி கூட ஓர்**
**கவிதையின் உருவோ.**

**தென்றல் போலவள்**
**தேடித் தழுவுவாள்-தினம்**
**மனதுக்குள் மலர்வாள்**
**மலீஹா...எனும் விழியாள்.**

(யாவும் கற்பனை)

# அழகே தமிழே அழகிய மொழியே எனதுயிரே.... ஆச்சும்....!

எம். சுரேஷ்

> "தமிழ் அரச கரும மொழியப்பா. உனக்கும் தெரியுமோ எண்டு கேட்டனான்."

நான் எப்பவுமே என்ர மொழிய விட்டுக்குடுக்க மாட்டன் கண்டியோ. 15 வருசமா லண்டனில இருந்துபோட்டு, கட்டுநாயக்கா எயார்போட்டில வந்து இறங்கின உடன சோமலிங்கத்தைப் பாத்து "மச்சான் எப்படிச் சுகம்" எண்டு தமிழ்லதான்றா கேட்டனான். ஏன் எனக்கு " கவ் ஆர் யூ" எண்டு கேக்கத் தெரியாதே? எதுக்கடா உந்த நடிப்பு?"

போன கிழமைகூட ஒரு புதினம் கண்டியோ? பாஸ்போட்டுக்கு எழுத்துக்கூட்டத் தெரியாமல் கனடா போன எங்கட சொந்தக்காரக் குஞ்சொண்டு திடீரெண்டு வீட்டை வந்து இங்கிலீசில பேசுது.... ஏன்ரா தெரியாமத்தான் கேக்கிறன், நாங்கள் தமிழ்க் குடும்பமெண்டு அவனுக்குத் தெரியும்தானே பிறகென்னத்துக்கடா இந்த லொள்ளுக்கடி.... எனக்கு வந்த ஆத்திரத்தில இங்கிலீசிலேயே திட்டிப் போட்டன். பிறகு மன்னிப்புக் கேட்டுப்போட்டு தமிழ்ல திட்டினனான் எண்டால் பாரன்.

ஏதோ அஞ்சாறு மொழிகள் தெரிஞ்சால் நல்லதுதான். அதுக்காக எங்கட மொழியை மறக்கச் சொல்லிக் கிடக்கே... அதுக்கு எங்கட சனம்... சிலது இருமினாலும் இங்கிலீசில தான்றா இருமுதுகள்!

அண்ணே! சரி அதை விடுங்கோ...

எப்பிடியடா விடுறது? தமிழை வளக்கோணுமெண்டு டிக்சநெறியை வித்துப்போட்டு, தமிழ் அகராதியை வாங்கிக்கொண்டு இங்க வந்தால் எல்லாமே தலைகீழாக் கிடக்குது....

யாரோ சொன்னாங்கள், இங்க தமிழ் அரசகரும மொழியாம். அண்டைக்கு ஒரு அஞ்சல் அலுவலகத்துக்குப் போய்...

"அண்ணே! நீங்கள் சாராயம் குடிப்பியலோ?"

"ஏண்டா அப்படிக் கேட்டனி?"



"இல்லை, அஞ்சல் அலுவலகத்துக்குப் போனனீங்கள் எண்டு சொன்னீங்கள்?"

"மூதேவி! அஞ்சல் அலுவலகம் எண்டால் Post office சடா!"

"ஓ! போஸ்ட் ஒபீசோ? நான் Bar எண்டு நினைச்சுப்போட்டன்."

"ம்...பாத்தியே பிறகு எப்பிடியடா தமிழ் வளரும்?....மிச்சத்தைப் பாத்தால்.... அஞ்சல் அலுவலகத்துக்குப் போய், தமிழ்ல முகவரி எழுதி ஒரு பதிவுத் தபால் அனுப்ப உள்ள குடுத்தனான். உள்ள இருந்தவன் சிங்களம் இல்லாட்டி ஆங்கிலத்தில முகவரி எழுதித் தரட்டாம். தமிழ்ல பதிவுத் தபால் அனுப்ப முடியாதாம்... எனக்கு வந்துதே கோபம்... "தமிழ் அரசகரும மொழியப்பா, உனக்குத் தெரியுமோ?" எண்டு கேட்டன். அதுக்கு அவன்,

"அர்ச கர்ம மொலி.....ஹி...ஹி...ஹி.." எண்டு சிரிக்கிறான். பிறகு என்னத்தைச் செய்யிறது?

மத்தவங்கள் தமிழை வளக்காட்டிலும், எங்கட சனமாவது தமிழை வளக் கோணுமடா... எல்லா இடங்களிலும் இயலுமான அளவு தமிழைப் பாவிக்கோணும் கண்டியோ... அதோட உள்நாட்டுக் கடிதங்களுக்கு நாங்கள் கட்டாயம் தமிழ்ல தான்றா முகவரி எழுதோணும்...எங்கட தமிழ் எண்டுறது.....

'ஆச்சும்.'

"சரி கேள். தமிழ் எண்டுறது..."

"ஆ...ஆச்சும்...ஹி...ஹி.."

"என்னடா தும்முதோ? சரி கேள் உந்தத் தமிழ் எண்டுறது..."

"ஆ...ஆச்சும், ஆச்சும்...ஹீ.....ஹீ."

"ஏன்றா கழுதை! நானும் சொல்லிக் கொண்டே இருக்கிறன் நீயும் தும்மிக்கொண்டே இருக்கிற.....சனியன்!"

"தமழெண்டு சொல்லேக்கை தும்மல் வாறதுக்கு நான் என்னண்ணே செய்யிறது?"

"அது எப்பிடியடா சரியா தமிழெண்டு சொல்லேக்கை பாத்து உனக்குத் தும்மல் வருது....கழுதை...."

(ஆத்திரத்தோடு கோணலிங்கம் துரத்த, கதை கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் தலைதெறிக்க ஓட ஆரம்பிக்கிறான்!)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்

## சினம்-ஒரு பொய்!

தருவது ரசிகன்

"சுந்தரி கோபமா?" என்று கேட்டான் கருணாகரன்.

பதில் சொல்லாமல் வலது கை வளையல்களை இடது கை விரல்களால் வருடிக்கொண்டிருந்தாள் சுந்தரி.

நீரோடையின் கரையில் இருந்த மாமரத்தின் நிழலில் இருவரும் நெருங்கியிருந்தபோதும், சுந்தரியின் முகம் கோபத்தில் செந்தாமரையாக இருந்தது.

ஒரு வாரகாலத்தில் ஊர் திரும்புவேன் என்று சொல்லிச் சென்றவன் ஒரு மாதம் கடந்து திரும்பி வந்தான்.

வந்துவிட்டான் என்றவுடன் மனதுக்குள் மகிழ்ச்சி மடை திறந்த வெள்ளமானது. அதை வெளியே காட்டாமல் மறைத்து மனது மௌனம் காக்க, சிவந்து செந்தாமரைபோல் மாறிய முகமும் கோப நாடகத்துக்கு ஒத்துழைத்தது.

கருணாகரனுக்கு மனம் பரபரத்தது. கரங்கள் துறுதுறுத்தன.

ஒரு மாதகால ஏக்கம். நடந்த காட்சிகள் நினைத்து, அறிந்த அனுபவம் மீண்டும் மீட்டிப்பார்த்து, இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று திட்டம் வகுத்து— அப்பப்பா— ஒருமாத பிரிவு எத்தனை கொடுமை!

அது போதாது என்று சுந்தரியும் தன் சித்திர இதழ்கள் திறந்து ஒரு சொல்கூட உதிர்க்காமல் அடம்பிடிக்கிறாள்.

நேர் எதிரே நேர்த்தியான நீரோடையில் மலர்ந்திருந்த தாமரையைப் பார்த்தான் கருணாகரன்.

தாமரையும் அழகாகத்தான் இருக்கிறது. இரசிக்கலாம். ஆனால் பேச முடியாது. அதுபோலத்தான் இவளும் இருக்கிறாள்.

சுந்தரி நீராடி உலர்ந்திருந்த கூந்தலில் செங்கழுநீர் பூவைச் சூடியிருந்தாள். அடர்ந்த காட்டுக்குள் சிக்கிக்கொண்டது போல தெரிந்தது.

'இந்தப் பூவை எடுத்து கூந்தலில் செருகியது போல, என் இதயத்தை எடுத்து தனக்குள் மறைத்துக்கொண்டுவிட்டாளே இவள்.'

"சுந்தரி பேசவே மாட்டாயா?"

குரல் கெஞ்சியது. வஞ்சியை கொஞ்சுவது போல குழைந்தது.

சுந்தரிக்கு கருணாகரனை நினைக்கப் பாவமாக இருந்தது. என்றாலும் 'ஒரு மாதம் என்னை தவிக்கவிட்டாரல்லவா..' வேண்டும். இதுவும் வேண்டும். படட்டும். நன்றாக வருத்தப்படட்டும்' என்று நினைத்துக்கொண்டு கடைக் கண்ணால் நோக்கினாள்.

கருணாகரன் தன் இடக்கரம் உயர்த்தி, அவள் முதுகுப் புறமாக கொண்டு சென்று வலது தோளில் தொட்டு மெல்ல அழுத்தினான்.

ஒரு மாதகாலமாக என்னவன் கரம் எங்கே? வலிய அந்த கரம் பட, பட்ட இடம் சிவக்குமே அந்த மாயம் எங்கே? என்று தேடிய தோள்கள் இப்போது அவன் கரம்பட சிலிர்த்துக்கொண்டன.

தொடப்பட உள்ளே ஊறிய சுகம் இதமாக இருந்தது. இன்னும் பலமாய் அழுத்தமாட்டானா என்று வெட்கமில்லாத மனது வினா எழுப்பி நின்றது.

எனினும் அக உணர்ச்சியை மறைத்துக் கொண்டு, கருணாகரனின் கரத்தை தன் வலதுகரத்தால் தட்டிவிட முயல்வதுபோல நடித்தாள். பலமாக தட்டிவிட்டால் கரம் விலகிவிடுமோ என்று பயப்படுபவள்போல மெல்லத் தட்டினாள்.

அவன் கரம் அசையவேயில்லை. மாறாக விரல்கள் ஏதோ விஷமம் செய்தன.

"தொட வேண்டாம்"

என்றாள். குரலில் உறுதி இல்லை. உச்சரிப்பில் உண்மையில்லை.

"ஏன்?"

ஒற்றைச் சொல் கேள்வி வீசிக் கொண்டு அவன் கன்னம் அருகே உதடுகளை



கொண்டுசெல்ல, அவன் மூச்சுக்காற்றுப் பட்டு சங்கடத்தால் தலை திருப்ப முயல, அதனால் இடதுகன்னம் அவன் உதடுகளில் பட்டுக்கொண்டது.

காட்டு மூங்கில்கள் உரசிக்கொள்கையில் பற்றிக்கொள்ளும் தீ போல இருவர் மனதிலும் நெருப்பு பிடித்துக்கொண்டது.

பற்றி எரியத் தொடங்கியது மனம் எனும் காடு.

தோளில் இருந்த கரம் பின்புறமாய் இறங்கி இதமாய் முதுகு வருடியது. மேல் உயர்ந்து கூந்தலுக்குள் விரல்கள் செலுத்தி பின் கழுத்தின் நரம்புகள் தொட்டுவருட சுந்தரி தனக்குள் இனிய நாதம் எழும் விந்தையில் சிந்தை இழந்தாள்.

கருணாகரனின் தோளில் தலை சரித்தாள் சுந்தரி.

உள்ளே எரிந்த தீயின் வெப்பம் நாடக வேஷத்தை கலைத்துப்போட்டது. உள்ளே மதம்பிடித்த யானையாய் ஆசை எழுந்து பிளிறியது. வெட்கம் என்னும் மான், யானை எழுவது கண்டு மருண்டு ஓடியது. உள்ளே எழுந்த யானை பசியோடு விருந்து தேடியது.

கருணாகரனின் இடது கரம் அவள் கழுத்து நரம்புகள் தொட்டுமீட்ட, வலது கரம் தன் தோளில் சரிந்தவளின் கன்னம் வருடியது.

சுந்தரியின் நாணம் பகைவனின் உடைந்துபோன வில்லாய் மாறியது. எனவே அதனால் கருணாகரனின் செயல் தடுக்க முடியாமல் போனது.

கன்னம் வருடி, காதுமடலின் பின்புறமாய் கூந்தலுக்குள் விரல் நுளைக்க, சுந்தரி விழிகள் மூடிக்கொண்டாள். மூடிய விழி மடல்களில் கருணாக்ரன் மென்மையாய் உதடு பதித்துவிட்டுக் கேட்டான்,

"சுந்தரி கோபம் போய்விட்டதா இப்போது?"

வேண்டுமென்றே பொய் சொன்னாள். விழிகள் திறக்காமல் இதழ்கள் விரித்து,

"இல்லை!"

ஒரே சொல்லாய் பதில் சொன்னாள்.

"ஏன் இல்லை?"

"அப்படித்தான்!"

"என்ன அப்படித்தான்?"

"கோபம்தான்!"

கருணாகரன் மெல்லச் சிரித்து அவள் முன் நெற்றியில் உதடு பதித்து, உதடுகளால் கோடு கிழிப்பதுபோல அவள் மெல்லிய நாசி மடலில் வந்து நிறுத்தி,

"இனி ஒருமுறை கோபம் என்ற சொல் உன் இதழ் வழியாக வருவது கூடாது"

என்றான். இப்போது சுந்தரி விழிகள் திறந்து அவன் விழிகளை சந்தித்து

"வந்தால் என்னவாம்?"

"அடுத்த தடவை சொல்வதற்கு உன் இதழ்கள் இருக்காது."

"என்ன செய்வீர்கள்?"

"சொல்லித்தான் பாரேன்!"

என்ன செய்யப் போகிறான் என்று அறியும் ஆவல் வந்தது. என்ன செய்வான் என்று தெரிந்தபோதும், அந்த செயல் விரும்பி மனம் துடித்தது.

"சொல்லிக்கொண்டே இருப்பேன்."

என்றாள்.

"எங்கே சொல்லித்தான் பாரேன்."

"கோபம்தான். கோபம்தான்."

வேகமாய் சொல்லிவிட்டு இதழ்களை தன் பட்டுக்கரங்களால் மூடிக்கொண்டாள்.

கருணாகரன் கரம்விலக்கினான். போராடுவதுபோல் நடித்து பொய்யாக எதிர்த்து, பட்டுக்கரம் விலக அனுமதித்தாள்.

கருணாகரனின் உதடுகள் கொள்ளையிடும் தொழிலில் குறியாக களத்தில் குதித்தன.

சுந்தரிக்கு தடுக்க வேண்டும் போலவும் இருந்தது.

தடுக்காதே! மறுக்காதே என்று அடம்பிடித்த மனது வென்றது.

காதலரைக் கண்டவுடன் கோபம் காட்டாத மனது, அவரைக் காணும்வரை பொய்யாகத்தானே சினம் வளர்த்தது? நாம் கோபப்படும்போது குழைந்து, ஊடலை கூடலால் துரத்த முயல்பவரை மனமும் நாடுகிறதே. இது என்ன விந்தையோ?

சுந்தரிக்கு அந்த நேரத்திலும் திருவள்ளுவர் வாக்கு நினைவில் வந்தது.

***"கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால்-***
***புலந்துணராய்***
***பொய்க்காய்வு காய்தி என் நெஞ்சு"***

குறள்- 1246-அதிகாரம்- 125

# சிந்தியா பதில்கள்

எனக்கு அடிக்கடி நித்திரை வருகிறது. இதை தவிர்ப்பதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

**கே.ஈஸ்வரன்-திருகோணமலை.**

தேவையானது- விளக்கெண்ணெய்.

அளவு:- விழியின் கொள் அளவுக்கு ஏற்ப.

□□

சார்ஜாவில் இந்தியா தோல்வி கண்ட காரணம் என்ன?

**எல்.ரமேஷ்குமார்-ஹப்புத்தளை.**

இந்திய அணியிடம் இல்லாத ஒன்று பாகிஸ்தானிடம் இருந்ததுதான் காரணம். அதுதான் உத்வேகம்.

□□

டியர் சிந்தியா! வாழ்க்கை என்பது எதுவரை? காதல் என்பது எதுவரை?

**சீசகுமார்-அப்புகஸ்தென்னை.**

வாழ்க்கை- கருவறையில் தொடங்கி கல்லறைவரை.

காதல்- உலகம் தோன்றியதில் இருந்து உலகம் உள்ளவரை.

□□

நெல்சன் மண்டேலாவின் வெற்றியின் இரகசியம் என்ன?

**இர்பானா நியாஸ்-மக்கொன.**

ஒரு இரகசியமும் இல்லை. கள்ள வாக்கு சமாச்சாரமும் அல்ல. அவர் நாவாக்கின் சுத்தமும், அவர் வழிநடத்திய மக்களின் சத்திய எழுச்சியுமே காரணங்கள்.

□□

நண்பர்களின் பிரிவை எவ்வாறு தாங்கிக்கொள்வது?

**ரெ.ஜீவா-திம்புல.**

கணக்குப் புத்தகத்தில் வரவு செலவு பதிவு கட்டாயம். வாழ்க்கை என்னும் புத்தகத்திலும் உறவுகளின் இணைவும் பிரிவும் நிச்சயம் இருக்கும். பிரியும்போது மீண்டும் சந்திப்போம் என்று நம்புங்கள். அது ஆறுதல் தரும்.

□□

பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடிய முதல் பாடல் என்ன? எந்த படத்திற்காக பாடினார்?

**செல்வி. ஜெயலக்சுமி-சின்னாவிலை.**

## பிரிவைத் தாங்குவது எப்படி?

'ஆயிரம் நிலவே வா.' படம்- அடிமைப் பெண். கதாநாயகன் - மக்கள் திலகம்.

□□

தங்களைப் பற்றி சில வரிகள் கூறுங்களேன்?

**திருமதி நிரஞ்சளா குலேந்திரன்- வவுனியா.**

தங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்ல முயன்று, ஓரளவு பதில் சொல்லவும் தெரியும் என்று என் கையாலேயே என் முதுகில் தட்டிக்கொண்டு...போதும் அல்லவா?

□□

சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சனை தீருமா?

**எஸ்.ஷாமிளா-அலவத்துகொட.**

ஆட்சிக்கு வந்த பின்னர் தீர்க்கலாம் சரிதான். அதற்கு முன் தீர்வு என்னவென்று சொல்லலாமே. சொல்கிறார்கள் இல்லை என்பதால், தீரும் என்று என்னால் சொல்லவும் முடியவில்லை.

□□

டியர் சிந்தியா! ஒரு ஆணிடம் இருக்கக்கூடாத பண்புகள் எவை?

**ஐ.எம்.ஹனீபா நிம்ஸாத்-மூதூர்.**

தான் ஒரு ஆண் என்ற உணர்வு இருக்கலாம். அது ஆதிக்க உணர்வாக இருக்கக்கூடாது. வீட்டிலே புலி வெளியே எலி என்று வாழவும் கூடாது.

□□

அன்பின் சிந்தியா! ஐ லவ் யூ சொன்னால் சில பெண்கள் ஏன் அறைய வருகின்றார்கள்?

**கே.நிமல்ராஜ்-கல்லடி.**

எத்தனை பேருக்கு சொன்னீர்கள் நிமல்ராஜ்? முதலில் ஐ லவ் யூ என்பீர். பின்னர் அலைய வைப்பீர் என்று அறிந்துதான் அறைய வருகிறார்களாக்கும்.

□□

டியர் சிந்தியா! தேசியக் கொள்கை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்?

**என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.**

தேசத்தின் கௌரவம் கொள்ளை போகாதவாறு அமைய வேண்டும்.

□□

வாழ்க்கை என்பது போர்க்களம் என்று கூறுகிறார்களே அதன் பொருள் என்ன?

**எஸ்.ரோமன் ஜேக்கப்-இறக்குவானை.**

எதை தவிர்க்க வேண்டும், எதை எதிர்க்க வேண்டும், எப்போது அடிக்கவேண்டும், எப்படி தடுக்க வேண்டும் என்பதெல்லாம் வாழ்க்கைக்கும் அவசியம் என்று நினைவூட்டத்தான்.

□□

நடிகை குஷ்பூ ஒரு திரைப்படம் முழுவதும் ஆண் வேசம் போட்டு நடித்தால் எப்படியிருக்கும்? ஹி...ஹி...ஹி.

**பா.நிஸ்கா-கொழும்பு-13.**

ஆங்காங்கே பொருத்தமில்லாத தன்மை தெரியும். ஹி.ஹி.ஹி.

□□

மனைவியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கணவரைப் பற்றி?

**எம்.ஹனீபா-முள்ளிப்பொத்தானை.**

பத்தினியர். பத்திரமான இடத்தில் இருப்பவர்.

□□

டியர் சிந்தியா! கடவுளோடு பேச வேண்டும். ஒரு வழி சொல்லுங்கள்?

**எஸ்.என்.சுந்தர்-மன்றாசி.**

மனம் ஒரு கோவில் என்றால் அங்கு கடவுளும் உள்ளார் அல்லவா? மனச்சாட்சியோடு பேசுங்கள்.

□□

# குறுக்கெழுத்துப் போட்டி இல—52

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | ■ | 3 |
| | | ■ | 4 | | 5 | |
| 6 | | | ■ | ■ | | |
| | | ■ | 7 | | | ■ |
| ■ | ■ | 8 | | ■ | | 9 |
| 10 | | | | | ■ | |
| 11 | | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

1. அந்தக்கால அரசர்களை அபாயத்திலிருந்து இது காப்பாற்றியிருக்கிறது.
4. இவர்களது உடமைகளுக்குப் பொதுவுடமை ஆட்சியில் இடமில்லை.
6. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு தாளம் போடும் சிலர் இதுதான் பிடிப்பதுண்டு.
7. போரின் உற்பத்தியில் அடக்கம்.
10. தற்காப்புக்கு உதவும்.
11. பிறக்கும்போது நிச்சயமான ஒன்று.
12. தழைத்து வாழ வேண்டும் என்று வாழ்த்துவது உண்டு.

### மேலிருந்து கீழ்

1. வாழ்க்கை அடங்குவது இங்கேதான்.
2. ஆண்களுக்குப் பொருந்தாது.
3. குளிர் வந்தால் உடல் தேடும்.
5. நீண்ட பயணத்தையும் இப்படிச் சொல்லலாம்.
7. சிலர் இதிலே அரிதான படங்களையும் சேகரித்து வைப்பதுண்டு.
8. இதுவும் ஆட்டுவிக்கும் (குழம்பி இருக்கிறது)
9. வீரர்களின் கண்களில் இது தெரிவதாக உவமை சொல்வார்கள்.

***இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 11.06.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:***

**குறுக்கெழுத்துப் போட்டி இல-52**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-50க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வை | 2 கா | சி | ■ | 3 சி | ற் | 4 பி |
| 5 ஞ | ய | ட் | ■ | ரி | ■ | ர |
| ரி | ம் | ■ | 6 தெ | ப் | ப | ம் |
| ய | ■ | 7 நோ | ன் | பு | ■ | மா |
| ம் | 8 மு | ■ | ற | ■ | 9 தூ | ■ |
| ■ | 10 கா | த | ல் | ப | ரி | சு |
| 11 அ | ம் | மை | ■ | 12 சை | கை | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.50இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி விஜயலட்சுமி கொழும்பு-06.
2. ஹரூசியா ஹாசீம் கலேவெல.
3. எல். வசந்தகுமார் திருகோணமலை.
4. சிவசாமி செல்வராஜ் பூண்டுலோயா.
5. ஏ. அன்ரன் கொழும்பு-09.
6. எஸ்.ஏ. மன்சூர் கல்பிட்டி.
7. வி. கந்தசாமி மட்டக்களப்பு.
8. மொகமட் இஸாக் ஹட்டன்.
9. ஆர். நிஸாம் நீர்கொழும்பு.
10. எம்.எவ். சியானா அக்குறணை-07.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (05.06.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 32

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அரக்குமாளிகை தீபற்றி எரிந்த போதிலும் அதன் அகோரத்தை இன்றும் நான் உணரக்கூடியதாக இருக்கிறது. அரசியலில் சதித்திட்டச் சதிராட்டங்கள் இடம் பெறுவது இயல்பே! எனினும் அரக்கு மாளிகைத் தீயானது பேரழிவின் வழிக்கே இட்டுச் செல்கிறது. அரசியல் சாணக்கியம் தனி மனித ஆசைகளுக்காகப் பயன்படுத்தப்படும்போது அனர்த்தமே விளையும் என்பதற்கு இது ஒரு சான்றாகும். கடந்த காலத்தின் சமாதியின் மீதுதான் எதிர்கால மாளிகை அமைகிறது. இந்த சூட்சுமத்தை தர்மனாகிய யுதிஷ்டிரனைத் தவிர ஏனைய நால்வரும் புரிந்துகொள்ள முடியாது.

-காட்சி தொடக்கம்-

வனத்தில் பாண்டவர்கள்.

**யுதிஷ்:** தம்பி! என்ன யோசனை...?

**பீமன்:** காரணம் தங்களுக்குத் தெரியாததல்லவே! அந்த சகுனியை அன்றே நான் அடித்து நொறுக்கியிருக்க வேண்டும்!

**யுதிஷ்:** பீமா! உன்னைப் போன்ற வீரனுக்கு அது அழகல்லவே!

**அர்ச்:** இந்த வீரர்கள் ஒளிந்தோடுவதில் அழகுண்டோ...?

**யுதிஷ்:** ஒளிந்தோடவில்லை அர்ச்சுனா! இராமபிரானின் வனவாசம் இராவணேசனின் அழிவுக்கு வழி கோலியது. நமக்கும் நாம் போகும் பாதையில் விலைமதிப்பற்ற பொக்கிஷம் காத்திருக்கலாம் அல்லவா...?

**நகுலன்:** அதற்காக எமது தாயகமான அஸ்தினாபுரத்தை இழந்து விடமுடியுமா அண்ணா?

**சகாதேவன்:** இல்லை! எமது தாயகம் அதுவல்ல... எம் அன்னையின் பாதமே எமது தாயகம்.

**பீமன்:** இருப்பினும் அஸ்தினாபுரத்துக்கு நாம் போகத்தான் வேண்டும் அம்மா...!

**குந்தி:** ஏன்...? எதற்காக....? கண்ணீரைத் தவிர அஸ்தினாபுரி நமக்கு வேறு எதனைத் தந்தது...? அந்நகரின் எல்லாக் கதவுகளும் எமக்கு மூடப்பட்டு விட்டன என்பதை அறிய மாட்டீர்களா? உங்கள் தாத்தா பீஷ்மர்-அவர் கொண்ட விரதத்தால் கட்டுண்டு கிடக்கிறார். விதுரரும் செயலிழந்து நிற்கிறார். ஏனையோர் துரியோதனனால் ஆட்டிப்படைக்கப்படுகின்றனர். உண்மையில் இந்த வனமே நமது தாயகம்போல் எனக்குத் தென்படுகிறது. உணவினையும் நிழலையும் தருகிறது. உங்கள் தந்தையுடன் நான் சிறிது காலம் இந்தக் கானகத்தில் வாழ்ந்தாலும் அதுவே எனது மகிழ்ச்சியான காலம். அதேபோல் இங்கேயே நாம் மகிழ்ச்சியுடன் வாழலாம். எனது மகனுக்கு உரிய அரசுரிமைக்குப் பதிலாக அரக்கு மாளிகையைத்தானே அந்த நாடு தந்தது....?

**அர்ச்:** தாங்கள் விரும்புவதால் நாங்கள் இங்கேயே தங்குவோம். இருப்பினும் ஒரு தடவையாவது அஸ்தினாபுரம் செல்ல வேண்டும் தாயே...! நாங்கள் பயந்து ஓடவில்லை- எமது தாயாரின் கோரிக்கைக்காகவே வனத்தில் வாழ விளைந்தோம் என்பதை அவர்களுக்குப் புலப்படுத்தியாக வேண்டும்.

**யுதிஷ்:** வருந்த வேண்டாம் தம்பி அர்ச்சுனா! என்றாவது ஒருநாள் நாம் அங்கு போகத்தான் போகிறோம். ஆனால் உடனடியாகவல்ல...!

**பீமன்:** ஏன் காலம் தாழ்த்த வேண்டுமோ...?

**யுதிஷ்:** துரோணாச்சாரியாரின் மாணவன் கேட்கும் கேள்வியா இது பீமா...? துரியோதனனையும் அவனது படைகளையும் ஒரே கையால் நசுக்கி அழிக்கும் பராக்கிரமசாலி நீ என்பதை அறிவேன். ஆனால் பிதாமகர் பீஷ்மர் தாத்தா, நமது குரு துரோணாச்சாரியார், குலகுரு கிருபாச்சாரியாரும்கூட எதிரணியில் நிற்பார்களே! நம் தாத்தாவை எதிர்த்து உன்னால் கதாயுதத்தை தூக்க முடியுமா? அர்ச்சுனன் தனது பிரதான குரு துரோணாச்சாரியாருக்கு எதிராக வில்லினைத் தூக்க முடியுமா? துருபதனை தேர்க்காலில் கட்டி கைதியாக இழுத்து வந்ததைப்போல் நமது பெரியப்பா திருதராட்டினரை கைது செய்ய முடியுமா? துரியோதனனையும் துச்சாதனனையும் கொன்றுவிட்டு நமது பெரியம்மாவின் கண்களில் நாம் எவ்வாறு விழிக்க முடியும்? ஆகவே கூடுமானவரை யுத்தத்தைத் தவிர்ப்போம்! துரியோதனனைவிட நம்மிடம் விசாலமான இதயம் உண்டு. மோதல்கள் தவிர்ந்த நிலையினை அவர்கள் ஏற்க வைக்க முயலுவோம். சகோதரர்கள் மோத நேரிட்டால் குடும்பத்தின் பெருமை சீரழிந்துபோய் விடுமல்லவா....?

**பீமன்:** உங்கள் கருத்து எனக்கு ஏற்புடையதாக வில்லை அண்ணா...! நாங்கள் கோழைகள்போல் கானகத்தில் திரிய அந்தக் கோழைகள் அரண்மனையில் உல்லாசமாக வாழவேண்டுமா?

பீமன் கோபத்துடன் வெளியேறுகிறான்.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை-

**சகுனி:** அங்கதேச அதிபதியே! உனது நண்பன் அஸ்தினாபுரி அரியணையில் ஏறுவதற்கு இனி எந்தத் தடங்கலும் இல்லை. இது ஆனந்தமாகக் களிக்கவேண்டிய நேரமல்லவா?

**கர்ண:** ஒருபுறம் மகிழ்ச்சி... மறுபுறம் வேதனை வாட்டுகிறது மாமா! வீரர்கள் வஞ்சனையால் வீழ்த்தப்படுவது ஏற்புடையதல்ல... அந்த ஐந்து வீரர்களுக்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன்.

**துரியோ:** கர்ணனின் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன் மாமா. பீமனை கதாயுதப் போரில் வீழ்த்த வேண்டும் என்ற என் ஆசை நிறைவேறவில்லை. அவனை வெல்வதில் எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை அஸ்தினாபுரத்தின் கிரீடம்கூட எனக்குத் தரப்போவதில்லை. கதாயுதத்தால் வென்றிருந்தால் என் மகிழ்ச்சி பன்மடங்காகவே இருக்கும்.

**சகுனி:** பாண்டவர்கள் யுத்தத்தில் மடியவில்லை என்று யார் சொன்னார்கள்? சூழ்ச்சியும் ஒருவகை யுத்த ஆயுதம்தான். தந்திரங்களை ஆயுதமாகப் பயன்படுத்த முடியாதவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். அவர்கள் யுத்தத்தின் போது தான் மாண்டார்கள். அவர்கள் வீரர்கள்தான். ஆனால் இந்த மாமாவின் வீரத்துக்கு அருகே நெருங்க அவர்களால் முடியாது.

-காட்சி மாற்றம்-

விதுரர் மாளிகை.

**விதுர:** வாருங்கள் மகாராஜா!

**திருத:** என்னை மகாராஜா என்று இப்போது அழைக்க வேண்டாம். உமது அண்ணன் என்ற நிலையில் தற்போதைய துயரம் கலந்த நெருக்கடியினை எதிர்கொள்ள மார்க்கம் தேடி வந்துள்ளேன்.

**விதுர:** துயரம் சூழ்ந்தாலும் தாங்கள் நிலை பிறழலாகாது. அஸ்தினாபுரத்தின் மாமன்னர் தாங்கள்.

**திருத:** இருக்கலாம்...! பெரியப்பா எப்போது வெளியே வருவார்?

**விதுர:** அவருடைய கண்ணீர் வற்றிய பின்னர்.

**திருத:** என்னுடைய கண்ணீரும் இன்னும் வற்றிவிடவில்லை. நமது பெரியப்பா அஸ்தினாபுரத்தின் உயிர்நாடி... ஆகவே அவரை வெளியே வரும்படி அழைத்துக்கொண்டு வா தம்பி...!

**விதுர:** பலதடவை அழைத்துப் பார்த்தேன். பயன் கிடைக்கவேயில்லை. தாங்கள் அழைத்தால் அவர் வரக்கூடும். வாருங்கள் அங்கே போகலாம்.

இருவரும் பீஷ்மரின் மாளிகைக்குச் செல்கின்றனர்.

**திருத:** பெரியப்பா...! பெரியப்பா! தாங்கள் இல்லாத அஸ்தினாபுரத்தில் சூரியோதயமுமில்லை, சந்திரோதயமுமில்லை.... வெளியே வாருங்கள் பெரியப்பா! விதுரா! என்னுடைய குரல் கேட்காது. உமக்கு உள்ளே போக முடியுமல்லவா? போய் அழைத்து வாரும்.

**விதுர:** பெரியப்பாவின் அரண்மனைக்குள் அவருடைய அனுமதியின்றி கனவுகளே நுழைய முடியாதே! தாங்கள் அரண்மனைக்குச் செல்லுங்கள். அவராக வரும்வரை காத்திருப்போம்!

இருவரும் செல்கின்றனர்.

**காலத்தின் குரல்:** விதுரர் மட்டும்தானா கங்கை மைந்தரின் அகத்துள் நுழைய முடியவில்லை? நானும் அதனுள் செல்ல முடியாத நிலையிலுள்ளேன். யமதர்மன் கூட அம்மாமனிதரின் ஆணையின்றி அவரை அணுக முடியாதே! அவர் வெளிவரும் வேளைக்காக வெகுநாள் காத்திருந்தேன். அமைதியான ஓரிரவு அவரின் கதவு திறந்தது. அவர் வெளியே வந்தார். தனது தாயைத் தரிசிக்க கங்கைக் கரை சென்று தனது கைகளில் நீரை அள்ளும்போது...

**கங்கை:** மகனே! அதற்கு அவசியமில்லை மகனே!

**பீஷ்ம:** என் அருமைப் பாண்டு புத்திரர்கள், அவர்களுக்காகச் செய்யப்படும் இறுதிக் கிரியைகளுக்கே அருகதையற்றவர்களா தாயே?

**கங்கை:** உயிருடனிருப்போருக்கு இறுதிக் கிரியைகள் அவசியமில்லையே மகனே....!

**பீஷ்ம:** அம்மா!...என்ன...? உயிருடனுள்ளனரா?

**கங்கை:** விதுரரிடம் போய்க் கேள்...!

விதுரர் அங்கு வருகிறார்.

**விதுர:** வணக்கம் பெரியப்பா...!

**பீஷ்ம:** பாண்டவர்கள் உயிருடன் இருக்கின்றனர் என்பதை என்னிடமே மறைத்துவிட்டாயே விதுரா!

**விதுர:** மன்னியுங்கள் பெரியப்பா...! இதுவும் ஒரு வகை இராஜதந்திரமே!

**பீஷ்ம:** இந்த பீஷ்மரைவிட இராஜதந்திரம் பெரிதாகிவிட்டதோ.....?

**விதுர:** சகுனியின் தூண்டுதலினால் துரியோதனன் பாண்டவர்களின் அழிவுக்குத் திட்டமிட்டான் என்ற உண்மையை அன்றே கூறியிருந்தால்... தாங்கள் என்ன செய்திருப்பீர்கள்...?

**பீஷ்ம:** என்ன..? என்ன சொல்லுகிறீர்..?

**விதுர:** அதுதான் உண்மை பெரியப்பா....!

**பீஷ்ம:** திருதராட்டினரிடம் இதன் அர்த்தத்தைக் கேட்கப் போகிறேன்...!

**விதுர:** மகாராஜாவுக்கு இந்தச் சதித்திட்டம் பற்றி தெரியாது என்றே எனக்குத் தோன்றுகிறது 'பெரியப்பா...!

**பீஷ்ம:** அப்போ துரியோதனனிடம் கேட்கிறேன்!

**விதுர:** பெரியப்பா! இதற்காகத்தான் நான் இந்த உண்மையினை மறைத்தேன்! இது நான் தங்களிடமிருந்து கற்ற இராஜதந்திரமே! உரிய சந்தர்ப்பம் வரும்போதுமட்டுமே சில விடயங்களில் வாய் திறக்க வேண்டும் என்று கற்பித்தவர் தாங்களல்லவா? முன்பே கூறியிருந்தால் துரியோதனனை தாங்கள் மடக்கியிருப்பீர்கள். சகுனியின் சூழ்ச்சிகளால் துரியோதனன் எவ்வளவு தூரம் பாண்டவர்களுக்கு தீங்கு விளைவிப்பான் என்பதனை அறிய முடியாமற் போய் விடும். இப்பொழுது எல்லாம் தெளிவாகி விட்டது. என்ன செய்யலாம் என்பதனை இனி நீங்களே தீர்மானியுங்கள்!

**பீஷ்ம:** பாண்டவர்கள் இப்போது எங்கே....?

**விதுர:** பாதுகாப்பாகவே இருக்கின்றார்கள்.

-காட்சி மாற்றம்-

கானகத்தில் குந்தியும் பாண்டவர்களும் மாறுவேடத்தில் செல்லும்போது குந்தி ஒரு மரத்தடியில் நின்று விடுகிறார்.

**குந்தி:** களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் ஆறி இருக்கலாம்!

**நகுலன்:** எனக்கும் களைப்புத்தான்...!

**சகாதேவன்:** சற்று நேரம் இளைப்பாறலாம் அண்ணா.

**யுதிஷ்:** அஸ்தினாபுரி எல்லையில் தான் தற்போது உள்ளோம். யாராவது கண்டுகொண்டால் நம்மை அடையாளம் கண்டுபிடித்து விடக்கூடும்.

**சகாதே:** அம்மாவால் நடக்க முடியவில்லையே அண்ணா...!

**பீமன்:** அம்மாவால் நடக்க முடியவில்லை. நகுலன் சகாதேவனாலும் முடியாது. ஆனால் நாம் மூன்று பேரும் நடக்கலாம் தானே!

**அர்ச்:** அம்மாவையும் தம்பிகள் இருவரையும் இந்தக் கானகத்தில் விட்டுச் சொல்ல வேண்டுமா? சின்னண்ணா! என்ன கூறுகிறீர்கள்?

**பீமன்:** அவர்களை விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று நான் கூறவில்லையே அர்ச்சுனா?

**யுதிஷ்:** உன் கூற்றுக்கு என்ன அர்த்தம் பீமா...?

**பீமன்:** நாம் நடப்போம்- அவர்கள் நடக்க வேண்டியதில்லை என்கிறேன்- அதாவது நான் என்ன சொல்கிறேன் என்பதை செய்கையில் காட்டுகிறேன் பாருங்கள்!

பீமன் தாய் குந்தியை தோளிலும் தம்பிமார் இருவரை கைகளிலும் சுமந்துகொண்டு நடக்கிறான்.



பின்னணிப்பாடல்

*வீரம் செறிந்தவன் வேளம் நிகர்ந்தவன்*
*வாயு தேவ னரு மைந்தனவன்*
*வரை நிகர் தோளினில் தாயினை ஏந்தினன்*
*தளர்விலாப் புயங்களில் தம்பிய ரேந்தினன்*

*கடுகி நடந்தனன் காற்றினைப் போலவன்*
*காலடித் தடவொலி கேட்ட விலங்குகள்*
*காட்டினில் கடும்புயல் கடுகியதெனவே*
*கடும் பயங்கொண் டோடி ஒளிந்தன.*

**குந்தி:** மகனே! கொஞ்சம் நிறுத்தப்பா...!

யுதிஷ்டிரர் தாயை கீழே இறக்கி விடுகிறார்.

**குந்தி:** மகனே! எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. தண்ணீர் கிடைக்குமா?

**பீமன்:** இதோ எடுத்து வருகிறேன் தாயே!

□□□

இரவாகிறது. பீமன் விழித்திருக்க ஏனையோர் படுத்திருக்கின்றனர். குந்தி விழித்து பீமனிடம் வருகிறார்.

**குந்தி:** விழித்திருக்கிறாயே மகனே! களைப்பாயிருப்பாய். சிறிது நேரம் படுத்திரு மகனே!

**பீமன்:** வேண்டியதில்லை அம்மா...! இந்த அடர்ந்த வனத்தில் என்ன நடக்குமோ தெரியாது. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் போய் படுங்கள்.

**குந்தி:** சரி! அர்ச்சுனன் சிறிது நேரம் விழித்திருக்கட்டும். நீ போய் ஓய்வெடு.

**பீமன்:** வேண்டாம் அம்மா! அவன் சின்னவனல்லவா? நான் மூத்தவனாக இருந்து கொண்டு இளையவனுக்கு துன்பம் தரலாமா?

**குந்தி:** அப்போ அண்ணன் யுதிஷ்டிரனை எழுப்பலாம்.

**பீமன்:** அண்ணனை தம்பியாகிய நான் வருத்துதலாகாது. அவர் ஓய்வெடுக்கட்டும். நீங்கள் போய்ப் படுத்திருங்கள்.

**குந்தி:** சரி! ஏதாவதானால் தம்பிமாரை எழுப்பிக்கொள்.

**பீமன்:** எந்த இடர் வந்தாலும் நான் தனியாகச் சமாளிப்பேன் அம்மா! சகோதரர்களுக்கு வீண் சிரமம் தரமாட்டேன்.

-காட்சி மாற்றம்-

வனத்தில் அரக்கர்களான இடும்பன், இடும்பி எனும் சகோதரர்கள் உரையாடுகின்றனர்.

**இடும்பன்:** இடும்பி...இடும்பி...!

- இவ்வாறு அழைத்தவண்ணம் இடும்பன் மனித உருவெடுக்கிறான். மரத்தில் ஏறுகிறான்.
- இடும்பி ஒரு மட் பாண்டத்தில் இடும்பனுக்கு சிறிதளவு உணவு கொடுக்கிறாள்.
- உணவினை வாயுள் போட்டபின் அதனை வெளியே வீசுகிறான்.

**இடும்பி:** என்னண்ணா இது....?

**இடும்ப:** இந்த உணவை உண்டால் பசி அதிகரிக்கிறதே! மனித இறைச்சி தின்று-மனித இரத்தம் குடித்து வெகு நாளாகிவிட்டது. அதோ ஆறு மாநிடர்கள் நம் எல்லைக்குள் வந்துள்ளனர். இடும்பி! போ...அவர்களில் ஐந்து பேரை கட்டி வைத்துவிட்டு ஆறாவதாக உள்ளவனைப் பிடித்து வா...!

**இடும்பி:** உனக்குத் தெரியும் நான் மாநிட இறைச்சி உண்பதில்லை என்று...!

**இடும்ப:** அரக்கர் குலத்தில் பிறந்த நீ மனித இறைச்சி உண்பதில்லை என்றால் நம் இனத்தவர்கள் உன் மூக்கை அரிந்து உன்னை இனத்திலிருந்து துரத்தி விடுவார்களே! உனது திருமணத்துக்கு இருநூறு மனிதர்களைக் கொன்று அவர்களுடைய இறைச்சியை வைத்து விருந்து படைக்கத் திட்டமிட்டுள்ளேன். நீ என்னடாவென்றால் குலத்தின் பெருமையைக் கெடுக்கப்பார்க்கிறாயே! சரி...நீ உண்ணாவிட்டால் பரவாயில்லை. எனக்குத் தேவை. போய்த் தயார் பண்ணு...

இடும்பி குடிசையிலிருந்து வெளியேறி இராட்சத உருவெடுக்கிறாள். நான்கு ஆண்களும் தாய் குந்தியும் படுத்திருப்பதையும் பார்த்த பின் விழித்திருக்கும் பீமன்மீது பார்வையைச் செலுத்துகிறாள். அவன் உருவில் மயங்கி மையலாகிறாள்.

பின்னணிப் பாடல்:

*திண்டோள் வீரன் வீமசேனனின்*
*வியத்தகு தோற்றம் கண்டாள் காரிகை*
*விண்ணவர் கோனை வேண்டித் தொழுதாள்*
*மண்ணில் மணாளனாய் வரித்திட நினைத்தே*

*அரக்கருவினை அகற்றிடத் துணிந்தாள்*
*அழகு மங்கையாய் வடிவினை அடைந்தே*
*கடுகி நடந்தாள் காவலன் பீமனை*
*கண்களால் கவர்ந்தே காதலில் தோய்ந்தாள்.*

பீமனுக்கு மாலையிடுவது போன்று இடும்பி கனவுகண்டு அழகான இளமங்கை உருவெடுக்கும் வேளையில் அண்ணன் இடும்பன் இடை மறிக்கிறான்.

**இடும்ப:** அந்தப் பெரிய உருவமுடையவனை நீ தனியாகவே புசித்துவிடலாம் என்று கருதிவிட்டாயா? இன்று உனது உணவுக்கு அவன் மட்டும் போதும்!

**இடும்பி:** அண்ணா! அவ்வாறு எதையும் கூறாதே! நான் அவர்மீது காதல் கொண்டு விட்டேன் அண்ணா!

**இடும்ப:** என்ன...? ஒரு மாநிடன் மீதா ஆசை வைத்தாய்? எமது குலத்தின் மதிப் பென்னாவது...? நம் குலத்தவர்கள் என்னைப் பார்த்து எள்ளி நகையாடுவார்களே!

**இடும்பி:** காதல் குலம் கோத்திரம் அறியாதது. அண்ணா...!

இடும்பன் இடும்பியைத் தாக்குவதற்கு முன்னேறும்போது ஏற்பட்ட சலசலப்பினால் குந்தி கண்விழிக்கிறாள்.

**பீமன்:** ஒரு பெண்ணைத் தாக்க முயலுகிறாயே! உனக்கு வெட்கமில்லையா...?

- இடும்பன் பலமாகச் சிரிக்கும் ஒலி கேட்டு பாண்டவர்கள் நால்வரும் விழித்துக் கொள்ளுகின்றனர்.
- பீமனுடன் இடும்பன் பொருதுகிறான்.
- பீமனை தனது கூரிய முட்கள் கொண்ட கதாயுதத்தால் இடும்பன் தாக்குகிறான்.
- இருவருக்கும் துவந்த யுத்தம் மூழ்கிறது.
- இடும்பனின் தாக்குதலால் பீமன் திணற நேர்ந்தால் இடும்பி தலையிட்டு பீமனைப் பாதுகாக்கிறாள்.
- குந்தியும் ஏனைய நால்வரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.
- அர்ச்சுனன் பீமனுக்கு உதவி புரிய முற்படும்போது யுதிஷ்டிரன் தடுக்கிறான்.

**யுதிஷ்:** பொறு அர்ச்சுனா! ஒருவருக்கு எதிராக இருவர் சேர்ந்து தாக்குவது யுத்த தர்மத்துக்கு ஏற்புடையதல்ல...!

- பீமன் இடும்பனின் இரு கைகளையும் ஒவ்வொன்றாகப் பெயர்த்தெறிகிறான்.
- இடும்பனின் மார்பின் மேல் ஏறியிருந்து அவனை பீமன் கொன்று விடுகிறான்.
- இடும்பன் இறந்ததைக் கண்டு கண்ணீர் வடிக்கும் இடும்பியிடம் பீமன் வருகிறான்.

**பீமன்:** தேவி! உன்னைத் தாக்க வந்தவனை நான் முடித்துவிட்டேன். இனி நீ அஞ்ச வேண்டாம்!

**இடும்பி:** இவன் வேறு யாருமல்ல! என் சொந்த அண்ணன் இடும்பன்.

- இடும்பி பீமனின் பாதங்களில் வீழ்கிறாள். குந்தியும் ஏனைய நால்வரும் அந்த இடத்துக்கு வருகின்றனர்.

**குந்தி:** மகனே பீமா! உனக்கொன்றும் ஆகவில்லையே!

**பீமன்:** இல்லை அம்மா...!

**இடும்பி:** தாயே! என்னை உங்கள் மருமகளாக ஏற்றுக்கொள்ளுங்கள்!

**சகாதேவன்:** அம்மா! நல்ல பொருத்தமான சோடி தான்!

**பீமன்:** அம்மா! நீங்கள் இவனுக்கு அதிக இடம் கொடுத்துக் கெடுத்துவிட்டீர்கள்!

**யுதிஷ்:** தம்பி உண்மையைத் தானே கூறினான் பீமா...!

**பீமன்:** என்ன அண்ணா! நீங்களுமா...?

**குந்தி:** பெண்ணே...! உன் பெயர் என்ன?

**இடும்பி:** இடும்பி எனது பெயர். இவன் என் அண்ணன் இடும்பன். எனக்கு ஒரேயொரு துணை என் அண்ணன்தான். அவன் போனபின் எனக்கு வேறு துணையில்லை தாயே! தாங்கள் தான் எனக்கு உதவ வேண்டும்.

**யுதிஷ்:** அம்மா! அந்த அரக்கன் தம்பி பீமனை தாக்கும் போதெல்லாம் இந்தப் பெண் தடுத்து உதவினாள். ஆகவே பீமன் இவளுக்குக் கடமைப்பட்டவன். ஆனால் நாம் பீமனை விட்டுவிட முடியாதே அம்மா...!

**இடும்பி:** உங்கள் மூத்த மகன் இவ்வாறு கூறியதால் நான் தங்கள் பாதத்திலேயே விழுந்து இறப்பதற்கு அனுமதியுங்கள் தாயே! நான் அரக்கர் குலத்தில் பிறந்தது எனது குற்றமில்லையே! என் நிலை தெரிந்தும் அவர்மீது காதல் கொள்வதை என்னால் தடுக்க முடியவில்லை. எனது அன்பினை பொய் என்று கண்டால் என்னை வெறுத்து ஒதுக்கி விடுங்கள் தாயே!

குந்தி ஆழ்ந்து சிந்தித்த பின்னர்...

**குந்தி:** இடும்பி! எனது மகன் பீமன் தன் வாழ்நாள் முழுவதும் உன்னுடன் வாழ முடியாதே!

**இடும்பி:** எனக்கு அது தெரியும் தாயே! எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததும் அவரை தங்களுடன் அனுப்பி விடுகிறேன் அம்மா!

**யுதிஷ்:** அம்மா! தங்கள் கட்டளை என்ன தாயே!

**குந்தி:** முறைப்படி என்ன செய்ய வேண்டும் மகனே!

**யுதிஷ்:** அன்னையின் கருத்துப்படி நடப்பதே சிறந்த நீதியும் நியாயமும் ஆகும் தாயே!

**இடும்பி:** தாயே! இந்த அபலைக்குத் தாங்களே கதி...என்னைக் காப்பது தங்கள் கடன்.

குந்தி இருவரையும் இணைத்து வைக்கிறார். இடும்பி குந்தியின் பாதங்களில் விழுந்து வணங்குகிறாள்.

**குந்தி:** இறைவன் உங்களுக்கு எல்லா நலனும் அருளுவானாக.

**சகாதே:** பீமண்ணா...! பாராட்டுக்கள் உரித்தாகட்டும்...!

**நகுல:** அண்ணா...! இளைய அண்ணனின் ஆனந்தத்தைப் பாருங்களேன்...! எனக்கு நிச்சயமாகத் தெரியும்... அண்ணி பீமண்ணாவின் உணவு விடயத்தில் எந்தக் குறையும் வைக்கவேமாட்டார்.

**இடும்பி:** ஏன் நீங்கள் எல்லோரும் வாருங்களேன்... வயிறார உணவு படைக்கிறேன்.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் சிரிக்கின்றனர்.

பின்னணிப் பாடல்:

*பெண்ணென்றாலும் ஆணென்றாலும்*
*பேதமேயில்லை அன்பின் நிலையதில்*
*ஒன்றா மிதயம் இணைந்தமையாலே*
*நன்றாய் வாழ்கென வாழ்த்தி அணைத்தாள்.*

*தாய்மையின் தரவும் வாய்மையின் வளமும்*
*வாய்த்தவள் குந்தி வனிதையர் குலமகள்.*
*மைந்தனாம் பீமன் மனையினில் விளக்கிட*
*பைந்தொடியாளினை பண்வுடன ணைத்தாள்.*

(இன்னும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.


அருள் ஜுவலர்ஸ்
436331
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# எழும் குரல்கள் - உயரும் கரங்கள்

தருவது லியோடெ






Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


மீசைபாடும் தேனாடு தமிழ் உலகுக்கு தந்த மணிகளில் ஒருவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. விபுலாநந்த அடிகளாரால் பெரும் புலவர் என்று பாராட்டப்பட்டவர் புலவர்மணி.




## புலவர்மணிக்கு இன்னுமொரு கௌரவம்

தேசிய வீரர் என்று முத்திரை வெளியிட்டு இன்று அரசு. அதற்காக முயன்ற அனைவரையும் பாராட்டுவோம். புலவர்மணியின் கனவுகள் நிறைவேற காரியமாற்றுவோருக்கு உதவுவோம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்றவற்றில் ஏறத்தாழ 10 கோடி முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

தமது தனித்துவத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய கலாசார நீரோட்டத்தில் கலந்து போய்விடக்கூடாது என்றும் அங்குள்ள முஸ்லிம்களுக்கிடையே இருந்து குரல்கள் எழுகின்றன. எனினும் தீவிரவாத இஸ்லாமிய இயக்கங்களை ஐரோப்பிய முஸ்லிம்கள் எதிர்க்கிறார்கள்.

## நேற்று-இன்று-நாளை

தினமுரசு வாரமலர்



வெள்ளையின ஒடுக்கு முறைக்கு முடிவுகட்ட கறுப்பின கெரில்லாக்கள் களம் கண்டனர். 11 வயதான சிறுவர்களும் கரத்தில் ஆயுதம் தாங்க வேண்டியிருந்தது. இது இரண்டு ஆண்டுகளுக்கு முன். இப்போது ஆயுதம் அவசியப்படாது. புத்தகமும் கையுமாக பள்ளிக்கூடம் செல்லலாம். சமாதானம் அற்புதமானது. நாளை பிரகாசமாக இருக்கும்.


வெள்ளையர்கள் பாதுகாப்புப்படை கறுப்பர்களுக்கு விரோதமாக இருந்தது. அதனால் கறுப்பர்கள் தமது பாதுகாப்பைத் தாமே பார்த்துக்கொண்டனர். எதிர்த்துப் போராடினார்கள்.

## எங்கெங்கு காணினும் உட்பகை
## கம்போடியாவில் அடியோடு முடிந்த பூசல்!



இது ஒரு சிறந்த புகைப்படம். கம்போடியா நாட்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபோது (1991) தீவிரவாதிகள் தலைமைக்கு கட்டுப்பட மறுத்தனர். விளக்கம் சொல்லி சமாளிக்க வந்த தலைவருக்கு கிடைத்த பரிசு இது. ஆயினும் அடிபட்டபோதும் அமைதி ஏற்படவே செய்தது. எதிர்ப்புக்களை கண்டு தயங்கினால் அமைதி ஒளித்துக்கொள்ளும்.

## ஆடுவோர் ஆடினால் என்ன தோன்றும்?



பொப் இசைப் பாடல்களுடன் துள்ளாட்டம் போட்டு அமெரிக்க ரசிகர்களின் பெரும் பகுதியினரைக் கொள்ளை கொண்ட இக்காரிகை 'கார்மென்' என்று அழைக்கப்படுகிறார். உண்மையில் இவர் ஆட்டம் காமதேவனுக்கே சவால் விடுவதாக அமையும். ஐரோப்பாவிலும் பெரும் கூட்டத்தை தன் வலைக்குள் போட்டுவிட்ட 'கார்மென்' அமெரிக்க சின்சினாட்டி நகரைச் சேர்ந்த பிரபல தாள வாத்திய நிபுணரின் மகளாவார். இப்போது பார்ப்போரை மனதில் தாளம் போட வைக்கிறார்.

## வெற்றிக்கிண்ணம் யாருக்கு?


உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. அமெரிக்காவின் 9 பிரதான நகரங்களில் போட்டிகள் நடக்கவுள்ளன. அந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் 3 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டன.

போட்டிகளுக்கான உத்தியோகபூர்வ அடையாள சின்னம்தான் இங்கே காணப்படுகிறது. விளம்பரங்களிலும் இதுவே பயன்படுத்தப்படுகிறது. விளம்பரங்கள் தான் கிளப்புகின்றன. வெற்றிக் கிண்ணம் பெற்று வியக்க வைப்பது யாரோ?




இறுதிப் போட்டி ஜூலை 17ல்

## "சொல்லுங்கள் நாங்கள் ஏதுமறியாதவர்கள் என்று"



மலை போல் குவிந்துள்ள இந்த மண்டை ஓடுகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டவையல்ல. சோமாலியாவில் போரின் கொடுமையால் விளைந்த மனம் பதைக்கும் மரணக் காட்சியே இது. (பட உதவி- றைகம ஸ்ரீகாந்தன்)